Registered as a News Paper in Sri Lanka


දිනමුරසු වාරමලර්


பக்கம் 24 ரூபா 20.00

மார் 01 - 07, 2007

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 702







## இலங்கைக்குள் ஆயுதக் குவிப்பும்: இந்தியாவின் கண்காணிப்பும்!




## வெடிக்கும் கிளைமோரும் வெளிவராத உத்திகளும்





## பிரிட்னியின் மொட்டை இரகசியம்!

## அப்பாவித் தமிழர்கள் மீது அரச படையினர் நடத்திய அடாவடித்தனம்!

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## கொடையும் பொருத்தமானவருக்கே

உலகத்தில் இரப்பவர்கள் தான் அதிகம் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. ஆயினும், இரவலர்கள் எத்தனை கோடி இருந்தாலும், ஈய்பவர் சிலரே. இந்த இரண்டிலும் வலுப்பெற்றிருப்பதும், போற்றுதற்குரியதுமாக இரப்பது எண்ணிக்கை அல்ல செயலின் தன்மையே. அதிலும், யாருக்கு ஈபவர்கள் போற்றுதற்குரியவர் என்பது கூட நன்மையையும், தீமையையும் தோற்றுவித்துவிடுகின்றன. கொடையானது நற்செயல்களுக்காகக் கொடுக்கப்படுமாயின் அவை இருபகுதியினருக்கும் நன்மையைத் தரும். உதாரணமாக ஆசிரியர், தவத்தோர், அடியார்களையும் குறிப்பிடலாம். ஆனால், கொலைஞர், திருடர், குடிகாரர் போன்றவருக்குக் கொடுக்கும் கொடையானது தீமையையே தரும். அதனால்தான் தெய்வத் திருமூலர் இப்படிக் கூறிவைத்தார் போலும்.

"ஆமாறு அறியான் அதிபஞ்ச பாதகன்
தோமாறும் ஈசர்க்குத் தூய குரவாக்கும்
காமதி விட்டோர்க்குத் தரல் தற்று கற்பிப்போன்
போமா நரகில் புகான் போதம் கற்கவே"

எல்லாம் இறைவன் செயலே என்று தெளிந்த மனதோடு இருக்காதவனுக்குக் கொடுப்பவனும், ஈகையைப் பெற்ற நாஸ்திகனும் கொடையின் தன்மையை அறியாதவனும் துன்பப்படுவார்கள் என்பதாம். கொடையும் நல்லவர்களுக்கு பொருத்தமானது என்று துணியலாமே.

-என்.எஸ். ராஜா, தம்பலகமம்



## ஆவியின் கனியாகிய அன்பு

"உன்னிடத்தில் நீ அன்புக்கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக" என்று வேதம் சொல்கிறது. (கலாத்தியர் - 6:14)

இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களாகிய நாம் எங்களையே கேட்கவேண்டிய கேள்வி; நாம் ஒருவரிலொருவர் அன்பு செலுத்துகிறோமா?

இந்தக் கேள்விக்கு பதிலைத் தேடினோமானால் இல்லை என்பதே பதிலாக வரும். ஏனென்றால்;

மாமிசத்திற்குரிய இச்சைகள், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமை, கொலைகள், வெறிகள் இப்படிப்பட்ட காரியங்களுக்கு நாங்கள் அடிமையாயிருப்பதனாலேயே மற்றவர்களுடன் அன்பு செலுத்தமுடிவதில்லை.

(எபேசியா-5:2) வசனம் சொல்கிறது "கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்தது போல, நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள்."

ஆகையால் நாம் தேவனுக்கு விரோதமான காரியங்களை விட்டுவிட்டு, ஆவிக்கேற்றபடி நடக்க கற்றுக்கொள்வோம். அதேபோல் ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவர் மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்க கடவோம்.

நாம் இப்படி நடந்து கொண்டால் ஆவியின் கனியாகிய அன்பு நம்மில் பூரண கிரியை செய்யும்.

-மேரி ஜேக்கப், கொழும்பு-06

## புறம் பேசாதீர்கள்!

உங்களுள் உள்ள விரோதத்தால் உங்களில் சிலர் சிலரைப் பற்றிப் புறம் பேசிக்கொள்ளாதீர்கள். (ஏனெனில்) மரணித்து (மையத்தாக கிடக்கின்ற உங்கள் சகோதரனின் இறைச்சியை உங்களில் யாரும் (பிய்த்து) தின்பதற்கு விரும்புவீர்களா? (நீங்கள் புறம் பேசுவதும் இதுபோன்றதாகும்)

-அல்குர்ஆன்


பிறரின் குறையை நாவினால் பேசுவது எப்படி ஆகாதோ, அதுபோலவே அவரின் குறையை அகத்தில் வைப்பதும் ஆகாது. அதுபோன்ற அக்குறையைக் கண்ணால் உற்று நோக்குவதும், காதால் கேட்பதும் (பிறருக்குக்) கையால் சுட்டிக்காட்டுவதும் சமிக்ஞை செய்வதும், எழுதிக்காட்டுவதும் ஆகாது. 'ராமாகும்'.

எந்த விஷயமும் தெளிவில்லாதபடி; புரியாதபடி - உங்கள் உள்ளத்தில் உதித்தால் அது ஷைத்தானின் ஏற்பாடாகும். அதை நீங்கள் நம்பிவிட வேண்டாம் என நபி (ஸல்) நவின்றார்கள்.

புறம் என்பது நாவினால் மட்டும் உண்டாவதில்லை. அது கண்ணாலும், கையாலும், காதாலும் சமிக்ஞையாலும், மனத்தாலும், எழுத்தாலும் கூட ஏற்படும். இப்படி உண்டாகும் இவையாவுமே 'ராமாகும்'.

-முஹம்மது ஹஸனி, கல்முனை - 07

# கவிதைப் போட்டி இல.699



பாராட்டுக்குரியது

## அடிமை விலங்கு!

கட்டுக் கணக்காய்
கைகளில் பணமிருந்தும்
என்ன பயன்?
அடிமை விலங்கை
அகற்றாமல்!

-முஸ்னா றஷிகா,
கல்முனை - 07

## கைநழுவல்!

பசி நோக்காது
கண் துஞ்சாது
மெய் வருத்தம் பாராது
கருமமே கண்ணாயிருந்து
களவாடப்பட்ட
கத்தை நோட்டுக்கள்
கைது செய்யப்பட்டதால்
கை நழுவிவிட்டதே!

- க. கமால்தீன்,
ஏறாவூர் - 3.

# கவிதைப் போட்டி இல.702



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல்,
தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 06.03.2007.

கவிதைப் போட்டி இல.702
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## காசிச்சாவி!

கையிலுள்ள
விலங்கினைக்
கழற்றி வீச
பூட்டுக் கைகளில் - பண
நோட்டுக்கள்
கை லஞ்சமெனும்
காசிச்
சாவியிது!

- பாண்டியூர் பொன்.
நவநீதன், கல்முனை.

## பிணைபோதல்!

பயங்கரவாதத்துக்கு
பிணைபோன
பாதுகாப்புப் படைவீரர்
கைலஞ்சமாகப் பெற்ற
பெருந்தொகைப் பணத்துடன்
கையும் களவுமாகப் பிடிபட்டு
கைது செய்யப்பட்டாரோ!

- க. கமால்தீன்,
திருகோணமலை.

## இலஞ்சம்

நீதியானது
நிதிக்குக் கட்டுப்பட்டால்
நேர்மையானவர்களை
நம்பிக்கைக்குரியவர்களை
நானிலம் காண்பது
எப்போது?

- சஸ்னா அப்வான்,
திக்குவல்லை.

## விசித்திர மனிதன்!

காவல் துறையினருக்கு
கண்ணில் மண்ணைத் தூவி
விலங்குடன் திருடும்
விசித்திர மனிதன்.

- எம். சி. கலீல்,
கல்முனை - 05.

## விலங்கு!

எண்ணிப் பார்த்த கை
இன்பம் கொண்டதே! - கை
விலங்கு வந்ததென - மனம்
துன்பம் கொண்டதே!

- எம். ராமமூர்த்தி,
வெலிமடை.

## யாரை ஏமாற்ற!

அவசியப் பொருட்களின்
விலைகளனைத்தையும்
ஆகாய உச்சத்திற்கே
உயர்த்தியெம்
செலவுக் கைகளுக்கு
விலங்கிட்ட பின்
கத்தை கத்தையாக
காசைக் கொடுப்பது
யாரை ஏமாற்ற?

- அ. சந்தியாகோ,
கண்டி.

## புரியவில்லை!

எம்.பி.மார் எண்ணிக்கையில்
பெருகியதால்
என்னை விடுவிக்க இலஞ்சம்
எவருக்குக் கொடுப்பதென
எனக்குப் புரியவில்லை!

- சீ. தங்கவடிவேல்,
மட்டக்களப்பு.





# உங்கள் பக்கம்

## இஷ்டப்படி நடக்கும் தனியார் பேருந்துச்சேவை!

தனியார் பஸ் பயணிகளுக்கு நடத்துநர்கள் டிக்கட் வழங்க வேண்டுமென்பது கட்டாயப்படுத்தப்பட்டு, மாதங்கள் பல கடந்து விட்டன. இருந்த போதிலும் பெருமளவிலான தனியார் பஸ்களில் பயணிகளுக்கு டிக்கட் வழங்கப்படுவதில்லை. டிக்கட் வழங்காத நடத்துநர்களும் டிக்கட் பெறாத பயணிகளும் திடீர் பரிசோதனைகளின் போது சிக்கினால் தண்டப்பணம் செலுத்த வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. ஒரு சில தடவைகள் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு பயணிகளும் நடத்துநர்களும் தண்டிக்கப்பட்ட சம்பவங்களும் இடம் பெற்றிருக்கின்றன. இருந்தாலும் இந்த நடைமுறையை, சாத்தியமற்றவையென்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் கண்டித்திருந்தது. இதனால் தானோ என்னவோ பெரும்பாலான தனியார் பஸ்களில் டிக்கட் வழங்கப்படுவதில்லை. அதுமட்டுமல்ல, குறிப்பிட்ட தொகைக்கு மேல் பயணிகளை ஏற்றினால் தண்டப்பணம் அறவிடப்படுமென்றும், பஸ்தரிப்பு நிலையங்களில் நீண்ட நேரத்திற்கு பஸ்களை நிறுத்திவைக்கக் கூடாதென்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஏறுக்குமாறாக இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெற்ற வண்ணமே இருக்கின்றன. இது குறித்து போக்குவரத்து சபையும் அதன் அதிகாரிகளும் அக்கறை செலுத்தி நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதே பயணிகளின் கோரிக்கையாகும்.

-பயணிகளின் சார்பாக:-
எஸ்.ராம், கோதமிபுர.

# வாசகர் சாலை

## மணம் பரப்பும் வாரமலர்

'சதாம் சிறந்த மனிதர்' என்ற தலைப்பில் சதாம் உசேனுக்கு பல வருடங்களாக சமையல்காரராகப் பணிபுரிந்த இந்தியாவைச் சேர்ந்த காதர் மொய்தீன் கூறிய விபரங்களைக் கேட்டு வியப்படைந்தேன்.

தினமுரசின் 700ஆவது இதழ் முழுவதுமே ஸ்பெஷல் தான் என சிந்தியாவின் பதில் மூலம் முன்கூட்டியே அறிந்து கொண்டோம்.

தினமுரசு வாரமலர் இன்னும் பல நூறு இதழ்களை விரித்து மணம் பரப்ப வேண்டுமென வாழ்த்துகிறேன்.

-முஹம்மது ஹஸனி,
கல்முனை - 07

## பொய்யா மொழி நீ!

பொய்மொழி புகலா முரசே நீ கூறும்
வாய்மைகள் எம் நெஞ்சில் நிலைத்திருக்கும்
வீறு கொண்டெழும் நெஞ்சங்களுக்கும் உன்
ஆறுதல் மொழிகள் துணை நிற்கும். வாழ்க நின்
தொண்டு வளர்க நீ மென்மேலும்.

-என்.எஸ்.ராஜா, திருமலை.

## 'தேசன்' எமது நேசன்

தினமுரசு வாசகர்களின் குதூகலக் கோரிக்கை சிரிப்பு. இந்த சிரிப்பை முரசு தன் 698ஆவது இதழில் 'போவோம் ரசிப்போம்' என்ற பகுதி மூலம் இதனை வகை வகையாய் தந்து வதனம் மலர வைத்த தேசன் எமது நேசன்.

- எம்.சி.கலீல்,
கல்முனை - 05.

## வீர முரசு

கட்சி பேதமின்றி யாவரையும்
கடைந்தெடுக்கும் முரசே
நீ தினமும் ஒரு முரசாக
வருவாயா? தினமுரசே.

உனைப் பிரிந்த மூன்று
வருடமும் முப்பது வருடம்
போல் இருந்தது
உனை தீண்டியதும்
என் மனக் கவலையும்
அறுந்தது
நீ என்றென்றும் வீர
முரசாக வலம் வர
என் இதயம் நிறைந்த
வாழ்த்துக்கள்.

-அ.ர.மு.இக்பால்,
நிவித்திகல.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# மட்டக்களப்பில் வானூர்தி மீதான தாக்குதலுக்கு வெளிநாட்டுத் தூதுவர்கள் கடும் கண்டனம்

கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியேற்றுவது உட்பட பல்வேறு மனிதாபிமான, புனர்வாழ்வுத் திட்டங்கள் பற்றி ஆராய்வதற்கென வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவையும் ஏற்றிச் சென்ற ஹெலிகொப்டர் மீது புலிகள் இயக்கம் நடத்திய தாக்குதலை இராஜ தந்திரிகள் கண்டித்துள்ளனர். மட்டக்களப்பு வெபர் மைதானத்தில், இராஜதந்திரிகளை ஏற்றிச் சென்ற ஹெலிகொப்டர்கள் கடந்த 27ஆம் திகதி காலை 8.20 மணியளவில் தரையிறங்கியபோது வவுணதீவிலிருந்து புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்தினர். அமெரிக்கத் தூதுவர் ரொபட் ஓ பிளேக், இத்தாலியத் தூதுவர் சியோ மரியானோ மற்றும் ஜேர்மன் தூதுவர் ஆகியோர் வெபர் மைதானத்தில் தரையிறங்கும் போது மோட்டார் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. தூதுவர்களுக்கு சிறு காயங்கள் தான் ஏற்பட்டிருக்கின்றன. இத்தாலியத் தூதுவரின் தலையில் கடுமையான காயம் ஏற்பட்டதாலும் இரும்புத் துகள்கள் அவரின் தலைக்குள் புகுந்திருந்தாலும் உடனடி யாகவே அவர் கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். படை யினர், மாணவி ஒருவர் உட்பட சுமார் 10ற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் என்றும் தக வல்கள் தெரிவித்தன.

வாகரை, வெருகல், திருமலை போன்ற இடங்களில் இருந்து 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 70 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் தஞ்சமடைந்துள்ளனர். இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் இந்த மக்களுக்கு அரசாங்கமும், தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களும் ஓரளவிற்கு உதவி செய்து வருகின்றன. இருந்தாலும் இந்த மக்கள் அனுபவித்து வரும் துன்ப, துயரங்கள் சொல்லுந் தரமன்று. ஏற்கனவே திட்டமிட்டபடி இராஜதந்திரிகளை அழைத்து வந்து நிலைமைகளை எடுத்துக் காட்டி அகதி வாழ்வு நடாத்தும் தமிழ் மக்களுக்கு வாழ்வாதாரங்களை வழங்கும் நோக்குடனேயே இவர்கள் அழைத்து வரப்பட்டனர். இதனை நன்கு தெரிந்திருந்தும் கூட, புலிகள் இயக்கம் மோட்டார் தாக்குதலை நடத்தியது வேதனைக்குரியது என்று மட்டக்களப்பைச் சேர்ந்த ஆசிரியரான எஸ்.திருஞானசம்பந்தர் தெரிவித்தார்.



மட்டக்களப்பில் இடம்பெற்ற தாக்குதலில் உயிர் தப்பிய தூதுவர்கள் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டபோது.

வெளிநாட்டு தூதுவர்கள் புனர்வாழ்வு புனரமைப்புத் தொடர்பாக அதிகாரிகளுடன் கூட்டமொன்றினை நடத்தி நிலைமைகளை கண்டறியத் திட்டமிட்டிருந்தனர். இது தவிர மட்டக்களப்பிலுள்ள சிவில் சமூகத்தினரை சந்தித்துப் பேச ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இவை அனைத்தும் குழப்பியடிக்கப்பட்டதால் தூதுவர்கள் உரிய பணிகளை ஆற்றாமல் கொழும்புக்குத் திரும்பி விட்டனர். இதனால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வாழும் அப்பாவி மக்களுக்கே இழப்புகள் ஏற்பட்டுள்ளன என்று மட்டக்களப்பு மாவட்ட செயலக அதிகாரி ஒருவர் கூறினார்.

இச் சம்பவம் தொடர்பாக அமெரிக்கத் தூதுவர் ரொபட் ஓ.பிளேக் கருத்துத் தெரிவிக்கையில், இத்துரதிர்ஷ்டவசமான சம்பவம் நிகழ்ந்திருக்கக் கூடாது. ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடியே நாம் இந்த விஜயத்தை மேற்கொண்டிருந்தோம். பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளையும் அவலங்களையும் எமது நாட்டு அரசாங் கங்களுக்கு எடுத்துக் கூறி உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதே எமது விஜயத்தின் நோக்கமாக இருந்தது. இவ்வாறான தாக்குதல்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிரான சர்வதேச அபிப்பிராயத்தை மேலும் அதிகரிக்கவே செய்யும். இத்தாக்குதலை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்று கூறினார். ஜேர்மன் நாட்டுத் தூதுவர் கருத்து தெரிவிக்கையில், இத் துக்ககரமான சம்பவத்தை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். இது குறித்து கருத்துக் கூறக்கூடிய மன நிலையில் நான் இல்லை. மக்களுக்கு உதவ முன் வருபவர்களை இவ்வாறு மிரட்டக் கூடாது என்று தெரிவித்தார். இத்தாலியத் தூதுவர் பியோ மரியானாவும் இத் தாக்குதல் சம்பவத்தை வன்மையாக கண்டித்தார்.

இத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து இரண்டு எம்-12 ரக விமானங்களும் மற்று மோர் சிவிலியன் விமானமும் அங்கிருந்து புறப்பட்டன. விமானங்களுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## கிழக்கில் மீள்குடியேற்றப் பணிகள் துரிதம்

கிழக்கில் புலிகளிடம் இருந்து மீட்டெடுக்கப்பட்டு, தற்போது அரச கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசங்களில் மீள் குடியேற்ற நடவடிக்கை துரிதமாக இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. கிழக்கு மாகாண ஆளுநர் றியர் அட்மிரர் மொகான் விஜயவிக்கிரம தலைமையில், கடந்த 26ஆம் திகதி அவரது செயலகத்தில் இது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. இதன் அடிப்படையில், திருகோணமலை, கிளிவெட்டி மற்றும் தங்கநகர்ப் பகுதிகளில், தற்காலிக கூடாரங்களில் மக்கள் முதற் கட்டமாக குடியமர்த்தப்படவுள்ளனர். இதனிடையே, சம்பூர், வெருகல் ஆறு, ஈச்சிலம்பற்று மற்றும் மாவிலாறு பிரதேசங்களில், உட் கட்டமைப்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஜாதிக சவிய செயல் திட்டம் ஊடாகவும், உதவிகள் பெறப்படவுள்ளதாக ஆளுநர் குறிப்பிட்டார். இந்த கலந்துரையாடலின் போது, ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான இலங்கையின் பிரதிநிதி அமீன் நவாடும் கலந்துகொண்டார்.

## கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஈ.பி.டி.பி.யின் மனிதாபிமான உதவி

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக ஒருபகுதி அத்தியாவசியப் பொருட்களை ஈ.பி.டி.பி. அனுப்பி வைத்துள்ளது. இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருட்களை உரிய முறையில் அரசாங்கம் வழங்குவது குறித்து ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு பேசி வரும் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, அனைத்து மக்களையும் அது சென்றடைவது குறித்தும் அவர்களிடம் ஏற்கனவே கலந்துரையாடியுமுள்ளார். இந்நிலையில் கட்சி நிதியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் ஊடாக அத்தியாவசியப்பொருட்களை செயலாளர் நாயகம் அனுப்பி வைத்துள்ளார். செயலாளர் நாயகத்தின் விஷேட பிரதிநிதிகளான அருமைலிங்கம், கட்சியின் மட்டக்களப்பு அமைப்பாளர்களான எம்.சிவா, வி.சிவா, ரவி ஆகியோரும் அங்குள்ள மக்களை நேரில் சென்று பார்வையிட்டனர். அவர்களது கோரிக்கைகளையும் செயலாளர் நாயகத்திற்கு தெரியப்படுத்தியிருந்தனர். இதன்படி சுயமாக சமைப்பதற்காக ஒரு தொகுதி மண்ணெண்ணெய் அடுப்புகளும் அதனுடன், இடம் பெயர்ந்த மக்கள் உரிய பொழுது போக்குகள் இன்றி உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வானொலிப் பெட்டிகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நலன்புரி நிலையங்களில் இருக்கும் மாணவ, மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்காக ஒரு தொகுதி கற்றல், கற்பித்தல் உபகரணங்களும் அமைச்சு நிதியிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## ஏப்ரலில் அரசின் தீர்வு யோசனை!

அரசாங்கம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனையை எதிர்வரும் ஏப்ரல் 13 ஆம் திகதிக்கு முன்னர் முன்வைக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் ஜப்பான் சென்றிருந்த ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ இந்த உறுதிமொழியை ஜப்பானின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூசி அகாசியிடம் அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை வெளியுறவு அமைச்சர் ரோகித போகல்லாகம அரசாங்கத்தின் யோசனை மார்ச் இறுதியில் முன் வைக்கப்படுமெனத் தெரிவித்துள்ளார். கடந்த வாரம் செய்மதி மூலமான கலந்துரையாடலில் பங்கேற்ற இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கையின் தற்போதைய நிலை குறித்து ஆராய்ந்துள்ளனர். இது இவ்வாறிருக்க, அமைச்சுப் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மங்கள சமரவீர மற்றும் ஸ்ரீபதி சூரியராச்சி ஆகியோர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுடன் இணைந்து கூட்டணி ஒன்றை அமைக்க திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கு ஜே.வி.பி. யின் ஆதரவைப் பெறவும் முயற்சிக்கப் படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## சட்டத்தரணிகளுக்குப் பிணை

சிரேஷ்ட புலனாய்வுத்துறை அதிகாரி துவான் முத்தலிப் கொலை தொடர்பான நீதிமன்ற ஆவணங்களை எடுத்துச் சென்ற இரு சட்டத்தரணிகள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். நீதிமன்றச் சுருக்கெழுத்தாளரினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு காரணமாக இந்த இரு சட்டத்தரணிகளும், முன்னர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களினால் எடுத்துச் செல்லப்பட்ட ஆவணங்கள் மீண்டும் நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டதையடுத்தே அவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

## மலையகத் தொழிலாளர்கள் பழிவாங்கப்படுகின்றனர்

ஜனவரி மாதம் இடம்பெற்ற பணிப்புறக்கணிப்புப் பேராட்டத்தை அடுத்து, தோட்ட நிர்வாகங்களால் தோட்டத் தொழிலாளர்கள் பழிவாங்கப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது. தோட்டத் தொழிலாளர்கள் ஜனவரி மாதம் தமக்கு 300 ரூபா வேதனத்தைக் கோரிப் போராட்டம் நடத்தினர். இதன் காரணமாக தோட்டத்துறை நிர்வாகங்களுக்குப் பல பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டதாக மதிப்பிடப்பட்டது. இந்த நிலையில் அரசாங்கத்தின் தலையீட்டை அடுத்து குறைந்தளவு வேதனத் தொகையுடன் தோட்டத் தொழிலாளர்களின் வேதன உயர்வுப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இதனையடுத்துத் தோட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களை நாள் ஒன்றுக்கு 18 கிலோ என்ற அளவில் தேயிலைக் கொழுந்துகளைப் பறிக்க வேண்டுமென உத்தரவிடுவதாகத் தொழிலாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர். முன்னர் 14 கிலோ கொழுந்தையே தொழிலாளர்கள் பறித்து வந்தனர். இதேவேளை தொழிலாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு குறைந்தளவு நாட்களே பணிகள் வழங்கப்படுவதாகவும் குற்றம் சுமத்தபட்டுள்ளது.

## 1710 சிறுவர்கள் புலிகள் இயக்கத்தில்!

புலிகள் இயக்கம் வயது குறைந்த 1710 சிறுவர், சிறுமியரை கடத்திச் சென்றிருப்பதாக ஐ.நா. சிறுவர் அமைப்பான யுனிசெப் தெரிவித்துள்ளது. இவர்களில் 707 பேர் இன்னமும் 18 வயதை அடையவில்லை. ஏனைய 1003 பேரும் கடத்திச் செல்லப்பட்ட போது 18 வயதிற்கு குறைவானவர்களாகவே இருந்தனர். ஆனால் அவர்கள் இப்போது 18 வயதைத் தாண்டி விட்டனர் என்றும் யுனிசெப் தெரிவித்துள்ளது.

## தூத்துக்குடியிலிருந்து நாச்சிக்குடாவுக்கு ஆயுதக் கடத்தல்

தமிழகத்தில் இருந்து இலங்கையின் வட பகுதிக்கு அலுமினியக் கட்டிகளை படகு மூலம் கடத்தி வர முனைந்த போது, தமிழக கரையோரக் காவல் படையினரிடம் சிக்கிய மூன்று இலங்கைத் தமிழர்களும் பல முக்கிய தகவல்களை வழங்கியுள்ளனர். பருத்தித்துறையைச் சேர்ந்த அன்ரன் சுகுமார், கிளிநொச்சியைச் சேர்ந்த குமார் மற்றும் ஜெயகரன் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர். தூத்துக்குடியிலிருந்து நாச்சிக்குடாவிற்கு ஆயுதங்கள் கடத்தப்படுவதாக தமிழகப் பொலிஸாருக்கு இவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இராமநாதபுரம் பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திருஞானம், இம் மூவரையும் கரையோரப் பாதுகாப்பிற்கு பயன்படுத்தப்படும் கப்பலொன்றில் அழைத்து சென்றிருக்கின்றார். கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட இடங்களை இவர்கள் பொலிஸ் அதிகாரிகளுக்கு காட்டிக் கொடுத்திருக்கின்றனர். அத்துடன் புலிகள் இயக்கத்திற்காக ஆயுதங்கள், போதைவஸ்து, கடத்தலில் ஈடுபடும் முக்கிய நபர்கள் சிலரின் பெயர் விபரங்களை பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

## இராஜ தந்திரிகள் மீதான தாக்குதல் சர்வதேச சமூகத்தை எச்சரிக்கும் செயல்! - ஈ.பீ.டி.பீ. அறிக்கை

அனர்த்த நிவாரண முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க உள்ளிட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் மீது மட்டக்களப்பில் புலிகள் நடத்திய தாக்குதலை வன்மையாகக் கண்டித்து ஈ.பி.டி.பி. அறிக்கையொன்றினை விடுத்துள்ளது.

பதற்றமான சூழலுக்கு மத்தியில் மட்டக்களப்பில் அகதி முகாம்களில் அவலப்படும் மக்களின் நலன்கள் தொடர்பிலும், அவர்களின் மீள்குடியேற்றம் தொடர்பிலும் நிலைமைகளை ஆராய்வதற்காகச் சென்ற தூதுவர்கள் அடங்கிய உயர் மட்டப் பிரதிநிதிகள் மீது புலிகள் பயங்கரவாதத் தாக்குதலை நடத்தியுள்ளனர். இத் தாக்குதலை நியாயப்படுத்தும் விதமாக தமக்கு இவ் உயர் மட்டக் குழுவின் வருகை தொடர்பில் முன்னறிவித்தல் செய்யவில்லை என்பதானது, புலிகள் சர்வதேச சமூகத்தை எச்சரிப்பதற்காக நடத்திய தாக்குதல் இது என்பது நிரூபணமாகின்றது.

அதிர்ஷ்டவசமாக உயிர்ச்சேதங்கள் இடம் பெறவில்லையெனினும், இத்தாலியத் தூதுவர் உட்பட பலர் காயமடைந்துள்ள இந்தச் சம்பவமானது இடர்படும் எமது மக்களின் எதிர்காலம் தொடர்பில் சர்வதேசம் காட்டும் அனுதாபத்தைக் கொச்சைப்படுத்தும் சம்பவமாகும். தமிழ் மக்களின் அவலங்கள் நீடிப்பதையே புலிகள் விரும்புகின்றனர். பதற்றம் நிறைந்த சூழலே தமக்குச் சாதகமானது என்பதாலேயே புலிகள் இவ்வாறான தாக்குதல்களை மேற்கொள்ளுகின்றனர்.

புலிகளின் பயங்கரவாதச் செயல்களில் ஒரு பகுதியாகவே இந்தத் தாக்குதலை கருதவேண்டியுள்ளது. ஒப்பந்தத்தை மதிப்பதாகவும், வலிந்த தாக்குதல்களை தாங்கள் நடத்துவதில்லை என்றும் புலிகள் செய்துவந்த பொய்ப்பிரசாரம் இன்று சர்வதேசத்தின் முன்னால் அம்பலமாகிப் பொய்ப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினையைப் புலிகள் பயங்கரவாதப்

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## 'பவ்ரல்' அமைப்பின் விஷேட திட்டம்

கடத்தல் மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பான சரியான தகவல்களைப் பெறுவதற்கான விசேட திட்டம் ஒன்றை 'பவ்ரல்' அமைப்பு மேற்கொள்ளவுள்ளது. காணாமல் போனவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்கள் குறித்துப் பல தரப்பினர் முறைப்பாடுகளைச் செய்தபொழுதிலும், உரிய முறையிலான விசாரணைகள் நடைபெறுவதில் பல சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாக அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்ரிகோ தெரிவித்தார். இதன் காரணமாகவே பவ்ரல் அமைப்பு உரிய முறையில் முறைப்பாடுகளைப் பெற்று, விசாரணைகளுக்கு உதவ முன்வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இது தொடர்பாக மக்களுக்குப் புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில்,பவ்ரல் அமைப்பு ஆலோசனைகளை வழங்கிவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கிழக்குப் பல்கலைக்கழக செயற்பாடுகளை மீண்டும் சீர்குலைக்கச் சதி!

எதிர் வரும் 19ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழகத்தை மீண்டும் திறப்பதற்கு பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா தலைமையில் சில நாட்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டிருக்கின்றது. கிழக்குப் பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படப் போவதாக புரளியைக் கிளப்பி வரும் கிழக்கைச் சேர்ந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம். பி.க்களின் கூற்றுக்கள் பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டிருக்கிறது. இந்த இரு பல்கலைக்கழகங்களும் இணைக்கப்பட மாட்டாது என்று அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் உறுதியளித்துள்ள நிலையிலும், இவ்வாறான புரளிகளைக் கிளப்புவதற்கு காரணங்கள் இருப்பதாகவும் அக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த டிசெம்பர் 15ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் இரவீந்திரநாத் கடத்தப்பட்டதை அடுத்து சுமார் ஒன்றரை மாதங்களாக பல்கலைக்கழகம் மூடப்பட்டது. மீண்டும் ஜனவரி 29ஆம் திகதி பல்கலைக்கழகம் திறக்கப்பட்ட இரண்டாம் நாளே புலிகள் நடத்திய கிளை மோர் தாக்குதலையடுத்து அது மூடப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின் கல்வி சார் நடவடிக்கைகளைக் குழப்புவதற்கு தீய சக்திகள் மீண்டும் முனைந்தால், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# முரசம்

## தீர்வு யோசனையும் கால தாமதமும்

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

மட்டக்களப்பில் நிலைமைகளை அவதானிக்கவும் வாகரை மோதலில் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் அவலப்படும் மக்களின் தற்போதைய நிலைமை மற்றும் அவர்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக உள்ள சாதக பாதக சூழ்நிலைகளைக் கண்காணிக்கவும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையில் சென்றிருந்த தூதுவர்கள் அடங்கிய உயர் மட்டக் குழுவினர் மீது புலிகள் நடத்தியிருக்கும் மோட்டார்த் தாக்குதல் உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் பல விதமான சிந்தனைகளைத் தோற்றுவித்துள்ளது.

செயற்திறன் அற்ற புரிந்துணர்வு ஒப்பந்தமாக இது இருந்தபோதும், ஒப்பந்தம் இருதரப்பாலும் மதிக்கப்பட்டு சமாதானத்துக்காக பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச நாடுகள் வலியுறுத்திக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், படையினரின் இலக்குகள் நோக்கிப் புலிகளும், புலிகளின் இலக்குகள் நோக்கிய படையினரும் பரஸ்பரம் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதன் ஒரு தொடர்ச்சியாக மட்டக்களப்பில் தூதுவர்கள் குழு மீது நடத்தப்பட்ட தாக்குதலை புலிகள் தற்செயல் தாக்கதல் என்று காட்டிக் கொள்ள நினைத்தாலும், புலிகளைப் பயங்கரவாதிகள் எனக் கூறிக் கொண்டிருக்கும் சர்வதேச நாடுகள் இந்தத் தாக்குதலை மிகவும் எரிச்சலோடு பார்க்கும் என்பது மட்டும் திண்ணம்.

இந்த உயர் மட்டக்குழுவில், அமெரிக்கா, ஜேர்மனி, கனடா, இத்தாலி ,பிரான்ஸ் போன்ற நாடுகளின் பிரதிநிதிகள் அடங்குகின்றனர். காயமடைந்தவர்களில் இத்தாலி நாட்டின் தூதுவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. புலிகளைத் தடை செய்யாத பல நாடுகளும் இந்தத் தாக்குதல் குறித்து தமது கவனத்தை திருப்பியுள்ளன. இந்த நிலையில் அமெரிக்கத் தூதுவருக்கு இவ்வாறான படுகாயம் ஏற்பட்டிருந்தால் அது புலிகளுக்கு நேரடி விளைவைத் தந்திருக்கும் என்றும் கூறப்படுகின்றது. இருந்த போதும், சர்வதேசத்தின் கோபப் பார்வைக்கு புலிகள் ஆளாகியிருக்கிறார்கள். இதன் விளைவு புலிகளுக்கு ஒரு பின்னடைவாகவே அமையும். இத் தாக்குதலானது அரசாங்கம் தற்போதைக்கு எதிர்கொண்டுவரும் பயங்கரவாதத் தாக்குதலின் விபரீதத்தை சர்வதேசம் அனுபவரீதியாகப் பெற்றுள்ளது என்று கூறிக்கொள்ளும் வசதியையும் ஏற்படுத்தியுள்ளது. ஆக புலிகளின் தாக்குதல்கள் என்பது இலங்கைப் படையினருக்கு எதிரானது மட்டுமல்ல, மக்களுக்கும், மக்களின் நலன், இயல்புச் சூழல் என்பவற்றில் அக்கறை கொண்டு செயற்படக்கூடியவர்களுக்கு பாதகமானது என்ற ஒரு எடுகோலையும் தோற்றுவித்துள்ளது.

பாகிஸ்தான் தூதுவர் மீது கொழும்பில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலை புலிகள் மறுத்த போதும் இந்தத் தாக்குதலை மறுப்பதற்கான ஏது நிலைகள் மிகவும் குறைவாகவே இருக்கிறது. இதேவேளை அரசாங்கம் கூட்டிய அனைத்துக் கட்சிகளின் ஆலோசனைகளைப் பரிமாறும் தீர்வுத்திட்ட நோக்கம், அதன் இலக்கை அடையுமா என்ற சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது. அக் கூட்டத் தொடர் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டுக் கொண்டு செல்வது இனப்பிரச்சினைக்கான தீர்வு விரைவில் முன் வைக்கப்படலாம் என்ற நம்பிக்கைகளை தகர்க்கும் செயலாக அமைந்துள்ளது. புலிகளின் செயற்பாடுகள் சமாதானத்துக்கானதாக இல்லை என்பதைப் புரிந்துகொள்ளும் போது அரசின் சமாதானத்துக்கானதான முயற்சிகளும் வெற்றியளிக்கக் கூடிய பாதையில் செல்லவில்லையோ என்ற சந்தேகமானது ஏமாற்றமானதாகவே இருக்கும். இது நிரந்தர ஏமாற்றமாகிவிடாமல் அரசு அனைத்துக்கட்சிகளை கூட்டியதன் இலக்கை அடைய வேண்டும். அதையும் காலதாமதப்படுத்தாமல் விரைந்து செய்ய வேண்டும். இதுவே சமாதானத்தின் நேசிப்பு மிகுந்த அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

இந்த நியாயமான எதிர்பார்ப்பின் மீதான அரசின் செயல்வடிவத்தை அரசு விரைந்து வெளிப்படுத்த வேண்டும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*



தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு அலுமினியக் கட்டிகளைக் கடத்த முயன்றபோது பிடிபட்ட மூன்று இலங்கைத் தமிழ் இளைஞர்களையும், பிடிபட்ட படகையும் படத்தில் காணலாம்

# இலங்கைக்குள் ஆயுதக் குவிப்பும்; இந்தியாவின் கண்காணிப்பும்!

“**இலங்கையிலுள்ள** தமிழர்கள் மீது தமிழக மாநில அரசு கொண்டிருக்கும் அநுதாபத்தை, ஆயுதக் கடத்தலுக்கான லைசன்ஸ் என்று யாரும் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது” என்று தமிழக முதல்வர் மு.கருணாநிதி கூறியுள்ளார். தமிழக ஆளும் கட்சியான தி.மு.க.வின் செய்திப் பத்திரிகை முரசொலியில் கடந்த 23ஆம் திகதி எழுதிய விடயதானத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். வன்னிப் புலிகளுக்கு தமிழகத்தில் இருந்து ஆயுதங்களையும், குண்டு தயாரிக்கும் கருவிகளையும் கடத்தி வர அண்மைக் காலங்களில் எடுக்கப்பட்ட பல முயற்சிகள் முறியடிக்கப்பட்டதை அடுத்து இவ்வாறு கருணாநிதி தெரிவித்துள்ளார். இந்தியாவில் தடை செய்யப்பட்டிருக்கும் புலிகள் இயக்கத்தின் ஆயுத தளமாக தமிழ்நாடு பயன் படுத்தப்படுவதற்கு ஒத்தாசை வழங்கும் சக்திகள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கலைஞர் எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்த எச்சரிக்கை பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ், சிறுத்தைகள் இயக்கத் தலைவர் தொல். திருமாவளவன், பழநெடுமாறன், வைகோ உட்பட புலிகளின் தமிழகத் தரகர்களாக இயங்கும் அரசியல் வாதிகளுக்கும் கடுமையான எச்சரிக்கையாக இது அமைந்துள்ளது.

கடந்த இரு வாரங்களுக்கு மேலாக தமிழகத்திலும் தமிழகத்தின் கரையோரப் பகுதிகளிலும் குண்டுகள் தயாரிக்கும் உபகரணங்களும், ஆயுதங்களும், தற்கொலை அங்கிகளும் தொடர்ச்சியாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதனை அடுத்து இந்திய மத்திய அரச அதிகாரிகளுக்கும், தமிழக மாநில காவல் துறை அதிகாரிகளுக்குமிடையில் தீவிர பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு, பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இலங்கை இந்தியக் கடல் எல்லையில் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. விமானக் கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கரையோரப் பந்தோபஸ்து நடவடிக்கைகளுக்கென விசேட படை ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் பிரிவினை கோரிப்போராடும் புலிகள் இயக்கத்திற்கு, ஆயுதங்கள் வழங்கும் தளமாக தமிழகம் விளங்குவதாக அண்மைக் காலங்களில் எழுந்து வந்த விமர்சனங்களுக்கு மத்தியிலேயே, தமிழக முதல்வர் இந்தக் கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளார். இப்போது இந்தியக் கடலோரக் காவல் படையினரும் தமிழகப் பொலிஸாரும் இணைந்து கூட்டாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். சுமார் 1000 கிலோ மீற்றர்கள் வரை நீண்டு செல்லும் தமிழக கரையோரப் பகுதிகளில், படகுகள் வந்து சேரக் கூடிய 400க்கு மேற்பட்ட இடங்கள் இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

தமிழகத்தின் ஆதாம் பாலத்திற்கு அருகிலுள்ள கடலோரத்தில் கடந்த 14ஆம் திகதி வன்னிக்குக் கடத்திச் செல்லப்படவிருந்த அலுமினியக்கட்டிகளுடன் படகொன்றினைப் பொலிஸார் கைப்பற்றினர். பருத்தித்துறையைச் சேர்ந்த அன்ரன் சுகுமார் என்ற புலி உறுப்பினர் உட்பட மூவரைப் பொலிஸார் கைது செய்தனர். இராமநாதபுரம், மாவட்ட பொலிஸ் சுப்பிரிண்டன்ற் திருஞானம் இந்த மூன்று இலங்கைத் தமிழர்களையும் ஏற்றிக் கொண்டு தமிழக கரையோரப் பகுதிகளை பார்வையிட்டிருக்கின்றார். புலிகள் ஆயுதங்களைக் கடத்திச் செல்லப் பயன்படுத்தும் இடங்களைக் கண்டறிவதற்காகவே திருஞானம் தலைமையிலான பொலிஸ் குழுவினரும் இந்தியக் கடலோரக் காவல் படையினரும் இந்த ஆய்வு நடவடிக்கையில் ஈடுபட்டனர். தூத்துக்குடிக்கு அருகேயுள்ள வைபர் என்ற கடலோரப் பகுதியிலிருந்து தாம் அலுமினியத் தகடுகளை கடத்திச் செல்ல முயன்றதாக இம் மூவரும் தெரிவித்தனர். இந்த மூவரும் கொடுத்த தகவல்களை அடுத்து மேலும் பலர் தேடப் படுவதாக பொலிஸ் சுப்பிரிண்டன்ற் திருஞானம் தெரிவித்தார். ஆயுதக் கடத்தல் முயற்சிகளில் புலிகள் இயக்கத்திற்கு உதவி வரும் முக்கியஸ்தர்கள் என்று கூறப்படும் கண்ணன் என்பவரும், வேலுசாமி என்பவரும் விரைவில் கைது செய்யப்பட்டு விடலாம் என்றும் திருஞானம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தாங்கள் ஆயுதங்களைத் தமது வள்ளங்களின் மூலம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான சர்வதேசக் கடல் எல்லைக்குக் கொண்டு செல்வது வழக்கம் என்று இந்த மூவரும் தெரிவித்துள்ளனர். இலங்கையிலிருந்து வரும் கண்ணாடி இழைப் படகுகள் இந்த ஆயுதங்களை ஏற்றிச் செல்வது வழக்கம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். தமிழக கடலோரத்தை அண்டிய வீதி வழிகள் ஊடாகவும் தமிழகப் பொலிஸார் பரிசோதனை நடவடிக்கையிலான ரோந்து நடவடிக்கை ஒன்றினை மேற்கொண்டனர். புலிகளின் கடத்தல் பகுதிகளைக் கண்டறிவதற்காகவே இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக இராமநாதபுரம் பிரதிப் பொலிஸ் சுப்பிரிண்டன்ற் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இந்தியா, பர்மா, தாய்லாந்து, உக்ரைன், கஜகிஸ்தான், கம்போடியா உட்பட எட்டு நாடுகளில் இருந்து புலிகள் ஆயுதங்களைக் கடத்திச் செல்வதாக அண்மையில் அமெரிக்காவின் உளவுத்துறை நிறுவனம் ஒன்று அறிவித்திருந்தது. பர்மா, தாய்லாந்து, கம்போடியா போன்ற நாடுகளிலிருந்து புலிகள் ஆயுதங்களைக் கடத்திச் செல்வதற்கு எதிராகக் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. புலி இயக்கத்தின் ஆயுதக் கொள்வனவாளர்கள் என்று கைது செய்யப்பட்ட சிலர், இந்த நாடுகளின் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள். புலிகளின் ஆயுதத் தளமாக தமிழகம் நீண்ட காலமாகவே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது என்பது உண்மையாகும். தமிழகத்தின் உதிரிக் கட்சிகள் மட்டுமல்ல, பிரதான கட்சிகள் கூட புலிகள் இயக்கத்தை விடுதலை இயக்கமாக கருதிய காலமொன்று இருந்தது. கலைஞர் கருணாநிதியும் ஜெயலலிதாவும் கூட அவ்வப்போது புலிகள் இயக்கத்திற்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்து வந்திருக்கின்றனர். அதுமட்டுமல்ல, இலங்கை, இந்திய ஒப்பந்தத்திற்கு பின்னர், அதாவது 1988- 1991 காலப் பகுதியில் கலைஞர் கருணாநிதி புலிகளுக்கு ஆதரவும், ஒத்தாசையும் வழங்கி வந்தாரென்று குற்றம் சாட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. 1991ஆம் ஆண்டு புலிகளுக்கு ஆதரவளித்து வந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில், கருணாநிதி தலைமையிலான தி.மு.க.அரசாங்கத்தை இந்திய மத்திய அரசு கலைத்திருந்தது. அங்கு ஜனாதிபதியாட்சி பிரகடனப்படுத்தப்பட்டிருந்த வேளையில்தான், தமிழ் நாட்டில் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார். புலிகள் இயக்கமே ராஜீவ் காந்தியின் படுகொலைச் சூத்திரதாரி என்ற உண்மை அம்பலமாகியதை அடுத்து தமிழகத்தில் புலிகள் இயக்கத்திற்கு மட்டுமல்ல, தமிழ் தீவிரவாத இயக்கங்களுக்கும் கிடைத்து வந்த ஆதரவுகள் நிறுத்தப்பட்டன. 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி ராஜீவ் காந்தி ஸ்ரீபெரமபுதூரில் நடைபெற ஏற்பாடாகியிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த போதே கொல்லப்பட்டார். இதனையடுத்து நடைபெற்ற தமிழக மாநிலத் தேர்தலில் இரண்டே இரண்டு ஆசனங்களை மட்டுமே பெறும் அளவிற்குத் தி.மு.க.படுமோசமாகத் தோற்கடிக்கப் பட்டது. ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பின்னர் தமிழகத்தில் வாழ்ந்து வந்த இலங்கைத் தமிழர்கள் கடுமையான சோதனைக்குட் படுத்தப் பட்டனர். பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்து கொள்ளுமாறு அவர்கள் கேட்கப்பட்டனர். அகதி முகாம்களில் கெடுபிடிகள் பலப்படுத்தப்பட்டன. அதன் பின்னர் தமிழ் தீவிரவாதிகள் தீண்டத் தகாதவர்களாகவே தமிழகத்தில் கருதப்பட்டனர்.

கடந்த நவம்பர் மாதம் தமிழீழ யுத்தத்தைப் புலிகள் பிரகடனப் படுத்தியதால், நாட்டில் பாரிய யுத்தம் வெடிக்கலாம் என்ற அச்சத்தால், வடக்கு, கிழக்கிலிருந்து தமிழகத்திற்கு பெரும் தொகையான தமிழர்கள் அகதிகளாகச் செல்லத் தலைப் பட்டுள்ளனர். புலிகள், யுத்தத்தை ஆரம்பித்த கடந்த ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதியிலிருந்து இதுவரை 15,000க்கு மேற்பட்ட தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாக இடம் பெயர்ந்திருக்கின்றனர். ஏற்கனவே ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தில் தஞ்சம் தேடி இருக்கின்றனர். புலிகளின் யுத்த முஸ்தீபு மட்டுமல்ல, இலங்கையில் இடம் பெற்றுவரும் மனித உரிமை மீறல்களுக்கும் பயந்தே வடக்கு, கிழக்கு மக்கள் தமிழகத்திற்கு இடம் பெயர்ந்து வருகின்றார்கள். ஆட்கடத்தல்கள், கைதுகள், ஆட்கள் காணாமல்போதல், கற்பழிப்புகள் போன்ற காட்டு மிராண்டித்தனமான மனித உரிமை மீறல்களுக்குப் பயந்தும் அப்பாவித் தமிழர்கள் வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள். எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி இடம் பெற்றுவரும் படுகொலைகளும் கொள்ளைகளும் கூட இந்த மக்களை இடம் பெயரவும் புலம் பெயரவும் வைக்கின்றன. வவுனியாவின் கிராமங்களில் இருந்துவரும் செய்திகள் நெஞ்சைக் குருக வைக்கின்றன.

வவுனியா, மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் அத்து மீறல் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றன. இதனால் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை படுகொலைகள், ஆட்கடத்தல்கள், சிறுவர்களைப் படையணிகளில் சேர்த்துக் கொள்ளுதல் போன்ற காட்டுமிராண்டித்தனமான செயல்களுக்கு அதனை ஓர் தாய் அமைப்பு என்று கூறலாம். மாற்றுக் கருத்துக்கள் கொண்டவர்களை படுகொலை செய்வது போன்ற புலிகளின் மனித உரிமை மீறல்களுக்கு எப்போதோ லைசன்ஸ் வழங்கப்பட்டு விட்டதுபோல் தெரிகின்றது. விடுதலையின் பேரால் அந்த இயக்கம் நடத்திவரும் அட்டூழியங்களைத் தட்டிக் கேட்பதற்கு சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் வக்கற்றுப் போயிருக்கின்றன.

கருணாநிதியைப் போன்றே, முன்னாள் தமிழக முதல்வரும் அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா இந்தப் பிரச்சினை குறித்து நியாயமான முறையில் கருத்துத் தெரிவித்துள்ளார். இலங்கையில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்துவரும் தமிழர்களுக்கு அனைத்து உரிமைகளையும் இலங்கை அரசு வழங்க வேண்டுமென்று கூறியுள்ள ஜெயலலிதா, தமிழகத்திலிருந்து புலிகளுக்கு ஆயுதங்கள் கடத்தப்படுவதைத் தடுக்கக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

தமிழக மாநிலச் செயலாளர் என்.வரதராஜன் தெரிவித்திருக்கும் கருத்து, வித்தியசமானதாக அமைந்துள்ளது. தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு ஆயுதங்களும் வெடிபொருட்களும் கடத்தப்படுவதைத் தடுப்பதற்கு, இந்தியப் புலனாய்வு வட்டாரங்கள் தவறிவிட்டன என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார். தமிழகப் பொலிஸ் பிரிவு கூடுதல் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டுமென்றும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாதவாறு தடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டிருக்கின்றார்.


இதேவேளை, கருணாநிதி காட்டமாகச் சொல்லியிருக்கும் கருத்தையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். “இந்திய மக்களின் நலனையும் பந்தோபஸ்தையும் பகடைக்காயாக்கி, இலங்கையின் குழப்ப நிலையில் தமிழ்நாடு தலையிடுமென்று எவரும் கனவு காணக்கூடாது. இந்தியாவின் நலன்களைப் பாதுகாப்பதற்கு மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கையிலும் நாம் தலையிடப் போவதில்லை” என்றும் கருணாநிதி கூறியிருக்கின்றார்.

புலிகள் இயக்கம் தொடர்பாகவும் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாகவும் தமிழகக் கட்சிகள் மத்தியில் புதிய போக்கொன்று எழுந்திருக்கின்றது. ஒரு காலத்தில் புலிகளை ஆதரித்தவர்கள், பின்னர் கடுமையாக எதிர்த்தவர்களுமான தமிழகத் தலைவர்கள், இன்று புலிகளின் பிரச்சினை வேறு, தமிழர்களின் பிரச்சினை வேறு என்பதை நன்கு உணர்ந்து கொண்டனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் கருணாநிதிக்கு எழுதிய கடிதமொன்றில், இலங்கை வாழ் தமிழர்களின் பிரச்சினை வேறு, புலிகளின் பிரச்சினை வேறு என்பதனை விலாவாரியாக விளக்கியிருந்தார்.


அமெரிக்காவில் புலிகளின் ஆயுதக் கொள்வனவுக்கு ஆப்பு வைக்கப்பட்டதைப்போன்று, இப்போது தமிழகத்திலும் ஆப்பு வைக்கும் முயற்சிகள் உச்சம் பெற்றிருக்கின்றன. கடந்த ஆகஸ்ட் மாதம் அமெரிக்காவில் புலிகளுக்கு ஆயுதம் கொள்வனவு செய்ய முயன்ற 12 பேர் கைது செய்யப்பட்டனர். செப்டம்பரில் புலிகளுக்கு ஆயுதம் விற்க முனைந்த இந்தோனேசிய இராணுவ ஜெனரல் ஒருவரும் மாட்டியிருக்கிறார். அமெரிக்காவின் பாணியில் தமிழகம் எடுத்து வரும் நடவடிக்கையிலும் புலிகள் இயக்கத்திற்கு சிவப்பு விளக்கையே காட்டுகின்றன. இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் உட்பட சர்வதேச நாடுகள், அதிகாரப் பகிர்விற்கான அரசியல் யோசனைகளை முன்வைக்குமாறு இலங்கை அரசை வற்புறுத்தி வருகின்றன.

அநேகமாக, ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் இலங்கை அரசாங்கம் அரசியல் தீர்வு யோசனைகளை முன்வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையிலுள்ள அமெரிக்க உயர் ஸ்தானிகர் ரொபர்ட் ஓ பிளேக், ‘இந்தோ ஏசியன்’ செய்தி நிறுவனத்திற்கு அண்மையில் கூறிய கருத்தினை இங்கே சுட்டிக் காட்டுவது சாலவும் பொருத்தமானது. “தமிழர் சமூகத்தின் பிரச்சினைகளுக்கு ஈடுசெய்யக்கூடிய அரசியல் உத்தியொன்றினை சமாந்தரமாக முன்வைக்காதவரை புலிகள் இயக்கத்தை தோற்கடிக்க முடியாது” என்று கூறியுள்ளார். சில தமிழ் ஊடகங்கள் கத்திக் குளறுவதைப் போன்று, புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முடியாது என்று அவர் கூறவில்லை. அவர் கூறிய மற்றுமோர் கருத்தும் கவனத்திற்குரியது. அதாவது, “புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் சமாதானத்திற்கு உடன்படுவார்களா என்று என்னால் கூறமுடியாது. புலிகளின் 20 வருடகால அனுபவம், அவர்கள் என்றுமே சமாதான முயற்சியை பாரதூரமாக எடுத்துக் கொண்டதாகக் காட்டவில்லை. நல்லெண்ணத்துடன் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வரத்தயாராக இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிய இலங்கை அரசாங்கம் அவர்களுக்கோர் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்” என்று கூறியுள்ளார். இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமான ஒரு பரிசோதனைக் கூற்றாகவே இது அமைகின்றது.

## ஊரிலிருந்து....



*இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவடைந்து கிழக்கு ஜேர்மனி தனிநாடாக இயங்கிய போது அங்கு வசிக்கவிரும்பாத பல குடிமக்கள் கும்பல் கும்பலாக வெளியேறியது வரலாறு. இதனைச் சித்தரிக்கும் பல திரைப்படங்கள் கூட வெளிவந்தன. ஆனால் தற்போதோ அதற்கு சற்றும் குறையாத வகையில் வன்னியிலிருந்து மக்கள் இடப்பெயர்வு என்ற எரிமலை தனக்குள்ளே குமுறிக்கொண்டிருக்கின்றது. ஏற்கனவே பொதுமக்கள் சிலர் தப்பியோடி வந்த நிலையில் ஒரு சிறிய இடைவெளி கிடைத்தால் ஓர் ஒட்டுமொத்த இடப்பெயர்வைக் காணலாம். ஆனால் இதில் விசித்திரம் என்னவென்றால், மூச்சுக்கு நூறு தடவை தேசிய தலைவர் என்று துதி பாடும் பிரதிநிதிகள் என்போர் தமது குடும்பங்களை மட்டும் பத்திரமாக வெளிநாடுகளில் தங்க வைத்துள்ளனர். எல்லாவற்றிக்கும் காலம் பதில் சொல்லும்.*




கிளைமோர் குண்டுகளை வெடிக்கச் செய்வதற்கு வாய்ப்புக்களும் வசதிகளும் அதிகம் என்பதால், புலிகளின் தற்போதைய தாக்குதல்களில் கிளைமோர் தாக்குதலே பிரதான இடத்தை வகிக்கிறது. முன்னர் நீளமான இரு வயர்களைக் குண்டுடன் இணைத்து எடுத்துச் சென்று தூரத்தில் இருந்து கொண்டு பெற்றரியில் இணைப்புக் கொடுத்து வெடிக்க வைத்தனர். குண்டு வெடித்தது. அவ்விடத்துக்கு வரும் படையினர் நடத்தும் சோதனையில் நீளமான வயர்களையும் புலிகள் பதுங்கியிருந்த இடத்தையும் கண்டு பிடித்தனர். இப்போது வயர்கள் இல்லாமல், கிளைமோரையும் வாகனக் குண்டுகளை வெடிக்க வைக்கும் தொழில் நுட்பத்தைப் புலிகள் கையாண்டு வருகின்றனர்.

# வெடிக்கும் கிளைமோரும் வெளிவராத உத்திகளும்!

***யாழ்ப்பாணத்தில்*** தற்போதைய நிலையில் பிரதான வீதிகளிலும், படையினரின் வாகனங்கள் பயணிக்கும் வீதிகளிலும் மக்களது நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. முற்பகலில் ஒருமணிநேரமும், பிற்பகலில் ஒரு மணி நேரமும் இந்தக் கட்டுப்பாடு இருக்கிறது. படையினரின் வாகனங்களை இலக்கு வைத்து புலிகள் கிளைமோர் தாக்குதல்களை நடத்துவதால், அந்த வேளையில் வீதியால் செல்லும் பொது மக்களும் பாதிக்கப்படும் சம்பவங்களையடுத்தே இந்த நடைமுறை பின் பற்றப்படுகிறது. படையினரின் வாகனத் தொடரணி பயணிக்கும் போது, மக்கள் வீதிகளை விட்டு ஓரமாகி நிற்பதும் வழக்கமாக இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் தாக்குதல்கள் அதிகரிக்கத் தொடங்கிய காலத்தில் படையினரின் வாகனங்களுக்கு அருகாமையிலும், அவற்றோடு இணைந்தும் பொது மக்கள் பயணிக்க வேண்டாம் என்று புலிகள் எச்சரித்திருந்தனர். இந்த எச்சரிக்கையை மக்கள் ஏற்று நடப்பதாக இருந்தால் வீதிக்கு இறங்கவே முடியாது. காரணம், குடாநாடு படையினரின் முழுக் கட்டுப்பாட்டில் இருப்பதால், அவர்களின் வாகனங்கள் அடிக்கடி வீதிகளில் செல்வதுண்டு.

எனவே மக்கள் அந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் தமது அன்றாட நடவடிக்கைகளைச் செய்து வந்தனர். இந்தக் காலப் பகுதியில் புலிகளின் கிளைமோர் தாக்குதல்களில் படையினர் இலக்காக நேர்ந்தபோதும் பொது மக்களும் பலியாகினர். இந்தச் சம்பவங்களின் தொடர்ச்சியாகவும், பெரிய சம்பவங்களாகவும் கடந்த 17-02-07 அன்று யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில், கண்டி வீதிக்கும் - சோமசுந்தரம் வீதிக்குமிடைப்பட்ட இடத்தில் மோட்டார் சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் குண்டு வெடித்ததில், இரண்டு படையினர், சிறுவன் உட்பட மூன்று பொதுமக்களும் பலியாகியதோடு 12 படையினர் உட்பட 18பேர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவத்துக்குப் பிறகே யாழ்ப்பாணத்தில் புதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. 2005ஆம் ஆண்டு முற்பகுதியில் படையினர் மீது கிளைமோர் தாக்குதலோ, குண்டுத் தாக்குதலோ நடத்தப்பட்டால், படையினர் அந்த இடத்தைச் சுற்றி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்ப்பார்கள் என்ற நிலை இப்போது இல்லாது போயுள்ளது. அதாவது படையினர் பொது மக்களைத் தாக்குவதை விரும்பும் நோக்கம் கொண்ட தாக்குதல்களையே புலிகள், மக்கள் நடமாடும் இடங்களில் நடத்தப்படும் தாக்குதல்களின் நோக்கமாக உள்ளது என்பதைப் படைத்தரப்பு நன்கு புரிந்து கொண்டுள்ளது. தமிழ் ஊடகங்களும், அவ்வாறான ஒரு சம்பவத்தில் படையினர் இலக்கு வைக்கப்பட்டதாகவும், சிலர் கொல்லப்பட்டும், காயமடைந்ததாகவும் கூறிவிடுவதுண்டு. பொதுமக்களின் இழப்புக்குறித்து குறிப்பிடவோ பொதுமக்களைப் பாதிக்கும் அத்தகைய தாக்குதல்களை கண்டிப்பதையோ மீண்டுமொரு முறை தாக்குதல் நடைபெறமாட்டாது என்பதை வலியுறுத்துவதாகவோ இருப்பதில்லை.

கிளைமோர் தாக்குதல்கள் வெறுமனே படையினரை மாத்திரம் குறிவைத்து நடத்தப்படுவதாக இருக்கவில்லை. கெப்பிட்டிக் கொல்லாவையில் பயணிகள் பஸ் வண்டியை கிளைமோர் மூலம் தாக்கியதில் 64 அப்பாவிச் சிங்கள மக்கள் பலியாகியதையும், கடந்த 21ஆம் திகதி ஓட்டமாவடியில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் ஒரு பொலிஸ் வீரரும் 2 பொது மக்களும் கொல்லப்பட்டதுடன் 5 பொலிஸாரும், 15 பொதுமக்களும் படுகாயமடைந்தனர். இதில் முஸ்லிம் மக்களே பாதிக்கப்பட்டனர். இவ்வாறு பொதுமக்களை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்துவது ஒரு தற்செயல் நடவடிக்கையாக இருக்க முடியாது. இனங்களுக்கிடையில் இருக்கும் சுமுக நிலையைக் குழப்பியடிக்கும் நோக்கமாகவே கருத இடமுண்டு. இந்தத் தாக்குதல்களுக்கு உரிமை கோராத புலிகள், ஓட்டமாவடித் தாக்குதலில் பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்ட சம்பவத்தை மறைப்பதற்காகவே அதே தினத்தில் கஞ்சிக் குடிச்சாறு பகுதியில் அதிரடிப்படையினரின் வாகனத்தை இலக்கு வைத்து கிளைமோர் தாக்குதல் நடத்தினர். இதில் 10 அதிரடிப்படையினர் பலியானதாகப் புலிகளே வலிந்து செய்தி வெளியிட்டனர். ஒரே நாளில் ஓட்டமாவடியில் நடந்ததை மறைத்து கஞ்சிக்குடிச்சாறு சம்பவத்தைப் புலிகள் பிரச்சினைப்படுத்துவதில் நேர்மை இருப்பதாகத் தெரியவில்லை. கிளைமோர் குண்டுகளை வெடிக்கச் செய்வதற்கு வாய்ப்புக்களும் வசதிகளும் அதிகம் என்பதால், புலிகளின் தற்போதைய தாக்குதல்களில் கிளைமோர் தாக்குதலே பிரதான இடத்தை வகிக்கிறது. முன்னர் நீளமான இரு வயர்களை குண்டுடன் இணைத்து எடுத்துச் சென்று தூரத்தில் இருந்து கொண்டு பெற்றரியில் இணைப்புக் கொடுத்து வெடிக்க வைத்தனர். குண்டு வெடித்தது. அவ்விடத்துக்கு வரும் படையினர் நடத்தும் சோதனையில் நீளமான வயர்களையும் புலிகள் பதுங்கியிருந்த இடத்தையும் கண்டு பிடித்தனர். இப்போது வயர்கள் இல்லாமல், கிளைமோரையும் வாகனக் குண்டுகளை வெடிக்க வைக்கும் தொழில் நுட்பத்தைப் புலிகள் கையாண்டு வருகின்றனர். வாகனக் குண்டுகளை கைத் தொலைபேசிகளைப் பொருத்தி வெடிக்க வைப்பது இலகுவானதாக இருக்கிறது. அது போல் கிளைமோர் குண்டை தூரத்தில் இருந்து இயக்கும் கருவி (ரிமோட் கன்ரோல்) மூலம் இயக்குகின்றனர். இதை மக்களோடு மக்களாக நின்று கொண்டும் கடைகளில் இருந்து கொண்டும் செய்யலாம். கைக் கூலிகளிடம் கருவியைக் கொடுத்து குறித்த நேரத்துக்கு இயக்கும்படி கூறலாம். என்றளவில் புலிகளின் தாக்குதல்கள் தொடர்கின்றன. தற்போது படையினருக்கு தெரிய வந்திருக்கும் புதிய முறையான மிதி வெடிகளையும் இவ்வாறான கிளைமோர் தாக்குதலுக்கு பயன்படுத்தி வருகின்றனர். புலிகள் தமது சீருடையுடன் நின்று படையினரைத் தாக்கிவிட்டு ஓடித் தப்புவதை விடவும் மக்களோடு மக்களாக சாதாரண உடையில் நின்று கொண்டு தாக்குதல் நடத்துகின்றபடியால், தாக்குதல் ஒன்றின் போது தமக்கு அதை எதிர் கொள்வதும் பதில் நடவடிக்கையை எடுப்பதும் கடினமான காரியமாக இருக்கிறது என்று படை அதிகாரிகள் கூறுகின்றனர். படையினரின் இந்த நிலையைப் புலிகள் தமக்கு வாய்ப்பாக பயன்படுத்துகின்றனர். ஆக பொதுமக்களை தற்காப்பு கவசமாகவும் அரணாகவும் பயன்படுத்துவதால் எந்தவொரு தாக்குதலினதும் எதிர் விளைவுகளுக்கு மக்களே முகம் கொடுகின்றனர், மக்களே பாதிக்கப்படுகின்றனர்.

யாழ். மக்கள் படையினரின் புதிய நடைமுறைகளில் பெரும் சிரமப்படுகின்றனர் எனக் காட்டிக் கொள்ளும் ஊடகங்கள் அவ்வாறானதொரு நிலை ஏற்படக் காரணம் என்ன, அந்த நிலையைத் தோற்றுவித்தவர்களையும், அந்த செயற்பாட்டையும் கண்டிக்கத் திராணியற்றவர்களாகவே இருக்கின்றனர். படையினர் இந்தக் கட்டுப்பாடுகளை விதிக்காமல் விட்டால் தமது வாகனங்கள் பயணிக்கும் போது மக்களும் பாதிக்கப்படுவார்கள் என்பது ஒரு விடயம், மக்களின் போர்வையில் புலிகளுக்கு தாக்குதல் நடத்தவும் வாய்ப்பு அதிகம் என்பது இன்னொரு விடயம். பிரச்சினையை இவ்வாறு ஆராய்ந்து பார்ப்பது படையினரின் செயற்பாட்டை நியாயப்படுத்தும் முயற்சியென சிலர் கருதக்கூடும். தவறுகளைக் கண்டிக்கத் திராணியற்றவர்களின் இவ்வாறான விமர்சனங்கள் பொதுமக்களின் நலன் சார்ந்ததாக இருக்காது. மாறாக மக்களின் பாதிப்புகளையும் இழப்புக்களையும் மௌனமாக அனுமதிக்கும் செயற்பாடாகவே அமையும்.

பொது மக்களைப் பாதுகாக்காத, பொதுமக்களின் நலன்களில் அக்கறையில்லாத செயற்பாடுகளையும், தாக்குதல்களையும், எந்தத் தரப்பு செய்தாலும் அது பொதுவாக கண்டனத்துக்குரியதுதான். புலிகள் என்று நினைத்து மக்களை தாக்குவதும், மக்களுக்குள் மறைந்து கொண்டு படையினரைத் தாக்குவதும் தவறு. இது முடிவுக்கு வரவேண்டும்.

அலசுவது

- மதியூகி -

## அதிரடி அய்யாத்துரை



***என்னங்கோ*** முன்னம் ஒரு தடவை உங்களுக்குச் சொன்னனான் எங்கட கூத்தமைப்பு எம்.பி. ஜெய ஆனந்தமான மூர்த்தி தன்ர வீட்டுக்கு ஆர். பி.ஜி.தாக்குதல் நடத்தப்பட்டதை ஒரு பிரச்சினையாக எடுத்துக் கொண்டு தன்ர குடும்பத்துக்கு நாட்டில பாதுகாப்பு இல்லையெண்டும், தனக்கு குடும்பத்தோடை அசைலம் தர வேணுமெண்டும் எம்பசி எம்பசியாக ஏறி இறங்குறார் எண்டு. அப்ப எத்தினபேர் நம்புனியளோ தெரியாது. இப்ப என்ன நடந்திருக்குது தெரியுமோ அவரின்ர பெமிலி முதலில சுவிஸ"க்குப் போனவை. அவையை உங்க தங்க, அனுமதிக்க ஏலாது எண்டிட்டினமாம். பிறகு பிரான்ஸ"க்குக் கூட்டிக் கொண்டு போய் தஞ்சம் கோரினவராம். அவையும் நோ சிக்னல் காட்டிப்போட்டினமாம். இப்ப தஞ்சமே தஞ்சம் எண்டு எலிஸபெத் அம்மாவின்ர நாட்டிற்கு போயிருக்கினமாம் உங்கையும் உவையின்ர கேஸை பாரமெடுத்து அசைலம் கொடுப்பினமோ தெரியாது எண்டாலும், எங்கட ஜெய ஆனந்தமானவர் உதில ஜெயிச்சு தன்ர பெமிலியை உங்கையே செட்டில் பண்ணிப் போடவேணுமெண்டு பிடியாக நிக்கிறாராம். எம்.பி. ப்பதவியைக் கொண்டு ஒரு மாதிரி எம்பஸியில அழுது வீஸா வாங்கிப் போட்டன். திரும்பிப்போய் மீன்பாடும் நாட்டில குடியிருக்க முடியாது. எந்தப் புலியெண்டாலும் தன்மேல பாயும் எண்டமாதிரி சொல்லித் திரியிறாராம். ஏன் என்னாச்சு எண்டு அவரின்ர கோடினேட்டரைக் கேட்டால், அவர் சார்பில அறிக்கை விடவேணுமெண்டால் அதை நாங்களே விடுவம், அவர் கையெழுத்துப் போட்டுத் தந்திட்டுப்போனவர் அவர் பாணியில அறிக்கை விட கடிதத் தலைப்புகள் கைவசம் இருக்குது எண்டிறாருங்கோ, கடிதத் தலைப்புகளை வச்சுக் கொண்டு எப்புடி பொலிரிக்ஸ் பண்ணினம் பாத்தியளோ. உது தானுங்கோ பொலி.....ரிக்ஸ்ஸ"ங்கோ...

***மலட்டுப்*** பூ மரம் எப்புடி இருக்குமோ அப்புடி இருக்குதுங்கோ மல்லாவிப் பிரதேசம், உங்க பூக்கள் எண்டு நான் சொல்லிறது பிள்ளைகளைத்தானுங்கோ. உங்க ஏ.எல். படிக்கிற பிள்ளைகளைக் காணக்கிடைக்குதில்லையுங்கோ. எல்லாப் பிள்ளைகளையும் வளைச்சுப் பிடிச்சுக் கொண்டுபோய் கட்டாய பயிற்சி குடுக்கினமாம். உந்தப் பயத்தில சின்னப் பிள்ளையளும் நடுங்கிப் போய் இருக்கினமாம். கல்யாணம் கட்டிப் போட்டால் பயிற்சிக்குப் பிடிக்கமாட்டாங்கள் எண்டிட்டு ஏ.எல் படிக்கிற பிள்ளையல் எண்டு கூடப் பார்க்காமல் பிள்ளைகளுக்கு கல்யாணம் கட்டிவச்சுதுகளாம். இப்ப நிலமை தலைகீழாக மாறிப்போய் கல்யாணம் கட்டினதுகளையும் பிடிக்கினமெண்டு தாய், தகப்பன் ஒப்பாரிவச்சு அழுகினமாம். அது மட்டுமில்லையுங்கோ தங்கட பிள்ளைகளை விடுங்கோ எண்டு ரெண்டெழுத்தாரின்ர முகாம்களுக்கு முன்னாலை போய் நிண்டு பட்டினி கிடந்து அழுகிற பெற்றதுகளை துரோகிகளின்ர குடும்பம் எண்டும் சொல்லினமாம். வீட்டுக்கு ஒரு பிள்ளை எண்டு பிடிச்ச காலம்போய் வீட்டில் ஒரு பிள்ளையும் இருக்கக்கூடாது எண்டு பிடிக்கினமாம் இப்புடி சனம் சொல்லுதுங்கோ. பாவம் சனம் யாரிட்டப்போய் சொல்லிறது யார்வந்து பிள்ளைகளை மீட்டுத்தருவினம் எண்டு குளிப்பு மறந்து, பசி மறந்து பேய் பிடிச்சதுகள் போல அலையினமாம். உப்படித் திரிகிற சனத்துக்கு பக்கத்துச்சனம் வந்து ஆறுதல் சொல்லவும் பயப்படுகினமாம் எண்டு பட்சி ரொம்பவும் கவலையோடை சொல்லுதுங்கோ உதெல்லாம் தெரியாமல் உந்த சாத்திரவேந்தன் எம்.பி. இறுதியுத்தமெண்டும், தமிழீழம் மலர்வதை தாமதிக்கமாட்டம் எண்டும் ஊடகத்துக்கு உசுப்பேத்தி விடுற மாதிரி பேட்டி குடுத்துக் கொண்டு திரியிறாருங்கோ எண்டு பட்சி ரொம்பவும் கடுப்பா இருக்குதுங்கோ. பட்சியின்ர கோபமும் -பட்சி கண்டவையின்ர அழுகையும் வன்னிக்காட்டு மரங்களில் எதிரொலிச்சுக் கொண்டு இருக்கேக்க, மூக்குத் தோண்டிகளுக்கும், காது குடச்சல்களுக்கும் என்ன தெரியும், சனம் தங்களை வன்னியில் இருந்து விடுவிங்கோ எண்டு அழுகினம். எம்.பி.மார் தங்கட பெமிலிக்கு அசைலம் கேட்டு அழுகினம் என்ன செய்றது எல்லாம் சனத்தின்ர தலை எழுத்து.

***தொலைபேசியை*** அதிகமானோர் தொல்லைபேசியாகத்தான் பாவிக்கினமெண்டது உங்களுக்குத் தெரியும் அதற்காக மதிமயங்கி, மற்றவருக்கு தொந்தரவு செய்யுற மாதிரி தொலைபேசியைப் பாவிக்கக்கூடாதுங்கோ. உதை ஏன் சொல்லுறன் எண்டால் "தென்றலடிக்கிற அலைவரிசையிலை வீணை மீட்டுற நிகழ்ச்சி ஒலிபரப்பாகுதெல்லோ அந்த நிகழ்ச்சித் தொடர்பு நம்பரையும் அவை அறிவிக்கினம், ஏதும் செய்தி எண்டால் உந்த நம்பரிலை கதைங்கோ எண்டு, செய்தி, ஒண்டு இருக்கு எண்டு சிலபேர் வருகினமாம் "சரி சொல்லுங்கோ" எண்டால், வார்த்தைகளில என்னென்ன அசிங்கமான வார்த்தைகள் இருக்குதோ அதெல்லாத்தையும் ஞாபகமாக வரவழைச்சுப் பேசிப்போட்டு போனை அவையே துண்டிக்கினமாம், உவைக்கு இன்னொரு விஷயத்தைச் சொன்னால் வெட்கப்படுவினம் அவை அப்படி கதைக்கேக்க மறுமுனையில இருக்கிறவை ஆத்திரப்படாமல், பதில் சொல்லாமல் சிரிச்சுக் கொண்டே இருக்கினமாம். உது ஒருபக்கமெண்டால் தலைநகரில இதயமான வீணை நிகழ்ச்சியை ஆறரை மணியானால் சத்தமாக வச்சுக்கேட்டால் கடைக்குச்சனம் வருமெண்டதுக்காகவும், பிசினஸ் அமோகமாக நடக்கும் எண்டதுக்காகவும் கடைகளில போடினமாம் அதுமட்டுமல்லாமல் ஓட்டோக்களும் உந்த நிகழ்ச்சியை சத்தமாகப் போட்டுக்கேக்கினமாம். ஏன் சனம் உந்த நிகழ்ச்சியை உப்படி விரும்பிக் கேக்கினமெண்டால், முதல் காரணம் மண் வாசனையோடை விஷயங்களை பகிர்ந்து கொள்ளிறதும், தாங்கள் பேசவேணுமெண்டு நினைக்கிறதுகளையும் அவை பேசினம் எண்டதுக்காகவும்தானாம் சனம் விரும்பிக் கேக்கினமாம் எண்டு கடைக்காரர் சொல்லினம் உந்தத் தொல்லை பேசிக்காரர் கடைக்கார்களின்ர கருத்துக்கு என்ன சொல்லப்போகினமோ...

# காதல்

# போவோம் ரசிப்போம்




காதலர் தினமும் வந்துபோய் விட்டது. அநேக வாசகர்கள் "போவோம் ரசிப்போம்" பகுதியில் காதலைப் பற்றி ஏன் எழுதவில்லை என்று மிகுந்த உரிமையுடன் கேட்டிருந்தார்கள். நியாயமான கேள்விகள் தான். என்றாலும், காதலர் தினத்தை மையமாகக் கொண்டு எல்லோரும் எழுதும்போது 'போவோம் ரசிப்போம்' பகுதியும் அதை எழுதினால் என்ன வித்தியாசம் இருக்க முடியும். காதலைப் பற்றி எப்போது எழுதினாலும் அது சாலப் பொருத்தமாகத்தான் இருக்கும். மனிதன் உருவாகி நான்கு லட்சம் ஆண்டுகள் ஆகின்றன என்றால், காதலும் நான்கு லட்சம் ஆண்டுகள் பழமையானது. இன்னும் முதுமையடையாமல் காதல் என்றும் இளமையோடும், தேடலோடும் தான் இந்த உலகத்தில் இருக்கிறது. எதிர்காலத்திலும் உலகமும் உயிரினமும் இருக்கப்போகும் அத்தனை வருடங்களுக்கும் காதல் இருக்கப்போகிறது.

காதலைப் பற்றி எழுதுவதென்றால் ஒரு வாரம் போதாது. இது கூட ஒரு காரணம். கடந்த ஐம்பது வாரங்களாக தொடரும் 'போவோம் ரசிப்போம்' பகுதியில், அநேகவாசகர்கள் கேட்டுக் கொண்டபோதும் காதலைப் பற்றித் தொடாமல் இருந்ததற்கு காரணம், காதலைக் கொண்டாட ஒரு 'வலைன்டைன் டே போதுமா என்பதுதான் என் கேள்வி. கல்யாணத்துக்குப் பிறகும் மனைவியை கணவனும், கணவனை மனைவியும் காதலிக்க வேண்டும். அதுதான் காதல், காதலின் முற்றுப்புள்ளி திருமணமாக இருக்கக்கூடாது. காதலன் - காதலி எப்போது கணவன் மனைவியாகிறார்களோ அப்போதே காதல் முகவரி மாற்றப்படுகிறது. கணவன் - மனைவி இருவருமே காதலன் காதலியாக இருக்கலாம். அது தப்பு என்றோ சமூகச் சீரழிவு என்றோ எங்கும் குறிப்பிடவில்லை.

காதலுக்கும் - காமத்துக்கும் நூலிலை இடைவெளிதான். காதல் எல்லைகளைத் தாண்டி காமத்துக்குள் தள்ளி விடுகிறது. காதலால் காதலிக்கப்படாதவர்களுக்கு காமம் வடிகால் மட்டும்தான். அவர்களால் காதல் களங்கப்படுத்தப்படுகிறது. காதலில் வெற்றிகளை விட தோல்விகளே அதிகமாக இருப்பதற்கு இதுகூட ஒரு காரணமாக இருக்கிறது. காதல் மரணத்தை மிஞ்சியது. இந்த மகத்துவம் தெரியாமல், காதலின் தோல்வி மரணத்தைப் போதிக்கிறது என்று காதலில் தோற்றுப்போனவர்கள் கூறுகின்றபோது நகைப்பாக இருக்கும். அவர்களிடம் நான் கேட்க நினைப்பதெல்லாம் காதல் ஒருவரிடம் மட்டுமே வந்து போகிறது என்ற பிடிவாதத்தை மாற்றிக் கொள்ளுங்கள். காதல் வருவதுமில்லை, போவதுமில்லை. அது நிகழ்கிறது. காதல் அலைவரிசை இருப்பவர்களுக்கிடையே காதல் நிகழ்கிறது. இந்த நிகழ்ச்சி ஒருவரோடு மிக விசுவாசமானதாக இருக்க வேண்டுமென்ற விருப்பமும், அதைப் பாதுகாக்கும் வல்லமையும் இருப்பதும் தேவையானதுதான். ஆனால், ஒரே அலைவரிசை இல்லாமல் மாதிரி அலைவரிசைகளை நீங்கள் கட்டாயப்படுத்துவதும் காதலின் தோல்விக்கு ஒரு காரணமாகிறது.

காதல் எங்கே வெற்றி பெற்றது, எங்கே தோல்வியடைந்தது என்பதைப் பற்றி பக்கம் பக்கமாக விபரித்துக் கொண்டே போகலாம். காதல் ஒரு பெரும் ஊற்று. அது ஊறிக் கொண்டே இருக்கும். காதலில் மிகப் பெரும் துயரம் நிராகரிப்பது. ஒருவர் நம்மைக் கொலை செய்ய முயற்சிக்கலாம். இன்னொருவர் "செத்துப்போ" என்று திட்டலாம். இன்னொருவர் "நம்மைப்பிடிக்கவில்லை" என்று முகத்தில் அறைந்தாற் போல எச்சி உமிழலாம். அதையெல்லாம் சகித்துக் கொள்ள முடியும். ஆனால், காதலால் நிராகரிக்கப்படுகின்றபோது அல்லது ஏமாற்றப்படுகின்றபோது ஏற்படுகின்ற வலியை தாங்கிக் கொள்ளவே முடியாது. அதையும் தாங்கிக் கொண்டு இன்னொரு புதிய வாழ்க்கையை வாழ்ந்து பார்க்க பக்குவம் இல்லாதவர்கள், காதலிக்காமல் இருப்பதே மேல். ஏன் என்றால்




காதல் சுகங்களைத் தருவது போல் சில சமயம் துக்கங்களையும் தருகிறது. சுகங்களை விடவும் துக்கங்கள் பல மடங்கு அதிகளவாக இருக்கும்.

காதலில் பெண்கள் தோற்றுப் போகிற விகிதாசாரம் மிகக்குறைவுபோல் தெரிகிறது. காதல் கைகூடாத போதும், பெண்கள் இன்னொரு திருமணத்துடன் வாழ்ந்து விடுகிறார்கள் என்று ஆண்கள் நினைக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை பெண்கள் வலிகளைத் தாங்கிக் கொண்டு வாழப்பழகிக் கொள்கிறார்கள் என்பதுதான் உண்மை. ஆண்கள் வலிகளை வெளிப்படுத்தி ஆறுதல் தேடுகிறார்கள். பெண்கள் தங்களுக்குத் தாங்களே ஆறுதல் சொல்கிறார்கள்.

"எனக்கு ஒரு காதலி இருந்தாள்" என்று கணவன் மனைவியிடம் துணிந்து சொல்லிவிட முடிகிறது. எந்த மனைவியாலும் எனக்கு ஒரு காதலன் இருந்தார் என்று சொல்ல முடிவதில்லை.

பல பெண்கள் என்னை விரும்புகிறார்கள் என்று கணவன் மனைவியிடம் ஒரு ஈர்ப்புக்காக கூற முடிகின்ற இந்த சமூகத்தில், "கணவனிடம் மனைவி என்னைப் பல ஆண்கள் விரும்புகிறார்கள்" என்று சொல்ல முடிவதில்லையே. இந்த சமூக அமைப்புக்குள் பெண்கள் எப்படி தங்கள் காதலைப் பற்றியும், அது தந்த வலிகள் பற்றியும் கணவனோடும், குடும்பத்தோடும் பகிர்ந்து கொள்ளமுடியும்.

காதலில் வலிகண்ட ஆண்கள், தாடி வளர்த்து மது அருந்தி தெருவில் விழுந்து கிடந்து உளர முடியும். அதை ஒரு கேவலமான பார்வையோடு கடந்து போகும் இந்தச் சமூகம், அப்படி ஒரு பெண் கிடந்தால் எப்படிப் பார்க்கும், என்னென்ன கதை பேசும், எத்தனை பழிச்சொற்கள் வந்து விழும். பெண்களுக்கு ஆண்களை விடவும் முதல் எதிரி சக பெண்கள் தான். காதலின் காயமும் வலியும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒரே அளவானதுதான்.

காதல் ஒருவருக்கு ஒரே ஒரு தடவைதான் நிகழும் என்று கூறுவதைக் கேட்டிருக்கிறேன். நானும் அப்படி நம்பியதுண்டு. ஆனால், அது பொய். காதல் இன்னொரு காதல் நம்மை காதலிக்கும் வரையும் காதல் இருந்து கொண்டே இருக்கிறது. நீட்டி முடிக்காமல் சுருக்கமாகச் சொன்னால், என்னை ஒருத்தி காதலிப்பதாகச் சொன்னாள், நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அவளின் வற்புறுத்தல் தொடர்ந்தது பின்னர் நானும் காதலித்தேன். இறுதியில் இன்னொரு வசதியானவனுடன் என் காதலி கல்யாணமாகிப் போய்விட்டாள். துக்கமும், வலிகளும், என்னை மிகவும் வாட்டியது. பின்னர் என்னை நானே தேற்றிக் கொண்டேன். இப்போது என் மனைவியை காதலித்துக் கொண்டு வாழ்கிறேன். இது எப்படி எனக்குச் சாத்தியம். முதல் காதல் தோல்வியோடு நான் இறந்து போயிருக்க வேண்டாமா? ஏன் அப்படிச் செய்யவில்லை. ஏன் அப்படிச் செய்ய வேண்டும், என்னை ஏமாற்றியது அவளே தவிர, காதல் இல்லையே. என் காதல் அப்போதும் என்னுடன்தான் இருந்தது. வலிகளோடு இருந்த என் காதலுக்கு மருந்து தடவியது என் மனைவியும், அவள் கொண்டிருந்த என் மீதான காதலும். ஆக ஒரு மரணம் காதலைப் புனிதப்படுத்தாது. வாழ்தலே காதலுக்குச் செய்யும் கைமாறு. நான் முன்னர் காதலைப் பற்றி எழுதிய கவிதை ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது.

"காதல்
புரிந்தவருக்குப் பூக்கடை
புரியாதவருக்குச் சாக்கடை."

என் முதல் காதல் அவளைப் பொறுத்தவரை சாக்கடை. என் மனைவி வந்த பிறகு எனக்குப் பூக்கடை. ஒவ்வொருவருக்கும் காதல் இப்படித்தான். காதல் தனது இடத்தை விட்டு இறங்கி வருவதுமில்லை, போவதுமில்லை. அது ஜோதியாய் பிரகாசித்துக் கொண்டே இருக்கிறது. காதல் மேல் எனக்கு எப்போதும் ஒரு மரியாதை உண்டு. ஏன் என்றால் காதலால்


**காதலில் வலிகண்ட ஆண்கள், தாடி வளர்த்து மது அருந்தி தெருவில் விழுந்து கிடந்து உளர முடியும். அதை ஒரு கேவலமான பார்வையோடு கடந்து போகும் இந்தச் சமூகம், அப்படி ஒரு பெண் கிடந்தால் எப்படிப் பார்க்கும், என்னென்ன கதை பேசும், எத்தனை பழிச்சொற்கள் வந்து விழும். பெண்களுக்கு ஆண்களை விடவும் முதல் எதிரி சக பெண்கள் தான். காதலின் காயமும் வலியும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒரே அளவானதுதான்.**


சாதியை, மதத்தை, சமூக ஏற்ற இறக்கத்தை தகர்த்துப் போட்டு விட முடிகிறது. சமூக மாற்றமே காதலின் ஆரம்பப் புள்ளியிலிருந்து ஆரம்பிக்கிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் மட்டுமா காதல் என்றால் இல்லை, அன்பு கொண்ட எல்லோரிடத்திலும் காதல் இருக்கிறது. நானும் நீங்களும் காதலால் வந்தவர்கள்தான். காதல் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று கட்டளை இடுவதுமில்லை. கட்டுப்படுவதுமில்லை. காதல் நிகழாத மனிதம் எப்படி இருக்க முடியும் என்று வியந்துகொள்வேன்.

உலக மகா சர்வாதிகாரி என்று வர்ணிக்கப்படும் ஹிட்லருக்கும் ஒரு காதலி இருந்தாள், சைவக்கடவுள் சிவன் ஆண் பாதி பெண்பாதியாக அர்த்தநாரீஸ்வரராக மாறி ஆணுக்கும் பெண்ணுக்கும் சம அந்தஸ்து காட்டியதும் காதல்தான்.


(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)



## சிங்கப்பூரில் தங்குமிட வசதி



சிங்கப்பூரில் விடுமுறையைக் கழிக்கவும், திருமணத்துக்கு வருபவர்களுக்கும் எல்லா வசதியுடன் கூடிய முழு வீடு குறைந்த வாடகைக்குக் கிடைக்கும். திருமணத்துக்கு வருபவர்களுக்கு, திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த கட்டணத்தில் இலங்கை முறைப்படி செய்து தருவோம். மற்றும் தேவைப்படும் உதவிகளையும் செய்து தருவோம்.


மேலும் விபரத்துக்கு:-

எந்த நேரமும் தொடர்பு கொள்ள வசதியாக கைத் தொலைபேசி எண்: 00,65,97514941 என்ற எண்ணில் அப்புவிடம் தொடர்பு கொள்ளவும்.

**LINGAM WEDDING SERVICES**
153, Jalan Jarak, , Singapore 809281

## நிரூபித்து காட்டும் என் மலையாள மந்திர சக்தி
### அதிசயம் ஆனால் உண்மை





46 வருட காலமாக என் புகைப்படத்தை பத்திகையில் அறிமுகப்படுத்துவது எனது உண்மையான சேவை என்பதற்கு எடுத்து காட்டாகவும் மேலும் எனது மாந்திரீக ஜோதிடம் கலந்த நாளாந்த சேவையைக் கண்டறிய இதோ எனது வெப்தளம் www.drpksamy .com

**குறிப்பாக மாந்திரீக துறையில் வாங்கும் பணதிற்கு ரசீது கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே**

**வெளிநாட்டவருக்கு விஷேச 24 மணித்தியால தொலைபேசி வசதி உண்டு.**

**ஜேர்மனி அன்பரின் மடல்** மனித தெய்வமாகிய ஐயாவுக்கு ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையால் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எனது குடும்பத்தை 700KM அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**லண்டன் அன்பரின் மடல் எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்** பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு: என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல் 39 வயதில் அதிசயத் திருமணம்** பெருமதிப்பும் மரியாதையும் கொண்டஐயா, எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம் உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடான கோடி நன்மைகள்

**குருணாகல் அன்பரின் மடல் நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி** தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப் பட்ட வண்ணம் இருந்ததால் உங்களிடம் பரிகாரம் நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமணம் நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்.

**பண்டாரவளை அன்பரின் மடல் தீராத தலைவலி தீர்த்துவிட்டது** மதிப்பிற்குறிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத தலைவலியைக் குணமாக்கி என்னைப் பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்.

**சுவிஸ் அன்பரின் மடல் குறிப்பிட்ட நோக்கில் குறிப்பிட்ட பயணம் வெற்றி** அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாட்டுக்கு செல்ல முடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தைக் கைகூட வைத்த உங்களுக்குப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்.

**இத்தாலி அன்பரின் மடல் சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி** வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் நானும் கணவரும் பிரிய நேர்ந்த சமயம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்.

**பதுளை அன்பரின் மடல் போதை அடிமைதனத்திலிருந்து விடுபட்டவர்** அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதை பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்தில் புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்.

**கனடா அன்பரின் மடல் ஜாதகத்தில் கூறியது பலிதம்** மரியாதைக்குரிய ஐயா உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் என கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்.

**யாழ்ப்பாணம் அன்பரின் மடல் அதிசய அக்னி குண்டல பூஜை** மதிப்பு, மரியாதை கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதம் தோறும் விசேஷமாக நடைபெறும் அக்கினிகுண்டல பூஜையில் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகின்றோம் ஐயா.

**Prof.P.K.SAMY(J.D.G.A.N.) JP ஐயா**
SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM.
NO-162 KOTAHENA STREET, MAYFIELD ROAD, COLOMBO-13
011-2470615,011-2342463,011-2342464, FAX-0094-11-2344831
நுவெரலியா கிளை-33 Daily Fair Complex 052-2222508-



## உயிர் காக்க உதவுங்கள்



கந்தப்பளை பாக் தோட்டத்தைச் சேர்ந்த ஆர்.கே.சுரேஷ் (வயது 47) என்றழைக்கப்படும் ஆர்.கோகிலவாணன் சுரேஷ், கடுமையான இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். இவரின் மூன்று இருதய இரத்த நாளங்கள் முழுமையாக பாதிக்கப்பட்டு, செயலிழந்துள்ளதுடன் இவரது இருதயத்துடிப்பு நிமிடத்திற்கு 80 வீதத்திலிருந்து தற்போது 45 வீதமாகக் குறைந்துள்ளது. இதனால் உடனடியாக 'பைபாஸ்' சத்திரசிகிச்சையினை செய்து கொள்ளுமாறு வைத்திய நிபுணர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளார். மேற்படி சிகிச்சைக்கு மாத்திரம் மூன்றரை இலட்சம் ரூபா செலவாகும் என வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். எனவே இவரின் உயிரைக் காப்பாற்ற இவரது குடும்பத்தினர், மனிதாபிமானம் கொண்ட பரோபகாரர்களிடமிருந்து நிதியுதவிகளை எதிர்பார்க்கின்றனர்.

நன்கொடை வழங்க விரும்புவோர்:- நுவரெலியா மக்கள் வங்கிக் கிளை, ஆர்.கே.சுரேஷ் சேமிப்பு கணக்கு இல. 0134 - 20016 - 2089773 என்ற இலக்கத்திற்கு உதவி தொகைகளை அனுப்பி வைக்குமாறும் காசோலைகள் மூலம் உதவ விரும்புவோர்:- ஆர்.கே.சுரேஷ் பாக் எஸ்டேட், கந்தப்பளை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் உண்மையென உறுதி செய்கிறேன்.



ஆர்.கே.சுரேஷ்,
கந்தப்பளை.

# அப்பாவித் தமிழர்கள் மீது அரச படையினர் நடத்திய அடாவடித்தனம்



பொலிஸ்காரர்களால் 1981 ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி எரிக்கப்பட்ட யாழ். பொதுநூலகம்.

## தமிழர்களுக்குப் பிரச்சினை உண்டு

**இந்த நாட்டுத் தமிழ் மக்களுக்குத் தலைமை கொடுத்துவந்த தமிழ் மிதவாதக் கட்சிகள் ஏமாற்றப்பட்டமையே தமிழ் இளைஞர்களை ஆயுதமேந்தத் தூண்டியது என்பதை விலாவாரியாக விளக்கும் ஆய்வறிக்கையின் மற்றொரு பகுதி இவ்வாரம் இங்கே பிரசுரமாகின்றது. சிங்களத் தலைமைகள் தமிழ் பேசும் மக்களுக்குத் தொடர்ச்சியாக இழைத்து வந்த அநீதிகள், அட்டூழியங்களை விளக்கி ஈ.பி.டி.பி. சார்பில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொள்ளும் முன்னாள் யாழ். மாவட்ட எம்.பி., எஸ்.தவராஜா நீண்ட ஆய்வறிக்கை ஒன்றினைச் சமர்ப்பித்திருந்தார். "தமிழர்களுக்கும் பிரச்சினை உண்டு" என்ற தலைப்பில் கடந்த ஜனவரி மாதம் 18ஆம் திகதிய இதழில் இந்த ஆய்வறிக்கையின் முதல் பகுதி பிரசுரமாகியிருந்தது. இன்னும் சில வாரங்களுக்கு இந்த ஆய்வறிக்கை தொடர்ச்சியாக வெளிவரும்.**

(சென்ற வாரத் தொடர்ச்சி)

1961ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாணக் கச்சேரிக்கு முன்பாக, தமிழரசுக் கட்சியின் சுமார் 200 தொண்டர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சத்தியாக்கிரக இயக்கம், வயது முதிர்ந்த ஆண்கள், பெண்கள் உட்படப் பல்வேறு மக்கள் பிரிவினரிடமிருந்து பெருந்திரளைக் கவர்ந்திழுத்தது. தமிழ் காங்கிரஸ் அங்கத்தவர்கள், சமசமாஜக் கட்சியினர், யாழ்ப்பாண மேயர் ரி.எஸ்.துரைராஜா, தொழில்சார் நிபுணர்கள், வர்த்தகர்கள் அனைவரும், பொலிஸாரின் கடுமையான கெடுபிடிகளுக்கு மத்தியிலும் தமது ஆதரவாளர்களுடன் நேரடியாகப் பங்குபற்றி, தமது பலமான ஆதரவை இச் சத்தியாக்கிரக இயக்கத்துக்கு வழங்கினர்.

இந்தச் சத்தியாக்கிரக இயக்கத்தோடு தம்மைப் பூரணமாக அடையாளப்படுத்திக் கொண்ட முஸ்லிம் சமூகத்தைப் பற்றி நான் விஷேடமாகக் குறிப்பிட வேண்டும். சட்டத்தரணிகள், வர்த்தகர்கள் மற்றும் கல்முனை எம்.பி. எம்.சி.அகமட், மட்டக்களப்பு எம்.பி. மார்க்கான்மார்க்கார் இவர்கள் அனைவருமே, முக்கிய பங்கு வகித்தனர்.

சத்தியாக்கிரக இயக்கத்தின் உச்சக் கட்டத்தின்போது, திரு.செல்வநாயகம் என்ன கூறினாரென்பதிலிருந்து சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

***"தெற்கிலங்கையின் அரசியல் கட்சிகள், தமிழர் பிரச்சினையை, சிங்கள வாக்காளர்களின் உணர்வுகளோடு விளையாடி, அதிகார ஆசனங்களில் தம்மை அமர்த்தக்கூடிய ஒரு விடயமாகக் கணித்துக் கொள்வதால், இக் கட்சிகள் அல்லது அவற்றின் அரசியல்வாதிகள் எமது கோரிக்கைகளில் நீதியைக் காண மறுக்கிறார்கள் அல்லது அவர்களால் கண்டுகொள்ள முடியவில்லை."***

***"வடக்கு, கிழக்கு மாகாண மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதோடு, தன்னை வெறுமனே ஓர் அரசியல் கட்சியல்லவென்றும் ஒரு விடுதலை இயக்கமென்றும் கூறிக்கொள்ளும் தமிழரசுக் கட்சிக்கு, திறந்திருக்கும் மூன்று வழிகளில் ஒன்று உண்டு. சரணடைவது முதலாவது வழி, இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சியில் எழுவது, மூன்றாவது காந்திய முறையான சத்தியாக்கிரகத்தையும் சிவில் ஒத்துழையாமை இயக்கத்தையும் மேற்கொள்வது."***

***"முற்றுமுழுதான சரண் என்ற முதலாவது விடயம், எமது மக்களுக்கு அவமானமாக இருப்பதோடு, இன அழிப்பென்ற அரசியல் குற்றச் செயலுக்கு உதவியும் ஒத்தாசையும் அளிப்பதாக அமையும். போராட்டத்தில் கிளர்ந்தெழுவது என்ற இரண்டாவது விடயம், நடைமுறைச் சாத்தியமற்றதும் ஒழுக்கமற்றதுமாகும். காந்தியமுறையென்ற மூன்றாவது விடயம் எமக்கு விடப்பட்டிருக்கிறது. நாம் என்ன செய்ய வேண்டுமென்று எம்மை விமர்சிப்பவர்கள் நினைக்கிறார்கள்? எமது பிரிக்க முடியாத உரிமைகளுக்கான நீதியான போராட்டத்தை நாம் கைவிட வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்களா?"***

***"பாராளுமன்றத்தில் எமது கட்சியை விட இனப்பெரும்பான்மை அதிகமாக இருப்பதால், எதிர்ப்புத் தெரிவிக்கும் பாராளுமன்ற முறை தோல்வியுற்றுள்ளது. எனவே எமது கட்சி, பாராளுமன்றத்துக்குப் புறம்பான நடவடிக்கையில் மீள ஈடுபட விரும்புகிறது. அவை சர்வ சாதாரணமானவையல்ல. இந்த வழிமுறையைப் பின்பற்றுவதன் மூலம் கட்சியும் அதன் ஆதரவாளர்களும் தமது எதிரிகளுக்குத் தீங்கு விளைவிக்காமலேயே துயரங்களைச் சந்திக்க வேண்டிய நிலையேற்படும். கட்சி அங்கத்தவர்களும் அதன் ஆதரவாளர்களும் கைது செய்யப்படலாம், தடுத்து வைக்கப்படலாம் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்."***

இரு மாதங்களாக நடைபெற்றுவந்த சத்தியாக்கிரகத்தைப் பொலிஸார் பலாத்காரத்தைப் பாவித்து முடிவுக்கு கொண்டு வந்தனர். சத்தியாக்கிரகிகள் சப்பாத்துகளால் மிதிக்கப்பட்டனர். பொல்லுகளால் தாக்கப்பட்டனர். உதைக்கப்பட்டு வெளியே இழுத்துச் செல்லப்பட்டனர். இழந்த தமது உரிமைகளை மீளப்பெறுவதற்காக நடத்தப்பட்ட இந்த வலுவான அகிம்சை இயக்கம், வன்செயல் பாவனையாலும், அதனையடுத்து ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு தமிழ்த் தலைவர்கள் கைது செய்யப்பட்டமையாலும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

பொலிஸாரின் கொடூரம் பற்றி 'ரைம்ஸ் ஒப் சிலோன்' என்ற மாலைத் தினசரியில் 1961ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி வெளியான ஆசிரியர் கருத்திலிருந்து நான் மேற்கோள் காட்டுகின்றேன்.

'ஏர்ல் ரசலும், சமஷ்டிக் கட்சியினரும் அகிம்சை ரீதியிலானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் ரசலும் அவரைப் பின்பற்றுபவர்களும், ஒழுக்கம் மிகுந்த லண்டன் பொலிஸாரைக் கையாள வேண்டிய நிலை ஏற்பட்டது. இதேவேளை சமஷ்டிக் கட்சி இலங்கைப் பொலிஸாரோடு தமது நிலைமைகளைக் கையாள வேண்டி ஏற்பட்டது.

தமிழர்களின் கோரிக்கைகளை விமர்சித்து வந்த அப்போதைய அரசாங்க எம்.பி.யான எஸ்.டி.பண்டாரநாயக்க, நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்காக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பின்னர் தெரிவித்ததை கீழே குறிப்பிடுகின்றேன்.

***"வடக்கு கிழக்குப் பகுதிகளிலுள்ள தமிழர்களுக்கு தமிழ் மொழியைப் பயன்படுத்தும் நியாயமான உரிமையை வழங்க வேண்டியது தேசபக்தியுள்ள சிங்கள மக்களின் கடமையாகும். இந்த உரிமையை வழங்காவிடில் தீர்வுக்கான ஒரே ஒரு மாற்று நடவடிக்கையாக நாட்டுப் பிரிவினையே அமையும்.. அதாவது கொரியா, வியட்நாம், கொங்கோ போன்ற நாடுகளில் நடைபெற்றதைப் போன்ற பிரிவினையே அவர்களுக்கு இருக்கக் கூடிய ஒரே வழியாகும்."***

பதில் அரசாங்க அதிபர்களிலொருவரும் சிங்களவருமான நிசங்க விஜயரத்ன, செய்திப் பத்திரிகைகளுக்கு தெரிவித்ததாகக் கூறப்படுவதை இங்கு குறிப்பிடுகின்றேன்.

***"சத்தியாக்கிரகிகள் பண்பாக நடந்து கொண்ட பெரிய மனிதர்கள் ஆவர்.***

தமது சரியான இடத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தமிழர்கள் நடத்திய அமைதியான எதிர்ப்பினை அரசு கையாண்ட முறை, தமிழ் சமூகத்தின் மனங்களில் குணப்படுத்த முடியாத ஆழமான காயங்களை விட்டுச் சென்றிருக்கின்றது. தமது சமூகத்தின் முதிர்ந்த பரம்பரையினர் கையாளப்பட்ட முறையைப் பார்த்துக் கொண்டிருந்த அக் காலத்தைய வளரிளம் பருவத்தினர் மத்தியில், ஆழமாக வேரூன்றிய தாக்கம் ஒன்றினை அது விட்டுச் சென்றது. இந்த வளரிளம் பருவத்தினர் அடுத்த தசாப்தத்தில் தீவிரவாதிகளானார்கள். இதன் பின்னர் ஊரடங்குச் சட்ட நேரத்தில், படைவீரர்களின் ஒழுக்கமற்ற நடவடிக்கைகள் தொடர்ந்தன. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் போர்வையில் மரணத்தையும் காயங்களையும் உண்டு பண்ணும் துப்பாக்கிப் பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றன. மென்பானங்கள், சிகரெட்டுகள், உண்ணக்கூடிய பொருட்கள் ஆகியவை கடைகளிலிருந்து கொள்ளையடிக்கப்பட்டன. கடைக்காரர்கள் பணம் தருமாறு கேட்ட போது, "செல்வநாயகத்தைக் கேளுங்கள்" என்று பதில் அளிக்கப்பட்டது.

செவிப்புலனற்ற சலவைத் தொழிலாளி ஒருவரை வீதியில் வைத்துச் சுட்டுக் கொன்ற சிப்பாய் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு, அப்போதைய பருத்தித்துறை மாஜிஸ்திரேட் எஸ்.என்.இராஜதுரை பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இந்தச் சிப்பாய் உடனடியாகவே குருநாகலிற்கு இடமாற்றம் செய்யப்பட்டார். இராணுவத்தினர் மீது குற்றஞ் சுமத்தி தொடரப்பட்ட பல நீதிமன்ற வழக்குகள், அரசாங்கத்தின் உத்தரவின் பேரில் கொழும்பிலுள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட்டன. இதன் மூலம் பூரண விசாரணைக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன. சில வேளைகளில் வறிய விவசாயிகள் கொழும்புக்குச் சாட்சிகளாக அழைக்கப்பட்டிருந்ததாலும் இந்த இடையூறுகள் ஏற்பட்டன.

இவ்வாறான ஒவ்வொரு சம்பவங்களும் தமிழர்களில், குறிப்பாக இளைஞர் பரம்பரையினரின் மத்தியில் ஆழமான வடுவினை விட்டுச் சென்றன என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே இவை அனைத்தையும் நான் குறிப்பிடுகின்றேன்.

தலைவர் அவர்களே, 1956ஆம் ஆண்டிலும் 1958ஆம் ஆண்டிலும் தமிழர்களுக்கு எதிராகக் காடையர்கள் கும்பலினால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்களும், 1961ஆம் ஆண்டில் அகிம்சை ரீதியான எழுச்சியை நசுக்குவதற்கு படையினர் கட்டவிழ்த்து விட்ட வன்செயல்களுக்கு மத்தியிலும் எவ்விதமான பலாத்கார செயற்பாடுகளிலும் தமிழர்கள் ஈடுபடவில்லை என்பதை நான் திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். ஆனால், சட்டவிரோதச் சம்பவங்களுக்கு எதிராக தமக்குப் போதிய பாதுகாப்புக் கிடைக்குமென்று அரசின் மீது நம்பிக்கை கொள்ள முடியாதென்று தமிழர்கள் உணரத் தலைப்பட்டனர்.

1962ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சதிமுயற்சி அம்பலத்திற்கு வந்தபோதும் அதனைத் தொடர்ந்து, மிக உயர்ந்த தரத்தில் உள்ள மக்களைச் சம்பந்தப்படுத்தி நடைபெற்ற உணர்ச்சிபூர்வமான விசாரணைகள் நடந்தபோதும், இந்த நாட்டின் பொறுப்பான பிரஜைகள் என்ற வகையில் தமிழ் அரசியல் சமூகம் எவ்வித எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை.

1963ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து 1965ஆம் ஆண்டு மார்ச் மாத பொதுத் தேர்தல் வரை தமிழ் அரசியல் சமூகம், இருக்கக் கூடிய சகல ஜனநாயக ரீதியான், அகிம்சை வழியிலான பாராளுமன்றத்துக்குப் புறம்பான செயற்பாடுகளை மேற்கொண்டது. நாளுக்கு நாள் அவர்களிடமிருந்து பறித்தெடுக்கப்பட்ட உரிமைகளை, மீளப் பெறும் ஒரே நோக்கோடு இத்தகைய செயற்பாடுகளில் தமிழ் அரசியல் சமூகம் ஈடுபட்டது. இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக தொந்தரவுகள், பந்தோபஸ்து படைகளின் ஆத்திரமூட்டல்கள், அரசாங்கத்தின் சட்ட நடவடிக்கைகள், பதிலடி கொடுக்கும் மனோபாவம் போன்றவை மேற்கொள்ளப்பட்டன. 1963ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அரசாங்க அமைச்சர் ஒருவருக்குப் பருத்தித்துறையில் காட்டப்பட்ட "கறுப்புக்கொடி" எதிர்ப்புக்கு பதிலாக அனுப்பப்பட்ட கடுமையான திறைசேரி சுற்றுநிருபம் ஒன்றினை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இந்த அமைச்சர் கொழும்பு திரும்பியதும், அரசாங்க ஊழியர்களுக்குச் 'சிங்களம் மட்டும்' என்பதனை கடுமையாக அமுல்படுத்துமாறு வலியுறுத்தி அந்தச் சுற்றுநிருபம் அனுப்பப்பட்டிருந்தது.

கற்பித்தல் மொழியாக பாடசாலைகள் சுயபாஷை (தாய்மொழி) அமுல்படுத்தப்பட்டதால் 'வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே பல தமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட்டமையும், தமிழ் மொழி மூலக் கற்கை நெறிகள் இல்லாமல் செயற்பட்டமையும், வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு 2000 சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானமும் அக்கால கட்டத்தின்போது, தமிழர் சமூகத்தைப் பாதித்த அரசாங்கத்தின் மற்றுமோர் நடவடிக்கையாகும்.

அரசாங்கத் துறைகளில் 'சிட் முறை' மூலம் வேலை வழங்குவது அறிமுகப்படுத்தப்பட்டதால், இவ்வாறான முறையின் கீழ் தமிழர்களுக்கு வேலை கிடைக்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போனமை மேலும் கவலையை ஏற்படுத்தியது.

வேலைத் தலங்களில் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு எதிராக சிங்களச் சகோதரர்கள், குறிப்பாக கீழ்மட்ட ஊழியர்கள் விடுத்த மிரட்டல்கள், தமிழர்களை தமது தொழில்களை விட்டு வெளியேற்றும் நோக்கைக் கொண்டிருந்தது. இதற்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறியமையும் தமிழர்கள் மத்தியில் கவலையை அதிகரித்த மற்றுமொரு விடயமாகும்.

இத்தகைய கசப்பான சகல அனுபவங்களுக்கு மத்தியிலும், 1965 மார்ச் பொதுத் தேர்தல் தமிழர்களுக்கு நம்பிக்கை கொடுத்த ஒரு ஒளிக்கீற்றாக மாறியது. இந்தத் தேர்தலை அடுத்து டட்லி சேனாநாயக்காவுக்கும் செல்வநாயகத்துக்குமிடையில் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது.

அரசாங்கத்தை அமைப்பதற்கு ஆதரவளிப்பது என்று இலங்கை தமிழரசுக் கட்சி அளித்த உறுதிமொழியோடு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இது ஐ.தே.க.வுக்கும் இலங்கை தமிழரசுக் கட்சிக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒரு அரசியல் திருமணமாகும். ஆனால் தேனிலவு, காலவோட்டத்தில் தாக்குப் பிடிக்க முடியாமல் போனது.

இந்த ஒப்பந்தம் கருத்து ரீதியாக, பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட கொள்கைகளைக் கொண்டிருந்தது. அதாவது, (1) தமிழர்களின் அரசியல் உரிமைகளை வழங்குவதற்கு இருக்கக்கூடிய ஒரே வழி அதிகாரப் பகிர்வு. (2) காணிக் குடியேற்றங்களில் மாவட்டங்களினதும் மாகாணங்களினதும் இனப்பரம்பல் முறையை பேண வேண்டிய தேவை ஒன்று உண்டு. (3) வடக்கிலும் கிழக்கிலும் செயலாற்று மற்றும் நீதித்துறை நிர்வாகத்தில் தமிழர்களுக்கு சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் போன்ற கொள்கைகளை சிங்கள அரசியல் சமூகம் ஏற்றுக் கொண்டதனை இது மீண்டும் தெரிவித்தது.

டட்லி - செல்வா ஒப்பந்தத்தை பண்டா - செல்வா ஒப்பந்தத்தோடு ஒப்பிடும் போது, டட்லி - செல்வா ஒப்பந்தம் மேலும் ஒரு எண்ணக் கருவை ஏற்றுக் கொண்டிருந்தது. அதாவது தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடம், வடக்கு - கிழக்கு மாகாணங்கள் என்பதனை டட்லி - செல்வா ஒப்பந்தம் ஏற்றுக் கொண்டது. (அ) வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிகள் முதன் முதலில் அம் மாவட்டத்திலுள்ள காணி இல்லாத மக்களுக்கே வழங்கப்பட வேண்டும். (ஆ) இரண்டாவதாக, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். (இ) மூன்றாவதாக, இலங்கையின் ஏனைய பிரஜைகளுக்கு வழங்கப்பட வேண்டும்.


(தொடரும்)

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

திரு. வேதாரண்யம் தேவமூர்த்தி மிகச் சிறந்த நாதஸ்வர வித்வான். அவரது உதடுகளில் உட்கார 'சீவாளி' தவம் செய்திருக்க வேண்டும் என்பது என் கருத்து. பிற்பாடு இதை நான் எம்.ஜி.ஆரிடம் குறிப்பிட்ட போது, அவரும் என் கருத்தை நூற்றுக்கு நூறு சரியென்று ஆமோதித்தார்.

அன்றாடம் வானொலியில் ஒலிபரப்பாகும் மரபு வழிச் சங்கீதத்தை குறைந்த பட்சம்



அரைமணி நேரமாவது கேட்டு ரசிக்கும் பழக்கம், அண்ணன் எம்.ஜி.ஆரைப் போலவே,என் அன்பு இளவல் இளையராஜாவுக்கும் உண்டு.

நான் சொல்ல வருவது என்னவென்றால், கர்நாடக சங்கீத வித்வான்களும், சினிமாவிற்கும் 'ஸ்நானப் பிராப்தி'யே இல்லையென்று எவரேனும் எண்ணிக் கொண்டிருந்தால், அந்த எண்ணம் அபத்தமானது என்பதுதான். எத்துணையோ சாஸ்திரிய சங்கீதக்காரர்களை சினிமா சுவீகரித்துக் கொண்டிருக்கிறது.

சுருங்கக்கூறின், சினிமாவை சினேகிக்காத சங்கீத வித்வான்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். மெல்லிசைவாணர்கள், தொல்லிசைவாணர்களை மதிப்பதும், தொல்லிசைவாணர்கள் மெல்லிசைவாணர்களை வியப்பதும், பல்லாண்டுகளாகவே சங்கிலித் தொடர்போல் நிகழ்ந்து கொண்டுதான் வருகிறது.

'அவதாரபுருஷர்' களாகக் கர்நாடக இசைப்பிரியர்கள் கை தொழுத பல வித்வான்கள், 'அரிதார புருஷர்' களாக வெள்ளித்திரையில் உலா வந்திருக்கிறார்கள் என்பதை ஒரு பட்டியலிட்டுக் காட்ட என்னால் முடியும்.

நாற்பதுகளில் ஒரு தமிழ்ப் படத்தின் படப்பிடிப்பு லண்டன் மாநகரில் நடந்ததென்றால், வாசகர்களுக்கு வியப்பாக இருக்கும். அதைவிட வியப்பான விஷயம், அந்தப் படத்தின் கதாநாயகன், அந்நாளில் புகழ் வாய்ந்த கர்நாடக சங்கீத வித்வானாக விளங்கிய ஓர் இளைஞர். அவர் ஒரு பி.ஏ. பட்டதாரி. அற்புதமான பாடகர். அவர் நடித்த அந்தத் தமிழ்ப் படத்தின் பெயர் 'நவயுவன்'.

பின்னாளில் இதே இசைக் கலைஞர் ஜெமினியின் மதன காமராஜன் படத்திலும் நடித்தார். அந்தப் படத்தில் அவர் பாடிய 'பிரேமா!' என்னும் பாடல் நெடுங்காலம் ரசிகர்களின் நெஞ்சில் நீங்கா இடம் பெற்றிருந்தது. சாஸ்திரிய சங்கீத வித்வான் சினிமாவையும் சிநேகித்தார் என்பது அந்நாளில் தரக்குறைவான விஷயமாகப் பேசப்படவில்லை. தொல்லிசை உலகும் மெல்லிசை உலகும் ஒருசேர அந்த இளைஞரை ஏற்றுக் கொண்டது. நிறையப் பொருளும் புகழும் சம்பாதித்த அவர் இறுதி நாட்களில் சகல வசதிகளிருந்தும், ஒரு துறவியாகவே வாழ்வை மேற்கொண்டு,ஒரு ரயில் பயணத்தின்போது உயிர் நீத்தார். அவர்தான் திரு.வி.வி.சடகோபன்.

'போலகம் ராமையா' என்பவர், பாடல்கள் புனைவதிலும் அவற்றிற்கு இசையமைப்பதிலும் சிறந்த வாக்கேயக்காரராக விளங்கிய சாஸ்திரிய சங்கீத மேதை. அவரும் 'தியாக பூமி, குபேர குசேலா, பக்த சேதா' முதலிய படங்களில் பாட்டெழுதி பாடி நடித்த கர்நாடக சங்கீத வித்வான்தான். 'போலகம் ராமையா' என்றால் யாருக்கும் உடனடியாகப் புரியாது. 'பாபநாசம் சிவன்' என்றால் பளிச்சென்று நினைவுக்கு வரும். 'தமிழ்த் தியாகையா' என்றே இவரை அரியக்குடி, செம்மங்குடி போன்றோர் ஆராதித்ததுண்டு. கச்சேரிகளில் இவரது கிருதிகளைப் பாடாத கர்நாடக சங்கீத வித்வான்களே இல்லையென்று உறுதிபடக் கூறலாம். திரைப்படத் துறையிலும் இன்றளவும் இவரது பாடல்கள் இறவாமல் இருக்கின்றன.

'சிவன் பாட்டுக்கு நேரே எவன் பாட்டு எடுபடும்?' என்று உடுமலை நாராயணக் கவிராயரே உலகறியக் கூறியிருக்கிறார்.

'சொப்பன வாழ்வில்', வள்ளலைப் பாடும் வாயால்', 'மன்மத லீலையை வென்றார் உண்டோ', மற்றும் மீரா, அசோக்குமார், சிவகவி முதலான படங்களில் பாபநாசம் சிவன் எழுதியுள்ள பாடல்களை, காலம் கல்வெட்டில் பொறித்து வைத்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையல்ல. இவரது சகோதரர் திரு.பாபநாசம் ராஜகோபாலய்யரும் மிகச் சிறந்த சாஹித்ய கர்த்தா; சாஸ்திரிய சங்கீத விற்பன்னர். இந்த ராஜகோபாலய்யரின் மகள்தான், நம்முடைய முன்னாள் முதல்வரும், அண்ணன் திரு. எம்.ஜி.ஆர் அவர்களின் தர்ம பத்தினியும் ஆன அம்மையார் திருமதி வி.என்.ஜானகி அவர்கள்.

'கொடுமுடி கோகிலம்' என்று அந்நாளில் பலராலும் கொண்டாடப் பெற்று, சாஸ்திரீய சங்கீத உலகிலும் தனக்கென்று தனி இடத்தைத் தக்கவைத்துக் கொண்ட ஒரு பெண்மணி, அந்நாளில் ஒரு திரைப்படத்தில் ஆண் வேடமிட்டு அனைவரையும் அசத்தினார். அவரது பாடல்களுக்கு கர்நாடக உலகத்திலும் மதிப்பிருந்தது; கோடம்பாக்கத்திலும் மதிப்பிருந்தது. அந்த அம்மையார் ஆண் வேடமிட்டு நடித்த படம் 'நந்தனார்'. அதில் நந்தனாராக நடித்த பெருமைக்குரிய பெண்மணி திருமதி கே.பி.சுந்தராம்பாள் அவர்கள்.

(தொடரும்)







# இரத்த சாட்சியங்கள் 03

யாரிடமிருந்து பாதுகாப் பதற்காக இந்த பிஸ்ரல் என்று அவரிடம் அவருக்கு நெருக்கமாக இருந்த றொபேட் சுபத்திரன் கேட்டிருந்தார். முரண்பாடுகள் இருப்பினும் அடிக்கடி அண்ணை அண்ணை என்று தொலை பேசியில் தொடர்பு கொண்டு அவர் பாதுகாப்பு ஆலோசனை கேட்கும் டக்ளஸ் தேவானந்தாவும் அவரிடம் இதே கேள்வியை கேட்டிருந்தார்.

உங்களுக்கு யாரால் அச்சுறுத்தலோ அவர்களால்தான் எனக்கும் அச்சுறுத்தல் என்றார் ரவிராஜ்.

அப்போது ரவிராஜ் புலிகளை சில இடங்களில் புகழ்ந்து பேசுவதும் உண்டு. புகழ்ந்து பேசிக்கொண்டே அதே புலிகளால் தனக்கு அச்சுறுத்தல் என்பதையும் கூறி வந்தார் அவர்.

அதன் பின்பு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு புலிகளின் ஆசீர்வாதத்தோடு பாராளுமன்றம் சென்ற பின்புதான் அவருடைய இடத்திற்கு உயர் திரு.செல்லன் கந்தையன் நியமிக்கப்பட்டிருந்தார்.

ரவிராஜ் தென்மராட்சி சங்கத்தனையை பிறப்பிடமாகக் கொண்டவர். அவருக்கு அயலூர் நுணாவில். றொபேட் சுபத்திரன் நுணாவிலை பிறப்பிடமாக கொண்டவர். அந்த ஊருறவு அவர்கள் இருவரையும் அரசியலுக்கு அப்பால் ஒன்றிணைத்து வைத்திருந்தது.

றொபேட் சுபத்திரன் புலிகளால் கொல்லப்பட்டார் என்பது தெரிந்திருந்தும் அவரது இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு அவருக்கு உணர்வு பூர்வமாக இறுதி மரியாதை செலுத்தியிருந்தவர் திரு. ரவிராஜ் அவர்கள்.

ஒரு இரவு விருந்தில் நான் சந்தித்த அந்த நபரின் கருத்து சற்று வித்தியாசமானதாகவே இருந்தது. அரசியலை மிக ஆழமாக விவாதிக்க முடிந்தவர் அவர். எந்தவொரு அரசியலையும் சாராத பொதுவான போக்கு அவரிடமிருந்தது.

அங்கு நடந்து கொண்டிருந்த விவாதம் புலிகள் இயக்கத்திற்கு சார்பானதும் புலிகள் இயக்கத்திற்கு எதிரானதுமான விவாதம்தான்.


எனக்கு பிடித்த தலைவர்கள் இருவர்!.......... என்றார் அந்த நபர்.

யார் அந்த இருவரும்?.... ஆர்வத்தோடு வினாவினேன்.

ஒருவர் முன்னாள் ஈரோஸ் தலைவர் பாலகுமார்!...... என்றார் அவர்!

பாலகுமாரா?..... அடுத்தவர் யார்?...... முன்பை விட ஆர்வத்தோடு கேட்டேன்.

ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா!...... என்றார் அவர்!


சுபத்திரன் றொபேட்

நான் கொஞ்ச நேரம் மௌனமாகிவிட்டேன்! தொடர்ந்து அந்த நபரோடு உரையாடினேன்!

என்ன! எதிரும் புதிருமான இருவரை பிடித்த தலைவர்கள் என்கிறீர்கள்! பாலகுமார் புலிகள் இயக்கத்தோடு இணைந்திருப்பவர்! டக்ளஸ் புலிகளுக்கு எதிராகப் நிற்பவர்! இருவரையும் உங்களுக்கு எப்படி பிடிக்கும்? என்றேன்!....

**தேடனார்**

சேர்ந்தால் இயக்கத்தை கலைத்துவிட்டு பாலகுமாரைப்போல் புலிகளோடு இணையவேண்டும்! ஏதிர்த்தால் டக்ளஸ் போல் தளம்பல் இல்லாமல் புலிகளை எதிர்க்க வேண்டும்!

இந்த இரு நிலைப்பாட்டிற்கும் இடையில் அந்தரத்தில் நின்று தொங்கிக்கொண்டிருப்பது வெறும் பம்மாத்து அரசியல் என்றார். சரி பிழைகளுக்கு அப்பால் அந்த இரண்டு தலைவர்களையுமே தான் ஏற்றுக்கொள்வதாக திடமாக கூறினார்.

2001 தேர்தல் காலத்தில் என்று நினைக்கிறேன் பலாலியில் வைத்து அரச தரப்பினரால் நடத்தப்படுகின்ற வானொலிச்சேவையில் தொலைபேசி ஊடாக பொதுமக்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு டக்ளஸ் விடைகொடுத்துக்கொண்டிருந்தார். தனது வழமையான புலி எதிப்பு பாணியில் விளாசித்தள்ளினார் டக்ளஸ்.

புலிகள் தவறான பாதையில் செல்கிறார்கள் என்பதுதான் உண்மை. அவர்களது வழிமுறை சரியானது அல்ல. ஆனாலும் பாலகுமாரின் நேர்மையை நான் பாராட்டுகிறேன். ஏனெனில் அங்கொரு முகமும் இங்கொரு முகமுமாய் இருக்காமல் புலிகளோடு இணைந்து விட்டார். ஆனால் இன்றிருப்பவர்கள் தமது சுயநல அரசியலுக்காக புலிகளின் பெயரால் அரசியல் நடத்திக்கொண்டிருக்கி றார்கள். இவர்களும் புலிகளை ஏற்றுக்கொண் டால் இயக்கத்தை கலைத்துவிட்டு புலிக ளோடு இணைய வேண்டியதுதானே என்று கருத்து வெளியிட்டி ருந்தார் டக்ளஸ்.


ஒரு அமைப்பையோ அல்லது கட்சியையோ சார்ந்தவர் இன்னொரு அமைப்பான புலிகளை ஏக பிரதிநிதிகள் என்று எப்படி கூற முடியும்! அப்படியானால் அவர்கள் எதற்காக கட்சியை வைத்திருக்க வேண்டும் என்ற கேள்விகள் எழுகின்றன. இதுதான் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் கருத்தாக இருந்தது.

இன்று ஆனந்தசங்கரியும் இதே சாயலில்தான் கருத்து கூறியிருக்கிறார். புலிகளை ஏகப்பிரதி என்று கூறும் தகுதி பாலகுமாருக்கு மட்டுமே உண்டு. ஏனையவர்களும் கட்சியை கலைத்துவிட்டு புலிகளோடு சேர்ந்தால் மட்டுமே ஏகப்பிரதிநிதி என்று கூற அவர்கள் உரிமையுடையவர்கள்.

இவ்வாறு ஆனந்த சங்கரியும் கருத்து கூறியிருக்கிறார்.

இத்தொடரை எழுதுபவனைப் பொறுத்தவரை அரசியல் தலைவர்களின் கருத்துக்களை விட ஒரு சராசரி பொதுமகனின் கருத்தையே அதிகம் நம்புபவன். அந்தவகையில் அந்த இரவு விருந்தில் சந்தித்த பொதுமகனின் கருத்து குறித்து ஆராயவேண்டிய தேவை ஏற்பட்டுவிட்டது.

(சாட்சிகள் தொடரும்)




# புரட்சித் தலைவர் 15 பிடல் காஸ்ட்ரோ

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியைத் தடுக்கும் நோக்கத்தோடு கிரா படைகளை ஏவிவிட்டார்.

மாணவர்கள் பொங்கி எழுந்தவர்களாகப் படைகளையும் தள்ளிவிட்டபடி பேரணியை நடத்தினர். இதைத் தொடர்ந்து மாணவர்களுக்கும் படையினருக்கும் நடந்த கைகலப்பில் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கார்லோஸ் மார்ட்டினோ என்ற மாணவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அதற்குப் பின்னும் மாணவர்கள் பின்வாங்கவில்லை. இறந்த மாணவனின் உடலையும் தூக்கிக் கொண்டு குடியரசுத் தலைவர் மாளிகையை நோக்கி மாணவர்கள் சென்றனர். பிடல் தலைமையில் நடந்த இந்தப் பேரணியைத் தடுக்க மந்திரிகளும் வீதியில் இறங்கிப் படையினரை நேரடியாகவே ஏவிவிட்டனர். பிடலைக் குறிவைக்கப் படைகள் எடுத்த முயற்சிகளை மாணவர்கள் தடுத்தனர். இதனால் பிடல் மாணவர்களின் பாதுகாப்புடன் பேரணியை நடத்தினார். பேரணியின் முடிவில் மாணவர்கள், மக்கள் கூடியிருந்த கூட்டத்தில் பிடல் உரையாற்றினார். அந்த உரையில் கிராவ்தான் கொலைகாரன் என்று நேரடியாகக் குற்றம் சாட்டினார். இவ்வாறு தன்னை நேரடியாகக் கொலைகாரன் என்று கூறிய பிடலை இனியும் விட்டுவைப்பது நல்லதல்ல என்று கிரா கருதினார்.


பிடல் கைத்துப்பாக்கியுடன் இருக்கிறார் என்பதை அறிந்த

தருவது
**எம். கேஷிகன்**

படையினர், அந்தத் துப்பாக்கியைப் பறிமுதல் செய்ய முற்பட்டனர். அதற்காக அதிகாரி ஒருவரை அனுப்பியிருந்தனர். அந்த அதிகாரியின் நெற்றிக்கு நேராகத் துப்பாக்கியை நீட்டி முடிந்தால் எடுத்துக் கொள்ளுமாறு சொன்னார். பிடலின் உறுதியான இந்தப் பேச்சு துப்பாக்கியை கையளிக்கப்போவதில்லை என்பதை உணர்த்தியது. பலாத்காரம் பண்ணினால் அது தன் உயிருக்கே ஆபத்தாக முடியும் என்று கருதிய அதிகாரி திரும்பிச் சென்றுவிட்டார்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு பிடலுக்கு ஆபத்து எப்போதும் நேரலாம் என்பதால் மாணவர்கள் எப்போதும் கவனமாகப் பிடலுடன் இருந்தனர். இதற்காகப் பிடல் தன்னை மறைத்துக் கொள்ளாமல் கிராவின் ஆட்சிக்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருந்த போராட்டங்களை ஊக்குவித்துக் கொண்டு மக்களுடன் இருந்தார். மக்களின் உணர்ச்சியை தேசிய பிரச்சினையை நோக்கித் திசை திருப்ப விரும்பினார். இதற்கு முதல் திட்டமாக கியூபா மக்களினால் "சுதந்திர மணி" எனப் போற்றப்பட்ட "லா டெமஜாகுவா மணி" யை ஹவானாவுக்கு எடுத்துவர வேண்டும் என்றும் அதை 1868 ஆம் ஆண்டு நடந்த சுதந்திரப் போராட்ட நினைவு தினத்தில் தலைநகரில் ஒலிக்க வைக்க வேண்டும் என்றும் தனது உரைகளில் கூறி வைத்தார்.

இதே வேளை அந்த மணியைக் கொண்டு வந்து நகரத்தில் ஒலிக்க வைத்தால் மக்கள் தன் மீது நல்லெண்ணம் கொள்வார்கள்



என்று கிரா கருதினார். கிராவின் இந்தத் திட்டத்துக்கு மணி இருந்த மான்கானில்லோ நகர மேயராக இருந்த கியூபா நாட்டு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் நடுவராக இருந்த பிரான்ஸிஸ் ரோசலஸ் இடம் தரவில்லை.

1868 ஆம் ஆண்டு செஸ்பெடஸ் சுதந்திரப் போரைத்தொடங்கிய போது, இந்த மணியை அசைத்து ஒலியெழுப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

கிராவின் வேண்டுகோளை நிராகரித்த நகர மேயரை சந்தித்து மணியை எடுத்து வந்தால் அது கிராவுக்கு மேலும் அவமானமாக இருக்கும் என பிடல் நம்பினார்.

இந்தத் திட்டத்தோடு பிடலும், குவேராவும், ஓவாரஸூ ம் மான்கானிலோ நகருக்குச் சென்று மேயருடன் கதைத்தார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சியையும் மாணவர்களின் ஆதரவையும் கவனத்தில் எடுத்த மேயர் பிரான்சிஸ், மணியை ஹவானாவுக்கு எடுத்துச் செல்லச் சம்மதித்தார்.

ரயிலில் ஏற்றிக் கொண்டு ஹவானாவுக்கு வந்தனர். மணியுடன் பிடல் குழு வரும் செய்தி மாணவர்களுக்குப் பரவியது. மக்களும், மாணவர்களும் அவர்களை வரவேற்பதற்காக ரயில் நிலையத்துக்குச் சென்றனர். இந்தச் செய்தி கேட்டு கிரா மிகவும் கொந்தளித்துப் போனார்.

மணியை மக்களின் பார்வைக்காக வாகனத்தில் ஏற்றிக் கொண்ட பிடல் குழுவினர், ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். பல்கலைக்கழகத்துக்கு மணி கொண்டு வரப்பட்டது. அடுத்த நாள் சுதந்திரப் போராட்ட நினைவு நாள் என்பதால் மணி பல்கலைக்கழகத்தில் வைக்கப்பட்டது.

அடுத்தநாள் விடிந்தபோது மாணவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அவர்கள் வைத்த மணியைக் காணவில்லை. இரவோடு இரவாக மணி திருடப்பட்டிருந்தது. இதையறிந்த மாணவர்கள் வெகுண்டெழுந்தார்கள். மாணவர் தலைவர் என்ற முறையில் ஓவராஸ் புகார் செய்தார்.

இதுபற்றி வானொலியில் கருத்துத் தெரிவித்த பிடல், மணியைத் திருடியது கிராவும், படையினரும்தான் என்று குற்றம் சாட்டினார். இதைத் தொடர்ந்து பிடலை உடனடியாகக் கைது செய்யும்படி கிரா உத்தரவிட்டார்.

(அசத்தல் தொடரும்)




**கொண்டிருந்தார்கள்**, ஆனாலும் வியாகிக்கு எந்த இடத்தில் தங்கள் சகாக்கள் இருக்கிறார்கள் என்று தெரியும். ஆனால் அவன் அறிந்து விட்டதால் அதனை எப்படித் தெரிந்து கொள்வது என்று அவர்கள் யோசித்தார்கள். ஆனாலும் வியாகியின் நெருங்கிய தோழன் ஒருவனின் மூலம் அவர்கள் இருக்கும் இடத்தினை அறிந்தார்கள். அவர்களுக்கு அடுத்த கட்டளையை வழங்கத் தயாரக இருந்தார் வியட்கொங் இராணுவத் தளபதி சிறையில் வியாகியினைப் போட்டு மிகவும் சித்திரவதைக்குட்படுத்தினார்கள். அவன் சித்திரவதை தாங்காது உண்மையை கூறிவிடும் படி கேட்டுக் கொண்டார்கள். எவ்வளவு சித்திரவதை செய்தபோது அவனின் வாயிலிருந்து உண்மை வெளிவரவேயில்லை. ஆனாலும் சித்திரவதையின் உச்சக் கட்டத்தில் உளவியலாளர்களைக் கொண்டு வியாகியினை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார்கள். அவர்களின் கட்டுப்பாட்டிற்குள் முழுமையாக வந்த வியாகி, தங்களின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பதை தெளிவாகக் கூறினான் அடுத்து என்ன தாக்குதல் திட்டத்தினை நடத்த போகிறோம், யாரைக் குறிவைத்திருக்கிறோம், தங்கள் முக்கிய இராணுவ முகாம் எங்கிருக்கிறது என்று எல்லாம் கூறிவிடுகிறான். பயனுள்ள தகவல்களை அறிந்து கொண்ட அமெரிக்கப்படைகள் வியாகியை அப்படியே மயக்க நிலையில்




தொடர்ந்து வைத்திருந்தார்கள். அவன் கூறியபடி தாக்குதல் நடக்குமா? என்று அவர்கள் யோசித்தார்கள். ஒருவேளை தங்கள் வசம் வியாகி பிடிபட்டிருக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்ட வியட்கொங் இராணுவத்தினர் தங்கள் தாக்குதல் திட்டத்தினை மாற்றியமைக்கலாம் என்று அவர்கள் எண்ணத் தவறவில்லை. ஆயினும் எப்படியாவது அவர்களைப் பிடித்து விடலாம் என்று, வியாகி கூறியபடி அவர்கள் தாக்குதல்களுக்காக பதுங்கியிருந்த இடங்களைத் தேடித் திரிந்தார்கள். வியாகி சரியாக கூறிய இடத்திற்கு வந்த அமெரிக்கப்படையினர் அங்கு சுற்றி வளைத்தார்கள். அங்கிருந்து யாரும் வெளியில் சென்று விடாமல் இருக்க வேண்டும் என்பதற்காகக் கடுமையான பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. அப்பாதுகாப்பு எல்லாவற்றையும் மீறி அவர்கள் வெளியில் தப்பியோடிவிட முடியாது என்று அவர்கள் நினைத்திருந்தார்கள். அப்படித்தான் உண்மையும் இருந்தது. சுற்றி வளைத்த அமெரிக்கப்படைகள் மெதுவாக இடத்திற்குள் நுழைய ஆரம்பித்தது. அந்நகர்வில் ஏதோ ஆபத்து இருக்கப்போகிறது என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. ஆயினும் எந்த வகையான ஆபத்து வந்தாலும் அவர்களை எப்படியாவது பிடித்து விடவேண்டும் என்ற வெறியுடன் அனைத்து வீரர்களும் இருந்தார்கள். அவர்கள் உள்நுழைய முன்பாகவே தகவல் கசிந்து விட்டது போன்ற உணர்வை அப்படையினை நகர்த்தி வந்த தளபதி உணர்ந்தார். ஆயினும் என்னதான் நடக்கிறது என்று பார்த்துவிடுவோம் என்று அவர்கள் தங்கியிருந்த இடத்திற்கு அதிரடியாக நுழைந்தார்கள், அப்பொழுது அவர்கள் வியட்கொங் இராணுவத்தினரை அங்கு காணவில்லை, சாதாரண குடிமக்களைத்தான் கண்டார்கள். ஆயினும் அக்குடிமக்கள் யாவரும் தங்கள் பொதிகளைச் சுமந்து கொண்டு எங்கோ செல்ல ஆயத்தமாகியிருந்தார்கள். அவர்கள் எங்கு செல்கிறார்கள் என்று எவ்வளவு கேட்டாலும் அவர்கள் சொல்லவில்லை. காரணம் மொழிப்பிரச்சினை. ஆனாலும், அவர்கள் கேட்டதை வியட்கொங் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் விளங்கிக் கொண்டார்கள் ஆனாலும் விளங்காதவர்கள் போல் தங்களுக்குரிய நடிப்புத் திறன் மூலம் நடிப்பு காட்டிக் கொண்டிருந்தார்கள். அமெரிக்கப் படைகளை நடத்தி வந்த தளபதியோ இதனால் பெரிதும் கோபமடைந்தார். அனைவரையும் முழங்காலில் அமருமாறு கட்டளையிட்டான். அவனின் கட்டளையைக் கேட்டவுடன் அனைத்து இராணுவச் சிப்பாய்களும் தங்களுக்கான கட்டளையினை ஏற்று உடனடியாக மக்களை வதைக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் வைத்திருந்த பொதிகளை எல்லாம் தூக்கி எறிந்தார்கள். அமெரிக்கப் படையினர் வெறித்தனமாக தங்கள் நடவடிக்கைகளை நடத்தினார்கள். பிடித்து வைத்திருந்த அனைவரையும் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்கள். தங்கள் நேச படையைச் சேர்ந்த தென் வியட்நாமிய படையினர் மூலம் அவர்களின் மொழியில் பேசி விபரங்களைக் கேட்டறிய முயன்றார்கள். ஆனாலும் அனைத்தும் ஏழை விவசாயிகள் போலவே காட்சியளித்தனர். அவர்கள் எதற்காக இங்கு வந்தார்கள் என்பதை கேட்டறிந்து கொண்டிருந்தார்கள் அமெரிக்கப் படையினர். அதில் சிலர் வியட்கொங் இராணுவத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தார்கள். அவர்களின் பொதிகளில் குண்டுகள் இருந்தன. இக் குண்டுகளைக் கொண்டு தாக்குதல் திட்டத்தினை நடத்தி வந்தார்கள்.துருவித் துருவி விசாரித்த அமெரிக்க தளபதி, அவர்களிடம் ஒன்றும் இல்லை என்று எண்ணினார். அவர்கள் அனைவரும் ஏழை விவசாயிகள் அவர்கள் வியாபார நோக்கோடு தான் இங்கு வந்திருக்கிறார்கள் என்ப் புரிந்து கொண்ட அவன் அவர்களை போகும்படி கட்டளையிட்டான்.

*(தொடரும்)*

# குறட்டை ஆராய்ச்சி

**உ**லகத்தில் கஷ்டமான விசயம் என்று பெரிதாக ஏதும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் ரொம்ப சுகமான விசயம் என்றால் பலர் கூறத் தயாராக இருக்கிறார்கள். முக்கால்வாசிப் பேர் காலைக் கடன் கழிப்பதே சுகம் என்று கூறிக்கொண்டு அலைகிறார்கள். கஷ்டமான விசயம் என்னவென்று என்னை கேட்டால், ஒரு குறட்டை விடுபவரின் அருகில் படுத்து உறங்குவதே என்பேன். இந்த உலக



மகா கஷ்டத்தை அனுபவித்து பார்த்தவர்களுக்கே தெரியும் நான் சொல்வது உண்மையென்று. எதுக்காக ஆண்டவன் இதை மனிதர்களுக்கு கொடுத்தான் என்று தெரியவில்லை. என்னோடு சேர்ந்து இரண்டு பேருக்கு பக்கத்து கோயிலில் கதாகாலட்சேபம் செய்து கொண்டு இருந்த ஒரு பெரியவரிடம் இந்த சந்தேகத்தை கேட்டேன். ஆண்டவன் மனிதர்களுக்கு டேய் மானிடா நீயும் மிருகங்களை போலதாண்டா. அதில் இருந்து வந்தவந்தாண்டா என்பதை புரிய வைக்க, இந்த தண்டனையை கொடுத்ததாகச் சொன்னார். ஆனால் அந்த தண்டனை அருகில் இருப்பவர்களுக்கு தானே என்று நான் அவரிடம் விவாதம் செய்யவில்லை.

ஆனால் எதுக்காக இது தோன்றியது என்பது வேறு விசயம். ஆனால் சில பேர் நல்ல தூக்கம் என்றாலே குறட்டை விட்டு தூங்குவதுதான் என்ற எண்ணத்துடன் அலைகிறார்கள். பல பேச்சு வழக்கங்களிலும், ஊம் நல்ல சாப்பாடு ஆச்சு...இனி குறட்டை விட்டு தூங்க வேண்டியதுதான். என்று குறட்டை விடாதவர்களும் கூறுவது இதற்கு காரணமாக இருக்கலாம். இதனால் பக்க விளைவு என்னவென்று பார்த்தீர்களா என்றால், குறட்டை விடாமல் தூங்குபவர்களுக்கு ஒரு கழிவிறக்கம் ஏற்பட்டதுதான். இவர்கள் குறட்டை விட்ட தூங்குபவர்களை பார்க்கும் போதெல்லாம், சே! சுகமான ஜீவான்மா. என்னம்மா தூங்கறான் பாரு என்று ஒரு எண்ணம் தோன்றுவது தவிர்க்க முடியாதது.

என்னைப் பொறுத்தவரை, குறட்டை விடுபவர்களை இரண்டு விதமாக பிரிக்கலாம். இதில் முதல் விதம் எப்படியென்றால் படுத்து சிறிது நேரம் கழித்து மெதுவாக குறட்டையை ஆரம்பிப்பார்கள். இரண்டாவது விதம் எப்படி என்றால் படுத்து சில நிமிடங்களிலேயே குறட்டை உச்சஸ்தாயில் ஆரம்பிக்கும். இவர்கள் அருகே படுப்பவர்கள்தான் அதி பாவமான ஜீவன்கள்.

ஆனால் சில வீடுகளில் சிறிது அதிகமாகவே நடப்பதுண்டு. குறட்டையை நிறுத்துகிறேன் பேர்வழி என்று மல்லாந்து படுத்து தூங்கி கொண்டு இருப்பவரை சடாரென்று திருப்பி விடுவர் அருகில் தூங்குபவர், அதாவது மல்லாக்க படுத்தால் குறட்டை அதிகமாக வருமாம். பாவம் அந்த நபர். என்ன தாக்கியது என்று தெரியாமல், எழுந்து உட்கார்ந்து திருவிழாவில் தொலைந்த குழந்தை மாதிரி முழித்துக் கொண்டு இருப்பார். ஏதாவது கெட்ட கனவு கண்டு விட்டோமோ என்று பயந்து போய் இருப்பார். இன்னும் சில வீடுகளில் குழந்தைகள் செய்யும் சேஷ்டைகள் தாங்க முடியாது. என் நண்பர் வீட்டில், அவர் குறட்டை விட்டு தூங்கும் போது அவர் சிறு பையன் பஞ்சால் மூக்கை அடைப்பது, இடுபில் கிச்சு கிச்சு மூட்டுவது போன்று பல ஆராய்ச்சிகளின் ஈடுபடுவான்.

சில சமயம் குறட்டை விடுபவர் மிகவும் நல்லவராக இருந்தால், நம் அருகே தூங்கச் செல்லும் முன், ஸார், நான் தூக்கத்தில் கொஞ்சம் குறட்டை விடுவேன் என்று அபாய அறிவிப்பு கொடுத்து விட்டு தூங்கச் செல்வார். அந்த கொஞ்சம் என்பது எவ்வளவு என்பது நமக்கு தெரியாததால், புஸ்வாணத்திற்கு நெருப்பு வைக்கும் போது இது பொறி விடுமா...அல்லது வெடிக்குமா! என்ற பயம் மாதிரி, அவர் குறட்டை விட ஆரம்பிக்கும் வரை கண்கள் விரிவிரிய உட்கார வேண்டிவரும்.

குறட்டை விடாதவர்கள் கூட சில சமயம் குறட்டையில் தள்ளப்படுகிறார்கள். அதீத அலைச்சல், விளையாட்டு போன்றவற்றால் சில சமயம் குறட்டை விடாதவர்களும் குறட்டை விடலாம். ஆனால் இது இரண்டு மாதங்கள் வரும் சிறிய தொலைக்காட்சி தொடர் மாதிரியே. அதிக தொந்தரவில்லை. என்றும் எங்கும் குறட்டை விடுபவர்களே நம் ஆயுள் முழுவதும் வரும் மெகா தொடர்.

## (போவோம் ரசிப்போம் தொடர்ச்சி)

ஆடையணியாத காட்டு வாசிகளுக்குள்ளும் சரி, நவநாகரீகத்துக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதருக்குள்ளும் சரி காதல் தன் இயல்புகளுடனேயே இருக்கிறது.

உலகின் எந்த மூலையிலும் காதல் காதலாகவே இருக்கிறது. உலகத்தில் காணிக்கு ஆசைப்படாமல், சொத்துக்கு ஆசைப்படாமல், பிற இனத்தோடு சேர்ந்து வாழ்தலை விரும்பாமல் தமக்கான ஒரு உலகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதாக வாழும் எஸ்கிமோக்களுக்குள்ளும் காதல் குளிரில் நடுங்கிக் கொண்டு இருக்கத்தான் செய்கிறது. உலகத்தில் இருக்கும் ஒவ்வொன்றையும் அழகாக பார்க்க வைப்பது காதல் மட்டும் தான். இருட்டுக்குக்கூட ஆயிரம் கண்கள் உண்டு என்று களவாகச் செய்யும் காதலின் பெருமை வர்ணிப்புகளுக்குள் அடக்கமுடியாதது.

உன்னையும் உன் சுற்றத்தையும், உலகையும் காதலிக்கத் தெரியாத உன்னிடம் ஒரு காதல் அகப்பட்டு, ஆயுள் தண்டனை அனுபவிக்கிறது என்பது தான் அர்த்தம். நீங்கள் நேசிக்கப்பட வேண்டுமாக இருந்தால் முதலில் நீங்கள் நேசிக்கப் பழகுங்கள். காதலிக்கத் தெரிந்த உங்களைத் தான் காதல் காதலிக்கிறது. காதலின் வருடல் மிக மிக மென்மையானது. அந்த சுகம் அனுபவிக்காத உலக வாழ்க்கை அர்த்தமற்றது. படைத்தவன் ஒரு காதலோடுதான் படைத்துள்ளான். அவன் காதலை அர்த்தப்படுத்துங்கள், பிறப்புக்கும் இறப்புக்குமிடையில் காதல் உங்களை கைபிடித்து வழி நடத்துகின்ற ஒரு வாழ்க்கையைப் பெறும் பாக்கியம் கிடைத்தால் இந்த பூமி நமக்குச் சொர்க்கம்.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN

4 6 1 3 1 3 1 5 = 24

## உடல் எண் - 9, உயிர் எண் - 2

9, 18, 27 போன்ற தேதியில் பிறந்து, பிறந்த தேதி, மாதம்,வருடம் ஆகிய இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 2 வருமேயானால் இவர்கள் செவ்வாய், சந்திரன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

9 என்ற செவ்வாய் 2 என்ற சந்திரனுக்குப் பகையான எண் இருப்பதால் உடல் எண் உயிர் எண்ணுக்குப் பகையாகவும், இவர்களது உயிர் எண் உடல் எண்ணுக்குப் பகையாகவும் இருப்பதால் பெயர் நன்றாக அமையாதவர்கள் தனக்குத் தானாகவே தீங்கு ஏற்படுத்திக் கொள்ளுவர். இன்னும் சிலர் பார்ப்பதற்கு அழகாகவும், கவர்ச்சியான தோற்றமுடனும், நல்ல அறிவுத் திறமையுடனும் இருப்பர்.

ஆனால் இவர்களுக்குப் பெயர் நன்றாக அமையாவிட்டால் ஆண்களாக இருந்தால் பெண்களாலும், பெண்களாக இருந்தால் ஆண்களாலும் மனவேதனை அடைவர். இன்னும் சிலருக்குத் தொடர்ந்து வியாதித் தொல்லை இருக்கிறது. பணக்காரக் குடும்பத்தில் பிறந்த சிலர் எல்லா வசதிகள் இருந்தும், மனவேதனை பட்டுக் கொண்டிருப்பதை நான் கண்டிருக்கிறேன். பிடிவாத குணம் கொண்ட இவர்கள் யார் எதைக் கூறினாலும் தன் மனப் போக்கிலேயே போக நினைப்பர்.

தான் நினைக்கின்ற கருத்துக்களை எதுவாக இருந்தாலும் துடுக்காக வெளியிடுவர். இதனால் மற்றவர்களிடம் கருத்து வேறுபாடு வந்து விடுகிறது. மனபலம் கொண்டவர்கள் போல் எதையும் தைரியமாகச் செய்துவிட்டுப் பாதியில் குழம்பி நிற்பர். குறுக்குக் கேள்வி கேட்பதிலும், வாதம் செய்வதிலும் இவர்கள் சிறந்தவர்கள்.

தெய்வ நம்பிக்கையும், சமயப் பற்றும் கொண்ட இவர்கள் அதைப்பற்றி, ஆராயவும் தொடங்குவர். இருசாராருக்கும் ஏற்படும் பிரச்சினைகளை விசாரித்து வழக்குத் தீர்ப்பதில் கெட்டிக்காரர்கள். உத்தியோகம் செய்பவராக இருந்தால் உத்தியோகம் பார்க்கும் இடங்களில் இவர்களுக்கு எதிர்புகள் இருந்து கொண்டே இருக்கும். உதவி செய்யும் மனப்பான்மை கொண்ட இவர்கள், தன்னைச் சார்ந்தவர்களுக்கு நல்லவை, கெட்டவைகளில் அவர்ளுக்கு உறுதுணையாக இருப்பதால் இவர் களுக்கென்று ஒரு கூட்டம் எதையும் செய்யக் காத்துக் கொண்டிருக்கும்.

பல்வேறு விஷயங்களை இவர்கள் தெரிந்து வைத்திருப்பதால் பேச்சாலும், எழுத்தாலும், செயலாலும் பலரைத் தன் வயமாக்கிவிடுவார்கள். இவர்களைக் கண்டு எதிரிகளும் அஞ்சுவார்கள். எப்பொழுதும் எதிர்ப்புக்கள் இருந்து கொண்டே இருக்கும். உதவி செய்யும் மனப்பான்மை கொண்ட இவர்களுக்குத் திடீரென்று தோன்றும் முரட்டுக் குணத்தால் தன் பெயரைக் கெடுத்துக் கொள்வர்.

சில நேரங்களில் தனிமையில் இருந்து கொண்டு மனம் வருந்திக் கொண்டிருப்பர். இவர்கள் மனம் பசுமையான இயற்கைக் காட்சிகளையும், பழைமையான கலைக்கூடங்களையும், நீர்வீழ்ச்சிகளையும், அழகான கட்டிடங்களையும், கடற் பிரதேசங்களையும் கண்டு அமைதி கொள்ளும். பெயர் நன்றாக அமையாதவர்களுக்குத் திருமண வாழ்க்கை சிறப்பாக அமைவதில்லை.அப்படி அமைந்தாலும் ஏதாவது ஒரு குழந்தைக்குக் கெடுதலாகி விடுகிறது.

சட்டம், சமயம், கணிதம், ஜோதிடம், தத்துவம், மருத்துவம் போன்றவற்றில் ஆராய்ச்சி இருக்கும். இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் டாக்டர்களாகவும் வியாபாரிகளாகவும், தொழில் அதிபர்களாகவும், இஞ்சினியர்களாகவும், வக்கீலாகவும், உத்தியோகஸ்தர்களாகவும் இருக்கின்றனர். ஆனால் பெயர் நன்றாக அமையப் பெறாதவர்கள் மனக்கஷ்டத்தால் வாடுகின்றனர். இதனால் பெயரை ஒழுங்காக அமைத்துக் கொண்டு, பிடிவாத குணத்தை விடுத்து வாழ வாழ்த்துகிறேன்.

**தொழில்:** இவர்களுக்கு காண்ட்ராக்ட், கமிஷன் ஏஜென்சீஸ், விவசாயம், வாகனங்கள், பச்சைப் பொருள் வியாபாரங்கள், எழுதுதல், பேப்பர், ஆடம்பரப்பொருள் போன்றவற்றால் பொருள் வந்து சேரும்.

**நோய்:** பைல்ஸ், வயிற்றுக்கோளாறு, மூத்திரக் கோளாறு,உஷ்ண சம்பந்தமான வியாதி, சர்க்கரை நீர், இருதய நோய், இரத்த அழுத்தம் போன்றவைகள் வந்து நீங்கலாம்.

**பெயர் அமைக்கும் முறை:** இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களுக்கு சுக்கிரன், புதன் போன்ற ஆதிக்கமான 6, 15, 24, 33, 42, 60, 69; 14, 23, 32, 41, 50, 59, 77 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை:**

யோகமான எண் : 6, 5

யோகமான திகதிகள் : 6, 15, 24; 5, 14, 23


யோகமான மோதிரக்கல்: மூன்ஸ்டோன், வைடூரியம், டைகர்ஸ் ஐ

யோகமான நிறம் : வெளிர் நீலம், மஞ்சள், நீலம்

ஆகாத திகதிகள் : இல்லை

ஆகாத நிறம் : இல்லை


குறிப்பு: இவர்களுக்கு ஆகாத நிறம், ஆகாத திகதிகள் இல்லை. ஏனென்றால் இவர்களது எண் ஒன்றுக்கொன்று எதிர்ப்பில் அமைந்துள்ளது.



> ஆடுகளும் மாடுகளும்
> அழகுடைய பரியும்
> வீடுகளும் நெடுநிலமும்
> விரைவினிலே தருவாய்.
>
> - சுப்பிரமணிய பாரதியார்

# அப்பாவி பிச்சுமணி

**பிச்சுமணி** சரியான அப்பாவி. யார் எதைச் சொன்னாலும் நம்பிடுவான். ஒரு நாள் வீட்டுச் சாவியைத் தொலைத்துவிட்டான். குடைக் கம்பியால் நோண்டியும் தெருக்காரர்கள் கொடுத்த மாற்றுச் சாவிகளையும் போட்டும் திறக்க முயற்சித்தான். முடியவில்லை! கடைசியில் பூட்டு ரிப்பேர்க்காரனை அழைத்து வந்தான். அவன் ஐந்தே நிமிடத்தில் திறந்துவிட்டான். பிச்சுமணிக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.



அவனையே குருவாகக் கொண்டு அந்தக் கலையைக் கற்றுத் தரும்படி கேட்டுக் கொண்டான்.

பூட்டு ரிப்பேர்க்காரனும் வித்தையைக் கற்றுக் கொடுத்தான். பிச்சுமணியின் உறவினர், நண்பர்கள் எல்லாம் சாவி காணாமல் போனால், அதிகப்படியாக ஒரு பூட்டுக்குச் சாவி தேவைப்பட்டால் கூட பிச்சுமணியை நாடினர். அவனுக்கு பெரிய சந்தோஷம்தான். ஒரு பெரிய விஞ்ஞானி போல நடந்து கொண்டான்.

ஒருநாள்...

டிப்டாப்பாக உடை அணிந்த இருவர் பிச்சுமணியை நெருங்கி, தாங்கள் புதிதாக அவ்வூருக்கு வந்திருப்பதாகவும் சாவி எங்கோ விழுந்துவிட்டதென்றும் பிச்சுமணிதான் பெரிய மனது வைத்து பூட்டைத் திறந்து உதவ வேண்டுமென்றும் கெஞ்சினார்.

பிச்சுமணிக்கு கர்வம் தாங்கவில்லை. தான் அந்தக் கலையைக் கற்றதனால்தானே

**பாப்பா முரசு சிறுகதை**

இத்தனை மதிப்பு என்ற பெருமிதத்துடன் போய் பூட்டைத் திறந்து கொடுத்து அவர்கள் காட்டிய நன்றியுடன் திரும்பினான்.

அடுத்த நாள் வாசலில் பொலிஸ் வண்டி வந்து நின்றது. பொலிஸார் இவனை இழுத்துச் சென்றனர். ஊரே வேடிக்கைப் பார்த்தது. எதற்கு என்னைக் கைது செய்கிறீர்கள்? என்று கேட்டான் பிச்சு. நேற்று நீ ஒரு பங்களாவின் பூட்டைத் திறந்தாயா? எனக் கேட்டனர். ஆமாம், என்று பிச்சுமணி கூற, அதற்குத்தான்! என்றனர் பொலிஸார்.


அப்போதும் எதுவும் புரியவில்லை. அப்பாவி பிச்சுவுக்கு! ஆனால், காவல்நிலையம் சென்றதும் எல்லாம் விளங்கிவிட்டது. அங்கே காவலர்கள் கவனித்த கவனிப்பில் உடம்பெல்லாம் காயங்களோடு முக்கால் நிர்வாணமாக டிப்டாப் ஆசாமிகள் நின்றிருந்தனர்.

'இவனேதான் ஐயா!' என்று ஒருவன் பிச்சுமணியை அடையாளமும் காட்டினான். பூட்டைத் திறக்கும் போது எதிர்வீட்டிலிருந்து பார்த்தானாம்.

வீட்டின் உரிமையாளர்கள் கோயில், குளம் சென்றதை உளவறிந்து வீட்டைக் கொள்ளையடித்திருக்கின்றனர் டிப்டாப் ஆசாமிகள். அதற்குப் பூட்டைத் திறந்து உதவிய பிச்சுமணியையும் கூட்டு என்று கையைக் காட்டிவிட்டனர்.

பிச்சுமணி தவித்தான்! பூட்டை திறப்பதில் இவ்ளோ பெரிய பிரச்சினை வரும் என்று எதிர்பார்க்கவில்லை. அதன் பிறகு பொலிஸ்காரர்களுக்கு இவர் தன்னை புரிய வைப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. அதன் பிறகு தன் வீட்டைத் திறக்கக் கூட பயந்தான் பிச்சுமணி.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இனைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 08.03.2007

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 684**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
**கொழும்பு**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 682

**பரிசுக்குரியவர்:**
**K.பிரசாந்தி**
**89,பாபா பதி இல்லம், ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகலை.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| K.ஹரிணி<br>19, பன்சல ரோட், இராகலை ஆள்கரனோயா. | எஸ். விக்னேஸ்வரி<br>22, புதுச்செட்டித்தெரு, கொழும்பு -13 |
| டி.ஆர்.ஜெனிங்ஸ் டிவின்ஷன்<br>மே/பா. டேவிட் ரவிக்குமார்<br>82, புதுச்செட்டித்தெரு, கொழும்பு-13 | எஸ். அனிதா<br>காளி கோவிலடி கருமன்காடு, வவுனியா. |
| M.சகிதா<br>50/2 ஜும்மாமஜித் மாவத்த,<br>பெரிய முல்லை, நீர்கொழும்பு. | என்.லதா<br>நிலாவெளி, திருகோணமலை. |
| M.R.M.ரஷீல்<br>இல.40, 5ஆம் குறுக்குத் தெரு, புத்தளம் | க.ஜெசிந்தா<br>பிரதான வீதி, புத்தளம். |

# ஆத்திசூடி

## திருமாலுக்கு அடிமை செய்

**நீ வாழும் நாட்டு அரசுக்கு நன்மையும் பெருமையும் தரத்தக்க முறையில் நேர்மையாக தொண்டு செய்.**


-ஔவையார்.


எஸ். நிரஞ்சலா, கண்டி.

# உலக அதிசயம்

### சிங்க நடை போட்டு...

வீராப்புக்கு யாரையாவது சிங்கம் என்று கூறி விடாதீர்கள். சிங்கம் ஒரு படு சோம்பேறி மிருகம். பசி எடுத்தால் மட்டுமே அதற்கு சுறுசுறுப்பு வரும், வேட்டைக்குக் கிளம்பும். வேட்டையாடித் தின்றதும் தூங்கப் போய்விடும். மீண்டும் பசி எடுக்கும் வரை தூக்கம்தான். பசி இல்லாவிட்டால் தொடர்ந்து இரண்டு நாட்கள் கூட தூக்கம் போடும். பலத்தில் ஆண் சிங்கம் வலிமையானது என்றாலும் பெண் சிங்கம்தான் வேட்டையாடுவதில் முன்னிற்கும்.





### திமிங்கிலங்கள்

திமிங்கிலங்கள் 5 விதமான ஒலியை எழுப்பு கின்றன. தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவே, அவை ஒலியெழுப்புகின்றன. பெலுகா என்றழைக்கப்படும் திமிங்கிலங்கள் கடலின் அடி ஆழத்தில் 30 நிமிடங்கள் வரை காற்றின்றி உயிரோடு இருக்கும். நீலத் திமிங்கிலங்களின் குட்டி நாள் ஒன்றுக்கு சுமார் 100 லிற்றர் பால் குடிக்கும்.

### பயத்தின் வகை

தண்ணீரைக் கண்டு பயப்படும் நோய்க்கு 'ஹைட்ரோ போபியா' என்று பெயர். குதிரையைக் கண்டு பயப்படுவதற்கு 'ஹிப்போ போபியா', ரத்தத்தைக் கண்டு பயப்படுவதற்கு 'ஹீமோ போபியா', மழையைக் கண்டு பயப்படுவதற்கு 'புளுவியோ போபியா', கடவுளைக் கண்டு பயப்படுவதற்கு 'தியோபியோ' என்றும் பெயர்.



40 ஆயிரம் வகைச் சிலந்திகள் உலகில் உள்ளன. பட்டுப் பூச்சியின் பட்டு நூலை விட சிலந்தியின் பட்டு நூல் நேர்த்தியானது.

ஒரு வகைச் சிலந்தியின் வயிற்றுப் பாகத்தில் பட்டு நெய்யும் உறுப்பான 'சிபின்ரைட்' என்ற பாகத்திலிருந்து பட்டு நூல் வருகின்றது. இந்நூலைத் திரித்தால் கிடைக்கும் தடிமன் அதே தடிமனுள்ள இரும்புக் கம்பியைவிட வலிமையானது.

### சிலந்தி நூல்...

19ஆம் நூற்றாண்டில் மடகாஸ்கர் தீவில் சிலந்தியின் பட்டு நூலிலிருந்து துணியும் நெய்திருக்கிறார்கள். பண்டைய மக்களில் சிலர் சிலந்தி வலைகளைக் கொண்டு மீன் பிடித்தும் உள்ளனர்.



### கால்பந்தாட்டம்



கால்பந்தாட்டம் முறையாகத் துவங்கப்பட்டது இங்கிலாந்தில் தான். இதை சாக்கர் என்று அழைப்பார்கள். பந்தை கைகளால் தொடாமல் அடித்து ஆடும் விளையாட்டு என்று அர்த்தம். உலகிலேயே அதிகமான நாடுகளில் விளையாடும் குழு விளையாட்டும் கால்பந்துதான். 200 நாடுகளுக்கும் மேல் கால்பந்து விளையாடப்படுகிறது.

# சில விடுகதைகள்


1. அவனைப் பிடித்து அடைக்க முடியும் அடிக்க முடியாது அவன் யார்?
2. காற்றுக்குப் பறப்பான் சிறு ஓட்டைக்கு உயிர் துறப்பான் அவன் யார்?
3. தண்ணீருக்குள் அழுத்தினாலும் தாவி மேலே வந்து விடுவான் அவன் யார்?
4. இணைந்த ஜோடிகள் அவர்கள் பாதுகாப்பு நேரங்களில் மட்டும் பிரிந்தே இருப்பார்கள் அவர்கள் யார்?
5. மாமா தோட்டத்தில் உள்ள மதயானை கால்நடைக்கு உணவாகுது அது என்ன?
6. கடற்கரையில் கண்ணாமுச்சி ஆடும் இவனுக்கு கால்களில் மட்டும் அசுரபலம் அவன் யார்?
7. வீட்டையே வலையாக்கி விருப்பம் போல வேட்டையாடுவான் அவன் யார்?
8. தண்ணீரில் பலத்தவன் தரைக்கு வந்தால் இளைத்தவன் அவன் யார்?
9. வளைந்து நெளிந்திருந்தாலும் பயணத்தில் இவனை தவிர்க்க முடியாது அவன் யார்?
10. எட்டிப்பார்த்தால் ஏழு வண்ணங்கள் அது என்ன?

**விடைகள்**

1. காற்று
2. பலூன்
3. பந்து
4. பூட்டு - சாவி
5. வைக்கோல்போர்
6. நண்டு
7. சிலந்திப்பூச்சி
8. முதலை
9. சாலை
10. வானவில்




## காந்த சக்தி




**மணிக்கட்டுகள்,** முன்னங்கைகள், முழங்கால்கள், விரல்கள் போன்றவற்றில் ஏற்படும் காயங்களையும் நோய்களையும் இலகுவில் கண்டறிவதற்காக அதி சக்தி வாய்ந்த காந்தச் சுருள்களை 'மாயோ கிளினிக்' என்ற அமெரிக்க மருத்துவ நிறுவனம் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் கண்டு பிடித்திருக்கின்றது. காந்த சக்தி கொண்ட இந்தச் சுருள்கள் உடம்பின் குறிப்பிட்ட பகுதியை விரிவாகப் படம் பிடித்துக் காட்டக்கூடிய அளவிற்கு அதி சக்தி வாய்ந்தது என வர்ணிக்கப்படுகின்றது. மிக நுண்ணிய நாடி நரம்புகளையும் உடல் குறைபாடுகளையும் மிகத் தெளிவாக இவை காட்டுகின்றன. இதனால் நுண்ணியவற்றைக் கூட கண்டறியும் ஆற்றலை இவை வைத்தியர்களுக்கு வழங்குகின்றன. மூன்று வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த ஆய்வுகளின் பின்னரே இந்தக் காந்தச் சுருள்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

## நுண் ஊசி




**உடலில்** வலி ஏற்படாமல் மருந்துகளையும் தடுப்பூசிகளையும் நுண் ஊசிக் கதிர்கள் ஊடாக உடலுக்குள் செலுத்தும் நுட்பத்தில் முன்னேற்றம் கண்டிருப்பதாக 'நெசனல் அக்கடமி ஒப் சயன்ஸ்' என்ற நிறுவனம் அறிவித்துள்ளது. தட்டையான, திண்மத் தன்மை கொண்ட இந்த நுண் ஊசிகள், பல்வேறு அளவுகளிலும் வடிவங்களிலும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. உலோகம், சிலிக்கோன், கண்ணாடி ஆகியவற்றைக் கொண்டு இந்த நுண் ஊசிகள் தயாரிக்கப்பட்டன. யோஜியாவைச் சேர்ந்த தொழில்நுட்ப நிறுவனம் இவற்றைத் தயாரித்திருக்கிறது.

## தாக்குதல்




**வெள்ளைச்** சுறா என்றழைக்கப்படும் மீன் இனமே மிகப் பெரியது என்று கூறப்படுகின்றது. அதாவது பழைய காலத்தில் இருந்து வாழ்ந்து வரும் மீன் இனங்களில் இதுவே மிகப் பெரியதாகும். இதன் சராசரி நீளம் 15 அடி. சராசரி எடை 1700 இறாத்தல். சில சுறா மீன்கள் 20 அடி நீளம் வரை வளர்ந்து இருப்பதாக சந்தர்ப்ப சாட்சியங்கள் இருக்கின்றன. இந்த வெள்ளைச் சுறா மீன்கள் அபாயகரமானவை என்று கூறப்படுகின்றது. 2005ஆம் ஆண்டில் ஆத்திரமூட்டப்படாமலே 55 மனிதர்கள் மீது வெள்ளைச் சுறாக்கள் தாக்குதல் நடத்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கோல் காப்பாளர்



**உதைபந்தாட்டத்தின்** போது 'கோல் கீப்பர்' ஆகச் செயற்படக்கூடிய மனித இயந்திரமொன்றினை ஜப்பானின் புஜிற் சூ நிறுவனம் உருவாக்கியுள்ளது. தனது உதைபந்தாட்டத் திறமைகளால் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்திழுக்கும் இந்த ரோபோ (மனித இயந்திரம்) நடனமாடுவதிலும் திறமை கொண்டது. ஹோ அப்-2 என்று இந்த மனித இயந்திரத்துக்குப் பெயர் வைத்துள்ளனர். இதேவேளை ரோந்து மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடிய மரோன்-1 என்ற மனித இயந்திரத்தையும் இந்த நிறுவனம் தயாரித்துள்ளது. இதன் தோள்களில் இருக்கும் சிகப்பு மின்விளக்கு வீட்டுக்குள் யாராவது அத்துமீறி நுழைந்தால் அபாய ஒளி, ஒலி எழுப்பிக் காட்டிக் கொடுத்துவிடும்.

## இறப்பர் பையன்



**எனது** உடலை வளைத்து நெளிப்பதில் உலக சாதனை படைத்திருக்கிறார் டானியல் பிறவுனிங் இஸ்சித் என்ற அமெரிக்கர். இவர் 'இறப்பர் பையன்' என்றும் அழைக்கப்படுகிறார். இவர் டெனிஸ் வட்டத்தின் சுற்று வட்டத்துக்கு ஊடாக தனது உடலை நசுக்கி செலுத்தக் கூடியவர். 15 செக்கன்களுக்குள் இந்தச் சாதனையை அவர் புரிந்துள்ளார். தனது உடலை அசகாயமாக வளைக்கக் கூடியவர் இவர். தனது முண்டத்தை 180 பாகைக்குத் திருப்புகிறார். அத்துடன் கை, கால் மூட்டுகளை கழற்றக் கூடிய திறமையும் இவருக்கு இருக்கின்றது. இறுக்கமான மேலாடைக்கூடாக விரைவான நேரத்தில் தனது உடலைச் செலுத்தக் கூடியவர் என்ற உலக சாதனையையும் இவர் படைத்திருக்கிறார். இரண்டு நிமிடங்கள் 8 செக்கன்களுக்குள் இவர் சாதனை புரிந்தார். 18 கலன்களைக் கொள்ளக் கூடிய பெட்டி ஒன்றுக்கூடாகவும் தனது உடலை நுழைத்து சாதனை படைத்திருக்கின்றார். அதாவது 13.5x16x19.5 அங்குல இடைவெளிக்கு ஊடாகவும் தனது உடலை இவர் நுழைத்திருக்கின்றார்.

## மாதவனுடன் சதா!

எதிரி, ப்ரியசகி படங்களைத் தொடர்ந்து மூன்றாவது முறையாக மாதவனுடன் இணைந்து நடிக்கிறார் சதா. ராம்கோபால் வர்மா தயாரிப்பில் தொடங்கப்பட்டிருக்கும் படம் லீலை. இதில் மாதவன் ஹீரோவாக நடிக்கிறார். படத்தில் இவருக்கு இரண்டு ஜோடிகள்.

இரண்டில் ஒருவராக சதா தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். இன்னொரு ஹீரோயின் யார் என்பது இன்னும் முடிவாவில்லை.








## உருவத்தை மாற்றிய அசின்

திரையுலகில் தனது சக போட்டியாளர்களான திரிஷா வும், ஸ்ரேயாவும் புதுப் பட ஒப்பந்தங்களை குவித்துக் கொண்டிருக்க, அசின் மட்டும் அடக்கி வாசிக்கிறார். வரலாறு, போக்கிரி என்று தொடர்ந்து பல படங்களில் நடித்து வருவதால் அசினுக்கு வாய்ப்புகள் குவிகின் றன.

இருந்தாலும் புதுப்பட ஒப்பந்தங்களை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறாராம் அசின். அதற்குக் காரணம் தசாவதாரம். இந்த படம் ரிலீஸாகும் வரை புதுப்படங்கள் எதையும் ஒப்புக் கொள்வதில்லை என்று முடிவெடுத்திருக் கிறாராம்.

காரணம் தசாவதாரத்தில் தன் உருவத்தையே மாற்றி நடிக்கிறார் அசின். அந்த வேடம் என்னவென்பது படு ரகசியமாக உள்ளது. ஆனால் அவர் தசாவதாரத்தில் ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுப்பார் என்று மட்டும் உறுதியாகச் சொல்லப்படுகிறது. முதல் முறையாக தசாவதாரத்தில் இரட்டை வேடம் ஏற்று நடிக்கிறார் அசின். இந்த வேடங்கள் தன் நடிப்புத் திறமைக்கு பெரிய சவாலாக இருக்கும் என்று நினைக்கிறார்.

## ரஜினி படங்களைப் பார்த்து வளர்ந்தவன்—ஜீவா

ஈ படத்திற்கு பிறகு கோடம்பாக்கத்தின் எதிர்பார்ப்புக்குரிய ஹீரோக்களில் ஒருவராகி விட்டார் ஜீவா. தற்போது 'பொறி' பறக்க விட்டிருக்கும் அவர்தான் சூப்பர்ஸ்டார் ரஜினியின் படங்களைப் பார்த்து வளர்ந்தவன் என்கிறார்.

ஒவ்வொரு படத்தின் வெற்றியும் கூடுதல் பொறுப்புகளை ஏற்படுத்துகிறது. வெற்றி புது உற்சாகத்தை தருகிறது. பொறி என்னை நன்கு வெளிப்படுத்தியிருக்கும் படம். என் தந்தை உருவாக்கித் தந்த அடித்தளத்தை பின்பற்றிச் செல்கிறேன்.

'தமிழ் எம்.ஏ.' வாய்ப்பு வந்தபோது இந்த வேடத்தை நம்மால் செய்ய முடியுமா என்று நம்பிக்கையில்லாம இருந்தேன். ராம் வந்த பிறகு தமிழ் எம்.ஏ.வை சிறப்பாக செய்யலாம் என்ற நம்பிக்கை பிறந்தது.

ராம் படத்தில் எனது விநோதமான வேடத்தை பார்த்த பிறகு என் பக்கத்து வீட்டில் உள்ள சிறுவர்கள் என் பக்கத்தில் வரவே பயந்தனர். என்னை புறக்கணித்தனர். அந்த அளவிற்கு அந்த வேடம் தாக்கத்தை ஏற்படுத்தியது.

நான் ரஜினியின் தீவிர ரசிகன். சிறு வயதிலிருந்தே ரஜினி படங்களைப் பார்த்து பார்த்து வளர்ந்தவன். சூப்பர் ஸ்டார் ரஜினியின் சூப்பர் ஸ்டில்களை ஆல்பமாக போட்டு வைத்திருந்தேன். அந்த ஆல் பத்தை சோபாவுக்கு அடியில் ரகசியமாக வைத்துப் பாதுகாத்தேன்.


இவ்வாறு ஜீவா கூறினார்.

## அஜித்தின் தந்தையாக ராஜ்கிரண்

தவமாய் தவமிருந்து படத்திற்குப் பிறகு புதிய கொள்கை ஒன்றை வகுத்திருக்கிறார் ராஜ்கிரண். கெட்டவனாக இனி நடிப்பதில்லை என்பதே அது.

இந்த புதிய கொள்கையால் இவர் இழந்த வாய்ப்புகள் ஏராளம். முக்கியமாக ஷங்கரின் சிவாஜி படம். இதில் வில்லனாக நடிக்க வந்த வாய்ப்பை மறுத்தார் ராஜ்கிரண். இப்போது அதில் சுமன் நடித்திருக்கிறார்.

தவமாய் தவமிருந்து படத்திற்குப் பிறகு ராஜ்கிரண் நடித்து வரும் முக்கியமான இரண்டு படங்கள், முனி மற்றும் கிரீடம். இதில் கிரீடம் படத்தில் அஜித்தின் தந்தையாக நடிக்கிறார் ராஜ்கிரண். இதில் இவருக்கு பொலிஸ்காரர் வேடம். ராஜ்கிரணின் கொள்கைக்கு ஏற்ற நல்ல பொலிஸ்காரர் வேடம்.




சி னி



## திருமணமான நடிகைகளை புறக்கணிக்கும் சினிமா —கஸ்தூரி வருத்தம்

திருமணமான நடிகைகள் சினிமாவில் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று கஸ்தூரி வருத்தப்பட்டார். செந்தமிழ்ப்பாட்டு, அமைதிப்படை, சின்னவர், அபிராமி உள்ளிட்ட பல படங்களில் நடித்தவர் கஸ்தூரி. திருமணத்துக்குப் பின் ஜெர்மனியில் செட்டில் ஆனார்.

4 வருடங்கள் குடித்தனம் நடத்திய அவருக்கு மீண்டும் நடிப்பு ஆசை துளிர்விட்டுள்ளது. சென்னை திரும்பிய அவர் சொல்கிறார்.

சினிமா முன்பைவிட இப்ப ரொம்ப மாறி இருக்கு. நல்ல கேரக்டர் அமைந்தால் நடிக்கலாம் என்று இருக்கிறேன்.

தமிழ் சினிமாவைப் பொறுத்தவரை திருமணம் ஆயிட்டா நடிகைகளை புறக்கணிக்கிறாங்க. நடிகைகள் தலைவிதி அப்படி தான் இருக்கு.

ஹாலிவுட் நடிகை ஏஞ்சலினாஜூலியா வந்தவுடனே விஜய்க்கு அம்மாவா நடிக்கிறீங்களான்னு தான் கேட்பாங்க.

இந்தி, இங்கிலிஸ் சினிமாக்கள் தமிழ் சினிமா மாதிரி இல்லை. ஹேமமாலினியும் ஷர்மிளாதாகூரும் திருமணம் செய்து குழந்தைகள் பெற்ற பிறகும் கதாநாயகிகளாக நடித்தார்கள், கிளாமராகக் கூட நடித்தார்கள்.

சினிமா நிறைய விஷயத்தில் மாறி இருக்கு, இதிலயும் மாறினா நல்லா இருக்கும்.

இவ்வாறு கஸ்தூரி கூறினார்.




## வேதிகா இன்னொரு ஜோதிகா!

ஜோதிகாவின் திருமணத்திற்குப் பிறகு தமிழ் சினிமாவில் ஒரு வெற்றிடம் 'பச்சைக்கிளி முத்துச்சரம;' இந்த வெற்றிடத்தை அதிகரித்துள்ளது. 'மொழி' வெளியானால் அது இன்னும் தீவிரமடையும்.

குஷ்புவுக்குப் பிறகு ஏறக்குறைய அவர் இடத்தை நிரப்பியவர் ஜோதிகா. குஷ்புவே இதனை ஒப்புக் கொண்டிருக்கிறார்.

ஜோதிகாவின் முதல் படத்தைப் பார்த்து, யார் இது என்னைப் போல என ஆச்சரியப் பட்டதாக குஷ்புவே கூறியிருக்கிறார்.

சரி, ஜோதிகாவின் இடத்தை நிரப்பப் போவது யார்?

பலரும் இந்தக் கேள்விக்குப் பதிலாக வேதிகாவை சுட்டிக்காட்டுகிறார்கள். குண்டு கண்களும் கும்மென்ற உடம்புமாக இரண்டு படங்களில் நடித்து வருகிறார் வேதிகா. அதில் ஒன்று முனி. லாரன்ஸ் ஜோடி. காமெடியும் த்ரில்லும் கலந்த படம். முதல்பாதி காமெடியாகவும் பின்பகுதி த்ரில்லாகவும் இருக்கும் என்று சொல்கிறார் வேதிகா.

பாக்யராஜின் மகன் சாந்தனுவின் முதல் படத்திலும் இவர்தான் ஹீரோயின். தயாரிப்பாளர் எஸ்.தாணுவின் மகன் இயக்குகிறார். 'சக்கரகட்டி' என்ற அந்தப் படமும் ஏறக்குறைய முடிந்துவிட்டது.

இந்த இரண்டு படங்களும் வெளிவந்தால் ஜோதிகாவின் இடம் வேதிகாவுக்குதான் என்கிறார்கள். ஆனால் அவரோ மும்பை சென்று ஆல்பத்தில் நடிப்பதிலும், விளம்பரப் படங்களை ஒப்புக் கொள்வதிலும் ஆர்வம் காட்டுகிறார். ஒரே ஆறுதல்,

எங்கு சென்றாலும் தமிழ் படத்தில் தொடர்ந்து நடிப்பேன் என்று வேதிகா கூறியிருந்தாலும் ஜோதிகாவின் இடத்தை ரசிகர்கள் இவருக்கு வழங்குவார்களா?





# விசிட்



சூர்யா - நமீதா
வியாபாரி



## தமிழில் நடிகைகளுக்கு முக்கியத்துவம் இல்லை!
### -நடிகை ஆன்ட்ரியா

'பச்சைக்கிளி முத்துச்சரம்' படம் மூலம் தமிழில் அறிமுகம் ஆனவர் நடிகை ஆன்ட்ரியா. இப்படத்தில் இவர் சரத்குமாருக்கு ஜோடியாக நடித்துள்ளார். இப்படம் தற்போது வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

மனநலத்துறையில் பட்டப்படிப்பை முடித்துள்ள ஆன்ட்ரியா, மாடலிங்கிலும் ஈடுபட்டு வருகிறார்.

இவர் சிறந்த பாடகியும் கூட.

ஆன்ட்ரியா அளித்துள்ள பேட்டி வருமாறு :-

பச்சைக்கிளி முத்துச்சரம் படத்தில் நடிக்க முதலில் உதவி இயக்குநர் ரேஷ்மிதான் எனக்கு அழைப்பு விடுத்தார்.

பச்சைக் கிளி முத்துச்சரம் படத்தில் நடுத்தர வயது பெண்ணாக நடித்தேன். இதில் மேக் - அப் கொஞ்சம் கூட போடவில்லை. இதனால்தான் படம் யதார்த்தமானதாக உள்ளது.

தமிழ் படங்களைப் பொறுத்த வரையில் நடிகைகளுக்கு அவ்வளவாக முக்கியத்துவம் எதுவும் இருப்பதில்லை. பெரும்பாலான படங்களில் நடிகைகள் கவர்ச்சிக்கும், நடனம் ஆடவும் மட்டுமே பயன்படுத்தப்படுகிறார்கள். வெறும் கவர்ச்சியும் நடனமும் நடிப்பாகி விடாது.

எனக்குப் பிடித்த இயக்குநர் மணிரத்னம், அவர் இயக்கிய ரோஜா, அஞ்சலி, தளபதி போன்ற படங்களைப் பார்த்து பிரமித்திருக்கிறேன். அவருக்கு அடுத்தபடியாக எனக்குப் பிடித்த இயக்குநர் என்றால் அது கௌதம்தான். அவர் இயக்கிய 'காக்க காக்க' படம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

## செஞ்சிக்கோட்டையில் 567படிக் கட்டுகளில் ஏற மீராஜாஸ்மின் மறுப்பு

தனுஷ் நடிக்கும் 'பரட்டை என்கிற அழகுசுந்தரம்' படப்பிடிப்பு செஞ்சிக் கோட்டையில் நடந்தது. தனுஷ், மீராஜாஸ்மின் ஆடிப்பாடும் 'எங்கேடா அழகுந்தன் அரண்மனையோ அங்கே நான் வந்து விட வழியில்லையே' என்ற பாடல் காட்சியை இயக்குநர் சுரேஷ்கிருஷ்ணா படமாக்கினார்.

இந்தப் பாடலை புதுமையான கோணங்களில் படமாக்க விரும்பிய இயக்குனர் படப்பிடிப்பு குழுவினரை ராஜகிரி கோட்டை என்ற ராணிக்கோட்டை உச்சிக்கு அழைத்துப் போனார்.

தனுஷ் உள்ளிட்ட படக்குழுவினர் 567 படிக்கட்டுகளில் ஏறி உச்சிக்குச் சென்றனர்.

மீராஜாஸ்மின் தன்னால் 567 படிக்கட்டுகளில் ஏற முடியாது என்று மறுத்து விட்டார். டைரக்டர் அவரிடம் கெஞ்சினார். எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேட்கவில்லை.

மீராஜாஸ்மினால் படப்பிடிப்பை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. டைரக்டர் கடுப்பானார்.

அப்போது மலை உச்சிக்கு சென்ற கெமராமேன் வேல்ராஜ் அங்குள்ள இயற்கை அழகை டிஜிட்டல் கெமராவில் படம் பிடித்து வந்து மீராஜாஸ்மினிடம் காட்டினார். அதை ரசித்து பார்த்த மீராஜாஸ்மின், நீண்ட நேரத்துக்குப் பின் கஷ்டத்தை பொருட்படுத்தாமல் மலை உச்சிக்குச் சென்றார். அதன் பிறகு படப்பிடிப்பு நடந்தது.

கே.ஆர்.யோகேஷ் தயாரிக்கும் இப்படத்தின் பாடல் கெசட் வெளியீட்டு விழா அடுத்த மாதம் நடக்கிறது.

## 'சிவாஜி' படத்தில் அமெரிக்க இந்தியர்களை நடிக்க வைத்த ரஜினி!

ரஜினி நடிக்கும் 'சிவாஜி' படப்பிடிப்பு சமீபத்தில் அமெரிக்காவில் நடந்தது. ரஜினியும், டைரக்டர் ஷங்கர் உள்ளிட்ட படக்குழுவினரையும் ஒரு வாரம் அங்கு முகாமிட்டு படப்பிடிப்பை நடத்தி விட்டு திரும்பியுள்ளனர்.

அமெரிக்காவில் நடத்த படப்பிடிப்பில் அங்குள்ள இந்தியர்களை ரஜினி நடிக்க வைத்த ருசிகர தகவல்கள் வெளியாகியுள்ளது.

ரஜினியும் ஷங்கரும் அமெரிக்கா செல்வதற்கு முன்பே அங்குள்ள பிரபல ஆங்கில பத்திரிகைகளில் 'சிவாஜி' என்ற தமிழ் படப்பிடிப்பு அமெரிக்காவில் நடைபெற உள்ளது. இதில் சூப்பர் ஸ்டார் ரஜினியுடன் நடிக்க இங்கு வசிக்கும் இந்தியர்கள் தேவை. கல்லூரி முதல்வர் பாத்திரத்துக்கு பொருத்தமான தோற்றம், நடிப்பு ஆர்வம் உள்ளவர் தேவை என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

ரஜினி அமெரிக்கா சென்ற பிறகும் இதே விளம்பரம் பத்திரிகைகளில் மீண்டும் வெளியானது.

அந்த விளம்பரத்தைப் பார்த்து ஆயிரக்கணக்கான இந்தியர்கள் திரண்டனர். அவர்களில் குறிப்பிட்ட சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நியூஜெர்சியில் உள்ள நியூயோர்க் விமான நிலையத்தில் இருந்து ரஜினி வெளியே வருவது போன்று ஒரு காட்சி எடுக்கப்பட்டது. அவருடன் அமெரிக்க இந்தியர்கள் நடந்து வருவது போன்று நடித்தனர்.

நியூயோர்க்கில் உள்ள வால் ஸ்ட்ரீட் பகுதியிலும் சில காட்சிகள் படமாக்கப்பட்டன. அதிலும் அவர்கள் நடித்தார்கள். ஒவ்வொருவரும் ரஜினியுடன் நின்று போட்டோ எடுத்துக் கொண்டனர்.

ரஜினி படப்பிடிப்பை காண ஏராளமான ரசிகர்கள் திரண்டனர். பல கிலோ மீட்டர் தொலைவில் வேலை பார்த்தவர்கள் எல்லாம் லீவு போட்டு விட்டு குடும்பத்துடன் வந்தார்கள். குழந்தைகளையும் அழைத்து வந்திருந்தனர். ரஜினியுடன் முண்டியடித்து போட்டோ எடுத்தார்கள்.

முகப்பில்
ரவி - பாவனா





அஜித் - த்ரிஷா
கிரீடம்



## முகம் சுழிக்க வைக்கிறதா 'பச்சைக் கிளி முத்துச்சரம்'

மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கிடையே வெளியாகியிருக்கிறது பச்சைக்கிளி முத்துச்சரம். கௌதம் கதையை நகர்த்தும் விதமும், வசனங்களும், சரத், ஜோதிகா, ஆன்ட்ரியா மற்றும் மிலிந்த் சோமனின் நடிப்பும் ஏ கிளாஸ். அதிலும், காதில் மூன்று நான்கு வளையங்கள், மூக்குத்தி, பாசிமணி மாலை, அழுத்தமான லிப்ஸ்டிக், கண் நிறைய மை என வித்தியாசமான மேக்கப்பில் வரும் ஜோதிகாவின் தோற்றமும் நடிப்பும் கைத்தட்டல்களை அள்ளுகிறது ஹாரிஸ் ஜெயராஜின் இசையும் அரவிந்த் கிருஷ்ணாவின் ஒளிப்பதிவும் குறை சொல்ல முடியாதவை.

ஆயினும், சரத், ஜோதிகாவிடம் மனைவிக்கு தெரியாமல் உறவு ஏற்படுத்திக் கொள்வதும், ஜோதிகாவின் ரூம் போடலாம், நல்லா இருந்துச்சான்னு கேட்டான். இன்னைக்கு ஒருநாள் மட்டும் உங்க மனைவியா இருக்கேன் போன்ற அடல்ஸ் ஒன்லி வசனங்களும் குடும்பத்துடன் படம் பார்க்க வந்தவர்களை குறுகுறுக்க வைத்துள்ளது.

அதே நேரம் கவர்ச்சியோ விரசமோ இல்லாமல் மிக நுணுக்கமாக இந்தக் காட்சிகளை கௌதம் கையாண்டிருப்பதாகப்- பலர் பாராட்டுகிறார்கள்.



கீர்த்தி சாவ்லா



# தேன் கிண்ணம்

## காதலும் வாழ்க்கையும்

சர்வதேச பாட்டிகளின்
சமாதானக் கதைகேட்டு
சலித்துப் பான
யுத்தவேதாளம்
வெண்புறாவின் சிறகுகளை
விட்டு முருங்கையில்
ஏறிக்கொண்டதில்
மொட்டுக்குள் சருகாகி
முடங்கிப் போனது
அமைதிப்பூ.

வங்கிகளை மூடிவிட்டு
துக்கங்களும், ஏக்கங்களும்
சேமிக்கப் பழகிய
மக்களின் வயிற்றில்
பசி தாளம் போடுகிறது.

சமரச சமர்ரசமாகிட,
பகைமைத் தீயின் மேல்
வேற்றுமை நெய்வார்த்து
[illegible]மாய் குளிர்காயும்
[illegible]மை நாற்காலிகளின்
யுத்தப் பசிக்கு
மனுஷத் தலைகளை
ஆயுதம் தீனியாக்கும்.

கண்ணீர் குடித்து,
வியர்வைக் குளித்து
அம்மணம் உடுத்து
சுவாசித்தலுக்கான காற்றை
புழுதியில் தேடியே
பொழுதுகள் மறையும்.

கார்மேகம் பார்த்து
விதை விதைத்து
அறுவடை செய்தவன்,
வானில்,
எரிகணை பார்த்து
பதை பதைத்து
அறுவடையாக,
மரம் வளர்த்த இனம்
மரநிழலில் நின்று
பயம் வளர்க்கும்
வாழ்வியலில் இன்றில்
கானலும் நீருமாய்
காதலும் வாழ்க்கையும்
காண்பதற்கரிதே!

-மெய்யன் நட்ராஜ்,
வத்தளை.

## மலிவு விற்பனையாகிப் போன மரணம்!

மலிவு விற்பனையில்
விற்கப்படும் பொருளாய்
மிக மிக
மலந்து போனது
இந்த மரணம்!

முன்னமெலாம்
மதிப்பிருந்தது
மரணத்திற்கு!
இப்போதெல்லாம்
மதிப்பென்பதே
இல்லாமலாகிவிட்டது
இந்த மரணத்திற்கு!

அப்போதெலாம்
மரணம் வருவது
இடைக்கிடை!
இப்போதெலாம்
மரணம் வருவது
அடிக்கடி!

இன்றைய காலகட்டத்தில்
நிம்மதியின் விலாசம் தொலைத்து
சந்தோஷ ஆடை களைந்து
மரண பயத்தால்!

மரணம் என்பது
எப்போதும் இறைவன் விதி!
தற்போது மனிதன் சரி!!

ஒரு சந்தேகம்?
மரணத்தின் கயிறு
எமனிமா?
இல்லை மனிதனிடமா?!

மரணச்சேதி கேட்டு
வருவது அதிர்ச்சி!
அதுவே இப்போது
சாதாரண நிகழ்ச்சி!

அதிர்ச்சிக்குறி காட்டும்
மரணம் இப்போதெல்லாம்
அதிசயக் குறியாய்
ஆச்சர்யக் குறியாய்
வியப்புக் குறியாய்!

புதினமான மரணங்கள்
புதிது புதிதாய்...
நவீன நோய்களில்
நவீன காரணிகளில்!

முன்னமெலாம் மனிதரை
மரணம் துரத்தும் காலம்!
இப்போதெலாம்
மரணத்தை
மனிதன் துரத்தும் காலம்!

சில புரியாத
புதுக்கவிதைகளைப் போல!
இந்த மரணம்!!
கொல்பவனுக்குத் தெரியாது
நான் ஏன்
கொல்கிறேன்று!
சாகுபவனுக்குத் தெரியாது
நான் ஏன் சாகிறேனென்று!

வாழ்நாளை
நிச்சயப்படுத்தும் மனிதன்
தன் சா நாளை
நிச்சயப்படுத்த
மறந்து விடுகிறான்!

நிச்சயமில்லாத
இந்த உலகில்
மரணம் மட்டும்
மிகமிக நிச்சயம்!
நூறு வீதம் நிச்சயம்!

சிலர் இறைவனையே
மறந்துவிடுகின்றார்கள்!
அவர்கட்கெலாம்
இந்த மரணம் மட்டும்
எம் மாத்திரம்?!

சிலர் தம்மை
எமன் என்று
நினைத்துக் கொண்டு
தமக்கும்
எமன் இருப்பதை
மறந்து கொண்டு!

ஆம்; ஒருகாலம் வரும்
மனிதம் அழியும்!
உலகமே அழியும்!
ஏன் இந்த
மரணமே மரணமாகும்!
இறுதியில் ஈடிணையின்றி
தனித்திருப்பது
இறைவன் மட்டுமதான்!

-கோட்டைமுனை முத்துமணி,
பதுளை.

## யுத்தம் ஏற்படுத்திய சமூகத்தாக்கம்

மலிந்த மரணத்தின் எச்சங்களாய்
எலும்புகளில் அடுக்குண்ட
இரத்தமண் அணைகளின் இடுக்குகளில்
மலர்ந்த சமாதானத்தினை - கொஞ்சம்
ஆனந்தக் கண்ணீரால்
அபிஷேகிக்க முடியாமலே
அவசரமாய்
யுத்தம் என்ற விடியலில்
இரத்தவாடை வீசுகிறது எங்கள் மண்!

மழைத்தண்ணீரை
குடைத்தண்ணீராய்
பருகிய அதரங்கள் காய்வதற்குள்
ஓர்
இரத்தக் குளியல் நடத்துகின்றது
பட்டினிப் பிண்டங்கள் மேல்!

மனிதர்களைக் குழி தோண்டி குழி
தோண்டி
விதி தேடும் மனிதர்கள் - இன்னும்
மனந்தோண்டி மனிதம் மீட்காமலே
தட்டுத்தடுமாறி தத்தளிக்கின்றனர்.
அதனால்தான்
பட்டினி சூழ்ந்த உதிரத்தால்
புகைந்து கொண்டிருக்கிறார்கள் -
அன்றி
மனதால் புதைந்து
கொண்டிருக்கிறார்கள்!

நாளை
மண்ணை மீட்டு மண்டையோட்டினை
காவல் காப்பதற்குக் கூட
மனிதனை வாடகைக்கு அமர்த்தலாம்
அதுவும்
மனிதமற்ற மனிதனை

மொத்தத்தில்
செல்களின் விடியல்கள்
பலியானோர் பட்டியலில் தூக்கங்கள்
என - ஆங்காங்கே
பட்டினி சாபத்தில்
பரதேசிக் கோலத்தில்
மனிதர்கள் இங்கே
மயக்க நிலையில்
நடமாடிக் கொண்டிருக்கிறார்கள்!

-வாணிராஜா,
சுன்னாகம்.

## சூரியச் சட்டியில் புழுக்கள்

சமாதானக் கருவாடுகளை
யுத்த மழை பெய்து நனைத்து
ஊறவைத்து புழுக்க வைத்தன -
இதுதான்
அச்சமென்னும் ஏற்பு
மனிதத்திற்கு ஆப்பு.

ஆறறிவு பறவைகளின் - அழிவின்
தலைகீழ்ப் பயணங்களின்
இருள் வெளிச்சத்தில்
அணுவாயுதத்தை தேடிப்பிடித்து
கல்லறைக்கு தலையணை செய்த
சாதனை.

செம்புக் கூம்புக்கூர்கள் சுனாமிகளாகி
ஊனமும் வடுவுமாய் வரலாறு
படைத்தன
பெற்றோலில் குளித்து குதித்துக்
கொண்டு
விட்டில்களைத் தாண்டுகிறோம்


சிந்திக்க வேண்டியது
குறட்டையிடுகிறது
தேவையற்றது வரம்புகளை
தாண்டிவிட்டது.

இதனால் ஆலமரத்தை
செடியென்றோம் - வானவில்லை
நிலையானதென்றோம்
ஒவ்வொரு உப்புத்துளிகளையும்
கோடானகோடி
தேன் கிண்ண கடல்களில் சேர்க்கும்
வரை
சூரியச் சட்டியில்
வாழும் புழுக்கள் தான் நாம்.

ஒருவர் இமய மலையினுச்சியில்
ஒருவர் மரியானா ஆழியில்
இது சமாதானத்தின்
சமாந்தரக் கோடல்ல.

-அ.கா.மு.றிஸ்வின்,
மூதூர் - 01.


# கட்டுடல்!



மொடலிங் துறையில் ஈடுபடுகின்ற பெண்கள் தங்களது உடலை அளவுக்கு அதிகம் மெலிய வைப்பதால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படலாம் என்ற கருத்து இப்போது உலகம் முழுவதிலுமாகப் பரவி வருகின்றது.

இந்தக் கருத்துக்குச் சார்பாக இத்தாலி நாட்டில் மிலான் நகரில் உள்ள மொடல் கலைஞர்களும் இணக்கம் காட்டி வருகின்றனர். கட்டுடல் என்பது அளவுக்கு அதிகமாக மெலிந்த உடல் அல்ல என்பதை இவர்கள் தங்களது கண்காட்சிகளின் மூலம் காட்டி வருகின்றனர்.

# அவதாரம்




பிரபல பொலிவுட் நடிகை மல்லிகா ஷெராவத் கமலஹாசனின் தசாவதாரம் திரைப்படத்தில் நடித்து வருகிறார்.

முதல் நாள் படப்பிடிப்பில் கலந்து கொள்வதாக இருந்த மல்லிகா, இரு நாட்கள் கழித்து மூன்றாம் நாளே படப்பிடிப்பில் கலந்து கொண்டாராம். இதனால் படப்பிடிப்புக் குழுவினர் கடு கடுப்பில் இருந்த போதும், கமலஹாசன் இது பற்றி மௌனமாகவே இருந்து வருகிறாராம்.

காரணம், இத்திரைப்படத்திற்கு பெருமளவில் செலவு செய்யப்பட்டுள்ளது தானாம்.

படப்பிடிப்பில் கலந்து கொள்ளும் மல்லிகா எவருடனும் பேசாமல் தனக்குரிய காட்சிகள் படமாக்கப்பட்டதன் பின்னர் தனது அறைக்குள் சென்று அடைந்து கொண்டு விடுகிறாராம்...

# தயார்



திரைப்படத்துறைக்கு நன்றாகவே தான் தயார் நிலையில் தன்னை வைத்துக் கொண்டே வந்துள்ளதாக நிகித்தா ஆனந்தி கூறுகிறார். பொலிவுட் திரைப்படத்துறையில் புதிதாக காலடி எடுத்து வைத்திருக்கும் இவர், இந்திய அழகு ராணியாவார். 2003ஆம் வருடம் இந்திய அழகு ராணியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் தற்போது இரு திரைப்படங்களில் நடித்து வருகின்றார்.

# சமைக்க கற்றுக் கொடுங்கள்...

பல குடும்பங்களில் வீட்டில் மனைவிக்கு உடல் நிலை சரியில்லாமல் போகும்போது அங்கே உணவு சமைப்பது யார் என்ற மிகப்பெரிய கேள்வி எழுகிறது. கூட்டுக் குடும்பம் என்றால் யாராவது ஒருவர் சமைத்து விடுவார்கள். தனிக்குடித்தனத்தில் இது சாத்தியமில்லை.

ஆகவே கணவன் - மனைவி இருவருமே சமையல் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். ஒருவேளை, கணவன் - மனைவி இருவருக்குமே



உடல் நலம் குன்றிவிட்டால் அங்கே சமையல் செய்வது அடியோடு நின்று போய் விடுகிறது.

ஓரளவு வசதியுள்ளவர்கள் என்றால் உணவகங்களில் சாப்பிட்டு சில நாட்களை கழித்து விடுவார்கள். ஆனால் உடல் நிலை சீரடைவது நீடித்தால் சிக்கல்தான்.

இதுபோன்ற இக்கட்டான நிலையைத் தவிர்க்க உங்கள் பிள்ளைகளுக்கு சிறுவயதிலேயே சமையல் கற்றுக் கொடுப்பது அவசியம். 12 வயதிலிருந்து அவர்களை சமையல் செய்யத் தயார் படுத்தலாம். மகள் மட்டுமின்றி மகனையும் சமையலுக்குப் பழக்கலாம்.

ஆனால் இன்றைய பிள்ளைகள் சமையல் என்றாலே காத தூரம் ஓடுபவர்களாக இருக்கிறார்கள்.

இதனால் பிள்ளைகளை சமையல் செய்ய பழக்கும்போது, படிப்படியாகத்தான் கற்றுத் தரவேண்டும். எடுத்த எடுப்பிலேயே அதைச் செய், இதைச் செய் என்று அதட்டி வேலை வாங்காமல் சிறு சிறு வேலைகளை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

முதலில் கேஸ், மண்ணெண்ணெய் அடுப்பு என்றால் பாதுகாப்பான முறையில் அவற்றைப் பற்ற வைக்க கற்றுத் தரவேண்டும்.

தண்ணீர் சுட வைப்பது, பால் காய்ச்சுவது, டீ-காபி போடுவது, தோசை சுடுவது, ஆம்லெட் போடுவது, முட்டையை வேக வைப்பது போன்றவற்றை செய்யப் பழக்க வேண்டும். இந்த மாதிரி சிறு சிறு வேலைகளில் எல்லா பிள்ளைகளுக்குமே ஆர்வம் இருக்கும்.

இதைப் பழக்கிய பின்னர் அரிசி களைவது, காய்கறிகளை நறுக்குவது, கழுவுவது, மசாலாப் பொருட்களை ஒன்று சேர்ப்பது போன்ற வேலையை செய்யச் சொல்லலாம்.

நான்காவது கட்டமாக அவற்றை குக்கர் - வாணலியில் எந்த நேரத்தில் போடவேண்டும், எந்த நேரத்தில் இறக்க வேண்டும், வாணலியில் வறுப்பது என்றால் எந்தெந்த நேரத்தில் எல்லாம் காய்கறிகளை கிளறிவிட வேண்டும் என்பதைச் சொல்லித் தரலாம்.

இதேபோல் சமையலுக்கு பயன்படுத்தும் பொருட்களின் அளவிற்கேற்ப பாத்திரங்களை கையாள்வது பற்றி பிள்ளைகளுக்கு எடுத்துக் கூற வேண்டும். பொருட்களின் அளவை நீங்கள் எடுத்துக் கொடுக்காமல் அவர்களிடமே அந்த பொறுப்பை விடவேண்டும்.

சமையலைக் கற்றுத் தரும்போது அருகிலேயே நீங்கள் இருந்து விளக்க வேண்டும். எண்ணெயை



உபயோகிக்கும்போது அதை அவர்கள் சரியான அளவில் ஊற்றுவதற்கும் சொல்லித் தரவேண்டும்.

சாதம் வடிப்பதற்கு தேவைப்படும் தண்ணீரின் அளவு, குடும்ப நபர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தேவைப்படும் அரிசியின் அளவு, காய்கறிகளை வேக வைப்பதற்கு போதுமான தண்ணீர், சாம்பார் பொடி, மசாலாப் பொடி எவ்வளவு தேவை என்பதையும் சுயமாக



தேர்ந்தெடுக்கும் வகையில் பழக்க வேண்டும்.

கத்தி, அரிவாள் மனையை அவர்களாகவே கையாளும் அளவிற்குப் பழக்க வேண்டாம். ஓரளவு சமையலில் தேர்ந்த பின்பு சொல்லிக் கொடுங்கள்.

# லேடிஸ் ஸ்பெஷல்



## பொட்டு வைத்த முகமோ...

எவ்வளவு அழகாக மேக் - அப் செய்திருந்தாலும், எவ்வளவு விலை உயர்ந்த உடைகள் அணிந்திருந்தாலும், வைரத்திலே ஆபரணங்கள் பூட்டியிருந்தாலும் முகத்திற்கு ஒரு பொட்டு மட்டும் வைக்காமல் இருந்தால், அழகு முழுமை பெறவில்லை என்பது பலரின் கருத்து. அதுவும் பட்டுப்புடவை கட்டிவிட்டால், பொட்டு அவசியம் தேவை என்று வலியுறுத்துகிறவர்களும் உண்டு.

பெண்களைப் பொறுத்தவரையில் பொட்டு அழகின் சின்னமாக கருதப்படுகிறது. முன்பு குறிப்பிட்ட மதத்தினர் மட்டும்தான் பொட்டு வைப்பார்கள் என்று கருதப்பட்டது. இப்போது அழகு என்ற அடிப்படையில் எல்லோருக்கும் பிடித்ததாக பொட்டு மாறிக்கொண்டிருக்கிறது. கடல் கடந்து வெளிநாடுகளிலும் பொட்டின் புகழ் பரவிக் கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.



பொட்டை விரும்பும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருப்பதால் எல்லோரையும் கவரும் விதத்தில் பொட்டுக்கள் வண்ணம், வடிவம் போன்றவைகளில் புதுமை படைத்துக் கொண்டிருக்கிறது. அதனால் பொட்டுக்கென்றே தனிக் கடைகள் தோன்றும் நிலை ஏற்பட்டு விட்டது. தங்க நகை கடைகளில் பெண்கள் வடிவங்கள் பார்த்து ஆபரணங்கள் தேர்வு செய்வது போல், இப்போது பொட்டு கடைகளுக்குச் சென்று, போட்டி போட்டுப் பொட்டுகளை தேர்வு செய்து வாங்குகிறார்கள். அதனால் பொட்டும் இப்போது ஆபரணம் என்ற அந்தஸ்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறது.

இதில் பொட்டும் - ஆபரணமும் சேர்ந்திருப்பது புது விஷயம். புடவையில் முத்துக்கள், மணிகள், ஜிகினாக்கள் இணைப்பது போல், இப்போது பொட்டுகளிலும் இணைப்புகள் செய்கிறார்கள். எந்த மாதிரியான இணைப்புகள் தேவை என்பதை உணர்ந்து, அதை மறுநாளே உருவாக்கி கொடுத்துவிடும் பணியிலும் பொட்டு தயாரிப்பாளர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

எந்த வடிவ முகத்திற்கு, எந்த மாதிரியான பொட்டுகள் பிடிக்கும்?

***சதுர முகம் :***



* இவர்கள் நீளமான பொட்டுகளை வைக்கக்கூடாது. அகலம் அதிகமுள்ள பொட்டுகளை வைத்துக்கொள்ளலாம். இவர்கள் வைத்துக் கொள்ளும் பொட்டுக்கள் நீளமானதாகவும், அகலம் குறைந்ததாகவும் இருக்கக் கூடாது. உருண்டை மற்றும் முட்டை வடிவிலான பொட்டுகள் இவர்களுக்குப் பொருத்தமாக இருக்கும்.


***உருண்டை முகம் :***

* இவர்கள் நீளமான பொட்டுகளை உபயோகிக்க வேண்டும். நீளமான பொட்டு இவர்களது உருண்டை முகத்தைச் சற்று நீளவாக்காக மாற்றியது போல் அழகுதரும்.

* இவர்கள் நெற்றி குறுகலாக இருந்தால், அவர்கள் புருவங்களுக்கு மத்தியில் பொட்டு வைக்கவேண்டும்.

**முக்கோண வடிவ முகம் :**

* இவர்களுக்கு அநேகமாக எல்லாவகைப் பொட்டுகளும் பொருந்தும் நெற்றி அகலமாக இருந்தால், நீளமான பொட்டுகளைப் பயன்படுத்த வேண்டும். முக்கோண வடிவிலான பொட்டுகளும் இவர்களுக்கு நன்றாக இருக்கும். அகலமான நெற்றியாக இருந்தால், புருவத்தில் இருந்து ஒரு சென்டி மீற்றருக்கு மேல் பொட்டு வைக்க வேண்டும்.



***இதய வடிவ முகம் :***

* இவர்களுக்கு நீண்ட பொட்டுகள் நன்றாக இருக்கும்.

முகத்தின் வடிவம் மட்டுமின்றி உடை, சரும நிறம் போன்றவைகளும் பொட்டுடன் சம்பந்தப்பட்டதுதான். அதனால் அவைகளுக்கும் பொருத்தம் ஏற்படும் விதத்தில் பொட்டு வைக்க வேண்டும். கோதுமை நிற சரும பெண்களுக்கு எல்லா நிற பொட்டுகளும் பொருத்தமாக இருக்கும்.


## கொண்டை அலங்காரம்...!

**முகூர்த்த ஜடை**




தேவையானபடி வகிடு எடுத்து உச்சிபில்லை வைத்து பின்னல் போட்டு தங்க நிறம் குஞ்சலம் அல்லது குண்டு குஞ்சலம் வைக்கவும். பின்னர் ஜடை அலங்காரத்தை கூந்தலில் வைத்து கட்டி விடவும். பின்னர் ரோஸ் வைத்து நடு நடுவே அலங்கரிக்கவும்.

**ரிசப்சன் ஜடை**



முதலில் முன்பகுதியில் 'பப்' வைக்கவும். பிறகு ஓவர் டேப் சுருள் போடவும். அதன் பின்னர் மீதியுள்ள முடியை சவுரி வைத்து பின்னல் இட்டு குஞ்சலம் வைக்கவும். அதன் பின்னர் நகை இணைப்பை உச்சியில் வைக்கவும். அதன் பிறகு கோழி கொண்டை மற்றும் மல்லிகை வைத்து அலங்கரிக்கவும்.



**பேஷன் ஜடை**

முதலில் முகத்திற்கு ஏற்ப வைத்து கொண்டு அதன் பிறகு உச்சிபில்லை (ராக்கொடி) வைத்து சவுரி வைத்து. ஜடை பின்னி பிறகு குஞ்சலம் வைக்கவும். அதன் பிறகு உச்சியில் கோழி உருண்டை வைத்து அலங்கரிக்கவும். பின்னர் ஜடையில் நகை வைத்து அதன் மேல் கோழி கொண்டை சம்பங்கியை வைத்து அலங்கரிக்கவும்.

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* —ஷோபா—

### பருப்பு பழப்பாயசம்

***தேவையான பொருட்கள் :-***

முந்திரிப் பருப்பு - 100 கிராம்
பாதாம் பருப்பு - 100 கிராம்
பேரிச்சம் பழம் - 100 கிராம்
சீனி - 200 கிராம்
ஏலக்காய் - 5
திராட்சைப்பழம் - 15
உப்பு - சிறிது
பால் - 1/2 லிட்டர்
நெய் - சிறிது
கிராம்பு - 2

***செய்முறை :-***

முந்திரிப் பருப்பு, பாதாம் பருப்பு இரண்டையும் சிறிது வெதுவெதுப்பான நீரில் அரை மணி நேரம் ஊறவைக்கவும். பின்பு அவற்றின் தோலை எடுத்துவிட்டு பேரிச்சம்பழத்தை (கொட்டை எடுத்தது) அதனுடன் சேர்த்து வெண்ணெய் போல் அரைத்து பாலுடன் சேர்த்து அடுப்பில் கொதிக்க வைக்கவும். பின்பு அதன்மேல் சீனியைப் போட்டுக் கலக்கவும். நன்கு கொதித்ததும் நெய்யில் திராட்சையைப் பொரித்துப் போடவும். சிறிது உப்பு, கிராம்பு, ஏலக்காய், சிறிது சீனி சேர்த்துப் பொடித்துப் போடவும்.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி**

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

**முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி**

62

பெயர் : ..................

முகவரி : ..................

..................

..................

தே.அ. அட்டை இல : ..................

கையொப்பம் : ..................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.

மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -62**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
06.03.2007

பரிசுப் போட்டி இல - 60
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

றழியா ஏ.ஜான்
மகுதி வீதி, மூதூர் 02

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.




**ஆனால்** அந்தப் பாதையை நிறைய உபயோகப்படுத்துகிறார்கள் என்று தெரிந்தது. ஏனெனில் துளிகூடப் புல் வளர்ந்திருக்கவில்லை.
கடற்கரையிலிருந்து சுமார் ஆறடி மேலாக, புதர்ப் பகுதியின் ஓரமாக இரண்டடி அகலத்துக்குச் சென்றது அந்தப் பாதை. இங்குமங்குமாகக் குதிரைக்ள் அல்லது கழுதைகளின் குளம்புச் சுவடுகளைக் காண முடிந்தது.

ஒரு மரத்தின் அகன்ற வேரின் மீது அண்டோனியோ உட்கார்ந்து கொண்டான். என்னையும் உட்காரும்படி



சைகை காட்டினான். வெயில் ஈவிரக்கமின்றிக் கொளுத்திக் கொண்டிருந்தது. என் கைக்கடிகாரத்தின்படி அப்போது மணி பதினொன்று. ஆனால் வெயிலின்படி உச்சிக் காலமாகியிருக்குமென்று தோன்றியது. தரையில் ஒரு குச்சியை நட்டுப் பார்த்தபோது, நிழலே விழவில்லை. நடுப்பகல்தான். கடிகாரத்தை அதற்கேற்றாற்போல் மாற்றிக் கொண்டேன். அண்டோனியோ கொக்கோ இலைகள் கொண்ட தன் பையைக் கவிழ்த்தான். ஏழு இலைகள் மிஞ்சியிருந்தன. நான்கை எனக்குக் கொடுத்து, மூன்றைத் தனக்கு வைத்துக் கொண்டான்.

நான் புதருக்குள் சிறிது தூரம் சென்றுவிட்டு நூற்றைம்பது ட்ரினிடாட் டாலரும், அறுபது ப்ளாரினும் எடுத்துக் கொண்டு திரும்பினேன். அதை அவனிடம் நீட்டினேன். அவன் பெரும் வியப்புடன் அவற்றை வெறித்துப் பார்த்தான். நோட்டுக்களைத் தொட்டுப் பார்த்தான். எப்படி அவை அவ்வளவு புத்தம் புதிதாக இருக்கின்றன? எப்படிச் சிறிதும் நனையாமல் இருந்தன? நான் அவற்றைக் காய வைத்து அவன் பார்த்ததே கிடையாதே? அவனுக்குப் புரியவேயில்லை. நோட்டுக்களைத் தன் கைகளில் வைத்துக் கொண்டபடி எனக்கு நன்றி சொன்னான். வெகுநேரம் ஏதோ யோசனை செய்தான். பிறகு, ஐந்து ப்ளாரின் நோட்டுக்களில் ஆறு நோட்டுக்களைத் தன்னிடம் வைத்துக் கொண்டு அதாவது முப்பது ப்ளாரின் தவிர - மிச்சத்தையெல்லாம் என்னிடம் திருப்பிக் கொடுத்துவிட்டான். நான் வற்புறுத்திப் பார்த்தேன். ஆனால் அதற்குமேல் வாங்கிக் கொள்ள முடியாதென்று மறுத்துவிட்டான். அதே சமயம் அவன் மனத்தில் ஏதோ மாறுதல் ஏற்பட்டது. இங்கே நாங்கள் பிரிவதென்று முதலிலேயே தீர்மானித்திருந்தோம். ஆனால் இன்னுமொரு நாள் அவன் என்னுடன் இருப்பான் போல் தோன்றியது. சரி என்றேன். மேலும் சில முட்டைகள் சாப்பிட்டோம். சுருட்டுப் பற்ற

வைத்தோம். உலர்ந்த சருகுக் குவியலில் இரண்டு கற்களை அடித்து நெருப்புப் பற்ற வைப்பதற்கு அரை மணிக்கு மேலாயிற்று. பிறகு புறப்பட்டோம். மீண்டும்.

மூன்று மணி நேரம் நடந்திருப்போம். நீண்ட நேரான பாதையொன்றை அடைந்தோம். அங்கே,எங்களுக்கு நேர் எதிரில் ஓர் ஆள் குதிரை மீது வந்து கொண்டிருந்தான். பிரமாண்டமான தொப்பி. நீண்ட பூட்ஸ்கள். டிரௌஸர் இல்லை. ஆனால் தோலில் செய்த ஜட்டி போன்ற ஒன்று. பச்சைச் சட்டை. ஏறத்தாழ இராணுவ அங்கி போலிருந்த மங்கிப்போன அங்கி. அதுவும் பச்சை நிறந்தான். ஆயுதங்களும் இருந்தன. ஓர் அருமையான ரை.'.பிள். பெல்ட்டில் இணைத்த பெரிய ரிவால்வர்.

"கரம்பா! அண்டோனியோ, ஹிஜோ மியோ! (என் மகனே!)" வெகு தூரத்தில் வரும்போதே அந்தக் குதிரைக் காரனை அண்டோனியோ அடையாளம் கண்டு கொண்டு விட்டான். அதை அவன் என்னிடம் சொல்லவில்லையே தவிர, வெளிப்படையாகத் தெரிந்தது.

அந்தச் நெருப்பு நிற ஆள் - குறைந்தது நாற்பது வயதிருக்கும் - குதிரை மீதிருந்து இறங்கினான். இருவரும் பெருவிரலால் ஒருவர் தோளை மற்றவர் தொட்டார்கள். (இதே மாதிரி வணக்கத்தைப் பிற்பாடு பல முறை நான் கண்டேன்.)

"யார் இது?"

"என்னோடு தப்பி வந்தவன். பிரெஞ்சுக்காரன்."

எழுதியது: ஹென்றி ஷாரியர்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

"எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?"

"சிவப்பிந்திய மீனவர்கள் இருக்கிறார்களே, அந்த இடத்திற்கு எவ்வளவு அருகில் போக முடியுமோ அவ்வளவு அருகில் போகிறேன். இவன் சிவப்பிந்தியப் பிரதேசத்தின் குறுக்கே புகுந்து வெனிசுலாவுக்குப் போக விரும்புகிறான். பிறகு அங்கிருந்து குரசாவோ அல்லது அருபாவுக்குத் திரும்பிச் செல்ல ஏதாவது வழி செய்து கொள்வானாம்."

"கோவாஜிரா சிவப்பிந்தியர்கள் பொல்லாதவர்கள்." என்றான் அந்த ஆள். "உன் கையில் ஆயுதம் இல்லை. இதை எடுத்துக் கொள்." ஒரு குத்துக் கத்தியைக் கொடுத்தான் என்னிடம். அது பளபளவென்ற மாட்டுக் கொம்புப் பிடியுடன் இருந்தது. அதன் தோல் உறையையும் கொடுத்தான்.

பாதை ஓரமாக உட்கார்ந்து கொண்டோம். நான் ஷூக்களைக் கழற்றினேன். என் பாதங்கள் ஒரே இரத்தக் களரியாக இருந்தன. அண்டோனியோவும் அந்தக் குதிரைக்காரனும் ஏதோ வேகமாகப் பேசிக் கொண்டார்கள். கோவாஜிராவுக்குப் போவதென்ற என் திட்டம் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அது தெளிவாய்த் தெரிந்தது. என்னைக் குதிரை மீது ஏற்றிக் கொள்ளும்படி அண்டோனியோ சாடை காட்டினான். ஷூக்களைத் தோளில் தொங்கப் போட்டுக் கொண்டு, காலைத் திறந்தாற் போல் வைத்துக் கொண்டால் என் கால் புண் உலர்ந்து போகுமாம். இவ்வளவையும் சைகைகள் மூலமாகவே எனக்குப் புரிய வைத்தான்.

குதிரைக்காரனும் ஏறிக் கொண்டான். அண்டோனியோ என் கைகளைக் குலுக்கினான்.

அவ்வளவுதான், கண்ணிமைக்கும் நேரம்கூட இல்லை. அண்டோனியோவின் நண்பனுக்குப் பின்னால் நான் அமர்ந்திருக்க, குதிரை பறந்தது.

அன்று பகல் பூரா, அன்று இரவு பூரா நாங்கள் குதிரைச் சவாரியில் சென்றோம். நடுநடுவே சிறிது நிற்போம். அவன் ஒரு புட்டி சாராயம் எனக்குக் கொடுப்பான். கொஞ்சம் குடிப்பேன்.

மறுநாள் விடிகாலையில்அவன் கடிவாளத்தை இழுத்துப் பிடித்தான். வெயில் ஏறிற்று. கல்லைப் போலிருந்த ஒரு பாலாடைக் கட்டியும், இரண்டு பிஸ்கெட்டுகளும் கொடுத்தான். ஆறு கொக்கோ இலைகளும்,அவற்றை வைத்துக்கொள்வதற்காக பெல்ட்டில் கட்டக்கூடிய வாட்டர் புரூ.'.ப் பையொன்றும் பரிசாக அளித்தான். என்னைக் கைகளால் அணைத்துக் கொண்டு அண்டோனியோவிடம் செய்தது போலவே என் தோளைப் பெருவிரலால் தட்டினான். பின்பு குதிரையில் ஏறிக்கொண்டு முழு வேகத்தில் பறந்துவிட்டான்.

பிற்பகல் ஒரு மணிவரையில் நடந்து போய்க் கொண்டிருந்தேன். புதர்ப் பகுதி எதுவும் அதற்கப்புறம் இருக்கவில்லை. தொடுவானம் வரையில் ஒரே ஒரு மரம்கூடத் தென்படவில்லை. கொளுத்தும் வெயிலில் பளபளத்தது நேர்த்தியான கடல். என் ஷூக்களை என் இடது தோள் மீது போட்டவாறே வெறும் காலுடன் நடந்தேன். சரி,கொஞ்ச நேரம் படுத்திருக்க வேண்டியதுதான் என்று நான் முடிவெடுத்த அதே சமயம், தொலைவில் கடற்கரைக்கு மிகவும் தள்ளினாற்போல் ஐந்தாறு மரங்கள் இருப்பது போல் தோன்றியது. ஒரு வேளை பாறைகளோ என்னவோ.

எவ்வளவு தூரம் இருக்கும் என்று கணக்கெடுக்க முயன்றேன். அநேகமாய் ஆறு மைல் இருக்கக்கூடும். கொக்கோ இலையொன்றை எடுத்து அதில் பாதியை மென்று கொண்டே புறப்பட்டேன்.

ஒரு மணி நேரத்துக்குப் பின்னர்,தூரத்தில் தெரிந்தவை என்னவென்று சந்தேகமில்லாமல் காண முடிந்தது. குடிசைகள் அவை. வைக்கோல் அல்லது வெளிர் பழுப்பான தழையைக் கொண்டு அவற்றிற்கு கூரை வேய்ந்திருந்தார்கள். ஒரு குடிசையிலிருந்து புகை வந்துகொண்டிருந்தது. பிறகு சில சிவப்பிந்தியர்களைக் கண்டேன். எல்லோரும் குடிசைகளுக்கு முன்னே கூடி என்னைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.அந்த ஆண்களும்,பெண்களும் முக்கால் நிர்வாணமாக இருப்பதும் எனக்கு நன்கு தெரிந்தது. உடம்பின் அந்தரங்கமான பாகங்களை மட்டும் சிறிது துணி மறைத்துக் கொண்டிருந்தது. அவர்களை நோக்கி மெதுவாக நடந்தேன்.

மூன்று பேர் ஆண்கள் - தங்கள் வில்லின் மேல் சாய்ந்தாற் போல் நின்றிருந்தார்கள். கைகளில் அம்பு வைத்திருந்தார்கள். நட்பு முறையிலோ அல்லது பகைமை முறையிலோ அவர்கள் துளியும் அசையக் காணோம். குரைத்துக் கொண்டே ஒரு நாய் வெறியுடன் என்மீது பாய்ந்து வந்து, என் முழங்காலுக்குக் கீழே கடித்தது. என் டிரௌசரில் ஒரு துண்டைப் பிய்த்து விட்டது. என்னை மறுபடியும் தாக்குவதற்காகப் பாய்ந்தபோது, ஒரு சிறிய அம்பு அதன் வால் பக்கத்தில் தாக்கியது.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*




**லயம்** போன்ற வீடுகளில் ஒரே அறையினுள்ளே குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் நித்திரை கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. இதனால் பாலியல் உறவுகள் பற்றிய விபரீத எண்ணங்கள், இளம் பராயத்தினருக்கு ஏற்பட வாய்ப்புண்டு. உடல் ரீதியான வளர்ச்சிகள் குறித்து அவர்களுக்கு உளச்சிக்கலை ஏற்படுத்துவதுடன் அதைப் பற்றிய தெளிவு கிடைப்பதில்லை. எனவே தங்கள் மூக்குகளை சமூதாயத்தின் மீது மோதி உடைத்துக்கொண்ட நிலையில், எங்கேயாவது இதனை பூர்த்தி செய்து கொள்வதற்காக துடிக்கின்றனர். இவ்விதமுள்ள நிலையில் தேயிலை தோட்ட இளம் ஆண்களும் பெண்களும், வயது வரம்பின்றி பாலியல் வன்முறையில் ஈடுபடுவது வியப்பிற்குரியதல்ல. பதின்மர்கள் உடனடியாக தாவிச் செல்லும் மனநிலையுடையவர்களாதலால் பிழையாக செயற்பட்டு உள ஊனமுற்று, குடும்ப வாழ்க்கையில் வெற்றி காணாத, சமுதாயத்தில் பின்னடைவான சந்ததியினை உருவாக்குகின்றனர். காலம் காலமாக மலையகமும் இவ்வாறே தொடர்கிறது.

***பெண்ணுடன் சமயங்கள் உரையாடுகின்றன:-***

இந்த உலகம் பெண்களின் ஆதிக்கத்தில் இருந்துள்ளதென வரலாறுகள் உண்டு. இன்று நாட்டை ஆட்சி செய்வது முதல் வேறுமுக்கிய பதவிகளையும் பெண்கள் வகிக்கின்றனர்.



இருந்த போதும் பெண்கள் சர்வதேச ரீதியிலும் முழுமையான விடுதலையுடனும் சுதந்திரமாக முன்னுரிமை பெற்று வாழ்வதாக தெரியவில்லை. தேயிலைத் தோட்டப் பெண்களும் இந்நிலையிலேயே உள்ளனர் என்பதை இரண்டாம் அத்தியாயம் விபரித்துள்ளது. இவர்களை சமய ரீதியாக நோக்கும்போது,அதிகமாக சைவசமயத்தைப் பின்பற்றும் மக்களாக உள்ளனர். எனவே சைவசமயத்துடன், தேயிலைத்தோட்டப் பெண்களில் நிலையினை அறிவதோடு, இயேசு கிறிஸ்துவினூடாக இவர்களது வாழ்வின் விடுதலை நோக்கங்கள் பற்றிய ஆய்வானது மூன்றாம் அத்தியமாக, 'பெண்ணுடன் சமயங்கள் உரையாடுகின்றன' என்ற மலராக வருகிறது.

***ஆரியர் திராவிடர் உலகில் பெண்கள் :-***

:உலகில் பல்வேறு விதமான உயிரினங்கள் வாழ்கின்றன. அவற்றில் எல்லா உயிரினங்களிலும் மேலான பகுத்தறிவு உள்ள படைப்பின் சிகரமாக பெண்ணையும் ஆணையும் இறைவன் உருவாக்கியுள்ளார். எனவே மானிடர்களை குறித்து கூறப்படாத சமயங்கள் இருக்க முடையாது. இந்து சமயத்திலுள்ள வேதங்கள், வேதாந்தம்,பக்தி இலக்கியங்கள், இதிகாசங்கள், புராணங்கள் போன்றவற்றை நோக்கும்போது பெண்களை குறித்தும் பரவலாக எழுதப்பட்டுள்ளது. ஆரியர் திராவிடர் உலகில் பெண்கள் உயர்வாகவும், தாழ்வாகவும் மதிக்கப்பட்டதையும் நடத்தப்பட்டதையும் தெளிவாக காணலாம். பெண்களைக் குறித்த பாதகமான, சாதகமான சித்தாந்தங்களையும், கருத்தியல் கோட்பாடுகளையும் செயலாற்றங்களையும் பரவலாக, சுருதி இலக்கியங்களிலும், ஸ்மிருதி இலக்கியங்களிலும், இதற்குபின் எழுந்த சமயசார்புள்ள, சார்பற்ற நூல்களின் மூலமும் அறியலாம்.

***பெண்களும் சுருதி இலக்கியங்களும்:-***

சுருதி இலக்கியங்களில் வேதங்களும் வேதாகமகங்களும் முக்கியமானவை களாகும். இதனடிப்படையில் திராவிடர் ஆரியர் சமூகத்தில் பெண்கள் சமூக சமய ரீதியாக சமத்துவத்தையும், சகோதரத்து வத்தையும் நல்ல மரியாதையையும் பெற்று வாழ்ந்தனர் என அறியமுடிகிறது. சும்சா கரத்தினுள் அடங்கும் பிரமமச்சாரிய காலத்தில் வேதங்களை கற்பதற்காக உபணயனத்தை அணிவித்து மதச்சடங்கு களுடன் பெண்களை அனுப்பி வைத்தனர். "பிரஹாச்சாரியனா கன்னியா யுவனம் வின்தேத்பீம்" என்றால் அதர்வேதம் 11:- 5 - 8 இன்படி இளம் பெண்கள் கற்கலாம். தங்களது கல்விக் காலத்தை கடக்கும் வரை திருமணம் செய்யக்கூடாது. எடுத்துக் காட்டாக "சத்யோத்வாஹார்ஸ்" என்பது திருமணம் செய்து கொள்ளும் வரை கல்வி கற்பதிலேயே செலவழிப்பதையும் குறிக்கிறது. "த்வம் ஸ்திரி த்வம் புமான் அஸ்" இதன் பொருளானது நீயே ஆண், நீயே பெண் என பரம் பொருளை சித்தரிக்கிறது. பிரஹதாரணிய உபநிட தத்தில் வாஸக் நவி, சர்க்கி என்ற பெண் களையும், பெண்கள் கல்வியில் உயர்ந்த நிலையில் இருந்தனர் என்பதையும் வேதாந்தம் குறிப்பிடுகிறது.

பொதுவாக இக்கால கொள்கையின்படி ஆண், பெண் என்ற இருவருக் குமே நான் யார்? எனது இலக்கு என்ன? என்பதை அறிந்து இறைநிலை அல்லது முக்தியினை அடையமுடியும் என்பதனை எடுத்துகாட்டுகிறது.

***பேசும் அடிமைகளும் ஸ்மிருதி இலக்கியங்களும் :-***

ஸ்மிருதி காலங்களுக்குள், பெண்களை பற்றிய இலக்கியங்களை இடையே காணலாம். ஆண் சமுதாயத்தில், ஆண்களால் எழுதப்பட்ட இரண்டு இதிகா சங்களிலும் , 18 பெரிய புராணங் களிலும் பெண்களின் தன்மை கூறப் படுகிறது. இதில் ஆண்களின் சிந்தனைப் போக்கு பரவலாக இழையோடியிருப்பதைக் காணலாம். இராமாயணத்தில் சீதை கற்புக்கரசி என கூறப்பட்டாலும், இதனை

**ஸ்ரீ முகன்**

சமூகத்தின் முன்பு நிருபித்து காட்டவேண்டு மென இராமன், சீதையை தீக்குழிக்க வைக்கின்றான். இதன் மூலம் பெண் களுக்கு மட்டுமே, கற்பு, தவறாமை, நாணயம். சத்தியம் போன்றவை தேவை யென்று கூறி,மறைமுகமாக,பெண் அடிமைத்தன அடக்கு முறையை தெளிவு படுத்துகிறான். சாதி அமைப்பும், கல்வியறிவும் இல்லாத நிலையிலே பெண் இனம் தாழ்வுற்றது. மகாபாரதம், பஞ்ச பாண்டவரான ஐவரின் மனைவியாக பாஞ்சாலி இருக்கிறாள். ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலையிலிருந்து சமுதா யத்தில், பாஞ்சாலியின் நிலைமை ஆண் ஆதிக்க சிந்தனைப் போக்கை காட்டுகிறது.

5ம் சோழர் காலத்தில்,முக்கிய இடம் வகித்த கோவில்களிலும் மடங்களிலும் பேசுகின்ற அடிமைகளை தங்களுக்கென உரிமையாக்கினர். சோழர் காலத்தின் பிற்பகுதியில் தேவரடியார் அமைப்பு முறை பரவலாக வளர்ந்தது. *(துளிர்க்கும்)*

# வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்"




அந்தத் தாய் ஆறடி மண்ணுக்கடியில் நிரந்தரமாக உறங்கும் இடம் சாப்ளினின் மூன்று நாள் குழந்தையின் சமாதிக்கு அருகில் இருக்கின்றது.

கவலைகளை மறைக்க மீண்டும் வேலையில் மூழ்கத் தொடங்கினார். மனச்சுமையைக் குறைக்க அங்குமிங்கும், உணவு விடுதிகளுக்கும், கடற்கரைக்கும் சென்றார். அப்பொழுது அவர் கண்ணில்பட்டாள் ஒரு ஊர் பெயர் தெரியாத துணை நடிகை. அழகுச் சிலை போல இருந்த அவள் விரைவிலேயே திரை உலகச் சரித்திரம் படைத்தாள். அவளுடைய பெயர் 'ஜீன் ஹார்லோ!' ஹாலிவூட் சரித்திரத்திலேயே உலக மக்களைத் தன் அழகோடும் நடிப்பு ஆற்றலோடும் சொக்க வைத்த முதல் பெண் நடிகை அவள். ஆனால் அவள் முப்பது வயதை எட்டிப் பிடிக்கும் முன்பே அகால மரணம் அடைந்தாள்.

ஜீன் ஹார்லோவைப் பற்றி இன்றும் மக்கள் பேசிக் கொண்டேயிருக்கிறார்கள். இனக் கவர்ச்சியின் இருப்பிடமாக இருந்த இவள், விட்டுச் சென்ற இடத்தைப் பிடித்துக் கொண்டவள் மர்லின் மன்றோ!

சாப்ளின் வாழ்க்கையில் பல தேவையில்லாத சம்பவங்கள் விளையாடத் தொடங்கின. அவருடைய





புகழ், பணம் போன்றவைகளில் பங்கெடுத்துக் கொள்ளப் பல பெண்கள் அவர் போன இடங்களில் எல்லாம் அவரைச் சுற்றி வளைக்கத் தொடங்கினார்கள். அந்த வகையில் அவருக்குப் பல ஊர்களில் தற்காலிக காதலிகள் பலர் கிடைத்தார்கள். கிடைத்த சந்தர்ப்பங்களை அவரும் விடவில்லை! பலர் சில நாட்களுக்குப் பிறகு இவரிடம் எதிர்பார்த்தது கிடைக்காது என்று தெரிந்தவுடன் மற்ற இடங்களில் வலைவீச விரைவிலேயே சென்றுவிட்டார்கள்.

சாப்ளினுக்கு இளமைக் காலக் காதலி ஹெட்டி தன்னை விட்டுச் சென்றவுடன் அவர் மனதில் நிரந்தரமான ஒரு ஏக்கம் குடிபுகுந்து கொண்டு அவரை வாட்டிக் கொண்டிருந்தது. இருமுறை திருமணம் செய்து கொண்ட பிறகும், அவைகள் வேகமாக முறிந்து விடவே அந்த ஏக்கம் அதிகரித்தது. அந்த மனநிலையின் பிரதிபலிப்புத்தான் அவருடைய பெரும்பாலான படங்களில் கதாநாயகனுக்குக் காதலில் தோல்வி!

தன் மனக் கசப்பைத் தீர்க்க பல அழகான பெண்களுடன் இவர் திரிவது பத்திரிகைகளில் இடம் பெறத் தொடங்கின. புகைப்படங்களோடு. அவர்களில் பலர் இருபத்தொரு வயதை எட்டிப் பிடிக்காதவர்கள். அமெரிக்காவில் 'தி மேன் ஆக்ட்' என்ற சட்டம் உண்டு. அதன்படி யாராவது ஒரு ஆண், இருபத்தொரு வயதை எட்டிப் பிடிக்காத இளம் பெண்ணுடன் ஒரு மாகாணத்திலிருந்து, மற்றொரு மாகாணத்திற்கு அழைத்துச் சென்றால் அதுவே குற்றமாகும். அதற்குப் பல நீண்ட ஆண்டுகள் சிறை வாசமும் கிடைக்கும்.

அந்தச் சட்டத்தை பற்றிச் சாப்ளினுக்கு அதிகமாகத் தெரியாது. அப்படித் தெரிந்திருந்தாலும் அவர் அந்தச் சட்டத்தைச் சட்டை செய்ததில்லை.

சாப்ளினின் சரஸ சல்லாப விநோதங்களைப் பத்திரிகைக்காரர்கள் மட்டுமல்லாமல் அரசியல்வாதிகள், அமெரிக்க அரசாங்க அதிகாரிகளும் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினார்கள்.

எங்கிருந்தோ நம் நாட்டிற்கு வந்தவன் எப்படியோ புகழும், பணமும் சேர்த்து நம் பெண்களைக் கெடுத்து விடுகிறானே என்று எண்ணிய அமெரிக்கர்களும் உண்டு! இதற்கெல்லாம் அடிப்படையில் ஒரு அரசியல் காரணமும் இருந்தது. இங்கிலாந்திலிருந்து பிழைக்க வழிதேடி அமெரிக்காவுக்கு வந்து, கோடிக்கணக்கில் அந்நாட்டில் சொத்து, சுகத்தையும், சொர்க்க



போகங்களையும் அனுபவித்துக் கொண்டிருந்த சாப்ளின் அமெரிக்கக் குடிமகனாகவில்லை.

இந்த முடிவை அமெரிக்க மேல் மட்டத்துக்காரர்கள், அரசாங்கத்துக்காரர்கள் ஒரு தேச துரோகச் செயல் என்றே கருதினார்கள். சாப்ளின் அமெரிக்க நாட்டின் மீது பாசமும், பற்றும் உண்டு என்று சொல்லிக் கொள்ளவில்லை.

முக்கியமாக அமெரிக்க அரசாங்கத்தின் பகுதிகளான பெடரல் பீரோ ஆ·ப் இன்வெஸ்டிகேஷன், (F.B.I.) மற்றும் சென்ரல் இன்டெலிஜென்ட்ஸ் ஏஜென்ஸி (C.I.A.) போன்ற நிறுவனங்கள் சாப்ளினுடைய நடவடிக்கைகளை வேவு பார்க்கத் தொடங்கின.

இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் அமெரிக்க சட்ட அமைப்பில் சக்தி அதிகம். அமெரிக்க ஜனாதிபதியின் அந்தரங்க வாழ்க்கையையே வேவு பார்ப்பவர்கள் இவர்கள். அப்படிப்பட்ட நிறுவனங்கள் பார்வையில் பட்டிருக்கிறார் என்பது சாப்லினுக்குத் தெரியாது.

அதற்கு இன்னொரு காரணமும் உண்டு. சாப்ளின் ஆரம்ப காலத்தில் ஏழ்மையில் தவித்ததனால் அவர் ஏழைகளுக்கு உதவி செய்யத் தயங்கியது இல்லை. பலர் அவரை 'ஏழைப் பங்காளன்' என்றே எண்ணினார்கள். சாப்ளின் குழுவில் வேலை பார்ப்பவர்கள் எவ்வளவு வயதானாலும் அவர்களை சாப்ளின் நீக்கியதில்லை. ஆரம்ப காலத்தில் தன்னுடன் படங்களில் உழைத்த தொழில் நுட்பக் கலைஞர்களுக்கு அவர்கள் ஓய்வு பெற்ற பிறகும் சாகும் வரை சம்பளம் கொடுத்துக் கொண்டிருந்தார். விளைவு அமெரிக்க அரசாங்கம் இவரை ஓர் 'கம்யூனிஸ்ட்' என்று எடை போடத் தொடங்கியது.

*(தொடரும்)*

## பிரிட்னியின் மொட்டை இரகசியம்

உலகெங்கும் கோடிக்கணக்கான ரசிகர்களைக் கொண்ட பிரிட்னி ஸ்பியர்ஸ் தனது பாடல் திறமையால் மட்டுமல்ல, அவ்வப்போது செய்து வரும் அதிரடி நடவடிக்கைகளாலும் உலகையே அதிரவைத்தவர். தனது நீண்ட நாள் காதலனை திருமணம் செய்து விட்டு மணித்துளிகளுக்குள் விவாகரத்து செய்து கொண்டவர். அண்மையில் திடீரெனத் தனது தலையை மொட்டையடித்து தனது ரசிகர்களின் இதயங்களை மொட்டையாக்கி விட்டிருக்கின்றார். அவரது தலை முடியை சவரம் செய்வதற்காக ஒரு பிரபலமற்ற சிறிய லொஸ் ஏன்ஜலஸ் எனும் சலூனுக்குள் நுழைந்திருக்கிறார். பிரிட்னி ஸ்பியர்ஸ் ரொக்னொசி - எஸ்தர் என்ற தம்பதியர் நடத்தும் சலூனுக்குள் திடீரென பிரிட்னிஸ்பியர்ஸ், நுழைந்து, தனது தலையை மொட்டை அடிக்குமாறு கேட்டபோது சலூன் உரிமையாளர்களில் ஒருவரான எஸ்தர் என்ற பெண்மணி மறுத்துவிடவே தனது தலையை தானே மொட்டையடித்திருக்கின்றார் ஸ்பியர்ஸ். சவரம்



செய்யப்பட்ட தலை மயிர் எஸ்தரின் சலூனில் இருக்கின்றது. இந்தத் தலை மயிரை என்ன செய்யப் போகின்றீர்கள் என்று பிரிட்னியைக் கேட்ட போது, "எனது தலை மயிர் எனக்குத் தேவையில்லை" என்று கூறி இருக்கின்றார். எனவே தர்ம நிதிக்காக பிரிட்னியின் தலை மயிரை ஏலத்தில் விடப்போவதாக எஸ்தர் கூறி இருக்கிறார். மொட்டையடித்த பின்னர் கண்ணாடியைப் பார்த்து கண் கலங்கினாராம் பிரிட்னி ஸ்பியர்ஸ். "நான்



எல்லாவற்றையும் மொட்டையடித்து விட்டேன். எனது அம்மா மனம் கலங்கப் போகிறார்" என்று கூறி கண்ணீர் வடித்தாராம். சலூனுக்கு நடந்தே சென்றிருக்கின்றார் பிரிட்னி ஸ்பியர்ஸ். சலூன் முடிய பின்னர் அதற்குள் செல்வதற்கு முன்னதாக 10 நிமிடங்களில் தனது ஆடம்பரக் காரினுள் அமர்ந்தபடி கண்ணீர் வடித்திருக்கின்றார். இதற்கு முன்னர் பச்சைக் குத்தும் நிலையம் ஒன்றுக்குள் நுழைந்த பிரிட்னி, தனது மணிக்கட்டில் பச்சை குத்துமாறு கேட்டிருக்கின்றார். இவரைக் கண்டதும் ரசிகர்கள் குழுமத் தொடங்கி இருக்கின்றனர். அவர் தனது மணிக்கட்டில் அழகான உதடுகளைப் பச்சை குத்தி இருக்கின்றார். தனது தலையை மொட்டையடித்துக் கொள்வதற்கு முன்னர் மனோரீதியான புனர்வாழ்வு நிலையம் ஒன்றிற்குச் சென்ற பிரிட்னி ஸ்பியர்ஸ், 24 மணித்தியாலங் களுக்குள்ளேயே அங்கிருந்து வெளியேறி இருக்கின்றார் என்று கூறப்படுகின்றது. பிரிட்னியின் அண்மைக்கால நடவடிக்கைகள் பைத்தியக்கார நடவடிக்கைகளாக அமைந்திருப்பதால், உளவள ஆலோசனை தேவைப்படுகின்றது என்கின்றனர் மனோதத்துவ நிபுணர்கள்.



## "பெண் சிவாஜி" சின்னவர் சாதனை!

சிறந்த நகைச்சுவை நடிகையாக வலம்வந்த மனோரமா, 1964 ஆம் ஆண்டு "வேட்டைக்காரன்" படத்தில் நடித்தார். அந்தப் படத்தில் நாகேஷுடன் மனோரமா நடித்த காமெடி காட்சிகள் அற்புதமாக அமைந்தன.

1966 ஆம் ஆண்டு 'அன்பே வா' படத்தில் நாகேஷின் ஜோடியாக மனோரமா நடித்தார். நகைச்சுவை நடிப்பில் அவருக்குப் புகழ் தேடித்தந்த படங்களில் இதுவும் ஒன்று. நாகேஷுடன் நடித்தது பற்றி மனோரமா கூறும்போது, "நானும் நாகேஷும் 'அனுபவி ர்ாஜா அனுபவி', 'சரஸ்வதி சபதம்' என்று அதிகமான படங்களில் இணைந்து நடித்து உள்ளோம். எங்கள் காமெடி மிகவும் நன்றாக இருப்பதாக அனைவரும் கூறுவார்கள். அது மிகவும் மகிழ்ச்சியான விஷயம்" என்றார்.

### படப்பிடிப்பில் விபத்து

தேவர் பிலிம்ஸ் படத்திற்காக ஊட்டியில் படப்பிடிப்பு நடந்தது. அதில் மனோரமா குதிரையில் வருவதுபோல ஒரு காட்சி எடுக்கப்பட்டது. குதிரை சவாரியே தெரியாத மனோரமா அந்தக் காட்சியில் சிரமப்பட்டு நடித்தார்.

குதிரை திடீரென்று வெகு வேகமாக ஓடியது. அப்போது குதிரை சரிந்து விழுந்ததால் மனோரமாவும் தூக்கி வீசப்பட்டார். அந்த சமயத்திலும், குதிரையின் கடிவாளத்தை மனோரமா கெட்டியாகப் பிடித்துக்கொண்டு இருந்தார். மீண்டும் குதிரை எழுந்து ஓடத்தொடங்கியதால், கடிவாளம் இழுபட்ட வேகத்தில் மனோரமா கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது.

மனோரமா சிகிச்சை முடிந்து திரும்பிய பிறகு அக்காட்சி மீண்டும் படமாக்கப்பட்டு, படம் வெளிவந்தது.

### கதாநாயகிகள் பொறாமை

மனோரமா நகைச்சுவை வேடங்களில் நடித்து வந்தபோது, கதாநாயகிகளின் பொறாமை குணத்தால் சில சிக்கல்களைச் சந்திக்க நேர்ந்தது.

இது குறித்து மனோரமா கூறியதாவது:-

"பொதுவாக எல்லா நடிகர் - நடிகைகளும் என்னிடம் அன்பாகவும் மரியாதையாகவும் நடந்து



கொள்வார்கள்.

அந்தக் காலத்தில் ஒருசில கதாநாயகிகள், தங்களை மிகப் பெரிய நட்சத்திரங்களாகக் கருதிக் கொண்டு, மற்றவர்களை அடிமைபோல் நடத்துவார்கள். குறிப்பாக, சிரிப்பு நடிகை என்றால் அவர்களுக்கு கிள்ளுக்கீரை என்ற நினைப்பு.

ஒரு சமயம் என்னுடன் ஒரு படத்தில் நடித்துக்கொண்டு இருந்த ஒரு கதாநாயகி, நான் தலையில் அழகாகப் பூவும், அதற்கு ஏற்றாற்போல கழுத்தில் நகையும் அணிந்திருந்ததைப் பார்த்தார்.

உடனே தயாரிப்பாளரைக் கூப்பிட்டு, "மனோரமா தலையில் உள்ள பூவையும், கழுத்தில் உள்ள நகையையும் எடுத்துவிடச் சொல்லுங்கள். இல்லாவிட்டால் இனி உங்கள் படத்திற்கு என் கால்ஷீட் கிடையாது" என்று பயமுறுத்தினார். அதன் காரணமாக, நான் பூவை எடுத்துவிட்டு நடித்தேன்.

இவ்வளவுக்கும், எனது கதாபாத்திரத்திற்கு அந்த மேக்கப் அவசியம் என்றுதான் பூவும் நகையும் தரப்பட்டன. அது அந்தக் கதாநாயகிக்குப் பொறுக்கவில்லை"

இவ்வாறு மனோரமா கூறினார்

1971 ஆம் ஆண்டு "கண்காட்சி" என்ற படத்தில் மனோரமா 9 வேடங்களில் நடித்தார். நகைச்சுவை கலந்த படம் அது.

### பாலசந்தர் புகழாரம்



"கல்யாணராமன்" படத்தின் 100 ஆவது நாள் விழா சென்னையில் நடந்தது. விழாவில் கலந்து கொண்டு கவிஞர் கண்ணதாசன் பேசும்போது, "டைரக்டர் கே.பாலசந்தர் எத்தனையோ, நடிகர் - நடிகைகளை அறிமுகப்படுத்தி பெருமை பெற்றிருக்கிறார். ஆனால், என்னால் ஒரே ஒரு மனோரமாவை மட்டும்தான் அறிமுகப்படுத்த முடிந்தது" என்றார்.

உடனே கே.பாலசந்தர், "கவிஞர் கண்ணதாசன் நான் நூற்றுக்கும் மேற்பட்ட நட்சத்திரங்களை அறிமுகப்படுத்தியிருப்பதாகவும், அவர் மனோரமாவை மட்டுமே அறிமுகப்படுத்த முடிந்தது என்றும் கூறினார். நான் 100 பேர்களை அறிமுகப்படுத்தியதும், அவர் மனோரமாவை அறிமுகப்படுத்தியதும், இரண்டும் சரி சமமானதுதான். அந்த நூறு பேருக்குச் சமமான திறமைசாலி மனோரமா" என்று குறிப்பிட்டார்.

### அம்மா வேடம்

நகைச்சுவை வேடங்களில் நடித்து வந்த மனோரமா பிற்காலத்தில் தாயாராக நடித்து முத்திரை பதித்தார்.

"பாட்டி சொல்லைத் தட்டாதே" படத்தில் வயதான வேடத்தில் நடித்த மனோரமா, சிலம்பம் சுற்றி ரவுடிகளை விரட்டுவது போன்ற சாகசங்களைச் செய்து நடித்தார். இந்தப்படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது.

*(தொடர்ச்சி அடுத்த வாரம்)*


# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## தமிழகத்தில் ராஜீவின் இறுதி மூச்சு இந்தியாவெங்கும் சோகப் பெருமூச்சு!

ராஜீவ் காந்தி பயணம் செய்த கார், ஸ்ரீபெரம்புதூர் கூட்ட மேடைக்குச் சமீபமாக வந்து நின்றபோது இரவு 10.10 மணியாகி விட்டது. கூட்ட மைதானத்திற்குச் சற்று அப்பால் தள்ளியிருந்த, தனது தாயார் இந்திரா காந்தியின் உருவச் சிலைக்கு ராஜீவ், காந்தி மாலையிட்டு விட்டு, மைதானத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தார். இந்திரா காந்தியின் சிலை அருகே ராஜீவ் காந்தியை வரவேற்பதற்குச் சிறு குழு ஒன்று காத்திருந்தது. ராஜீவ் காந்தியை வரவேற்க நின்றவர்கள் மத்தியில் பெரும் குழப்ப நிலை காணப்பட்டது. அவரை வரவேற்பதற்கு அனுமதி பெறாதவர்களும் முண்டியடித்துக் கொண்டு முன்னேற முனைந்ததால் இந்தக் குழப்பம் ஏற்பட்டது. லதா கண்ணன் தனது மகள் கோகிலாவுடன் ராஜீவ் காந்தியை சந்திக்கும் நேரத்திற்காக பெரும் ஆர்வத்தோடு காத்திருந்தார். தனக்குப் பின்னால் சந்தன மாலையுடன் காத்திருந்த மூக்குக் கண்ணாடி அணிந்திருந்த இளம் பெண்ணைப் பற்றி லதா கண்ணனுக்கு எதுவுமே தெரியாது. ராஜீவ் காந்தியை ஆவலுடன் எதிர் பார்த்துக் காத்திருந்ததால், எதனையும் கவனிக்கக் கூடிய நிலையில் எவரும் இல்லை. ராஜீவ் காந்தியின் காருக்குப் பின்னால், தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி ஒழுங்கு, செய்திருந்த வீடியோ படப்பிடிப்பாளரோடு, காங்கிரஸ் முக்கியஸ்தர் வாழப்பாடி இராமமூர்த்தி ஜீப் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்தரா். இராமமூர்த்தி கூட்ட மேடையை முன்னதாகவே வந்தடைந்தார். மேடை மீதிருந்து அவர் ராஜீவ் காந்தியை அவதானித்துக் கொண்டிருந்தார். ராஜீவ்காந்தி தனது ஆதர வாளர்களுக்கு கை கூப்பி வணக்கம் தெரிவித்துக் கொண்டிருந்தார். ராஜீவ்காந்தி காரை விட்டு இறங்கும் போது அவருடன் வருகை தந்திருந்த இரு வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் அவருக்கு அருகே நின்றிருந்ததால், மரகதம் சந்திரசேகர் காரை விட்டு இறங்கு



தற்கொலைக் குண்டுதாரியின் படங்கள் தாக்குதலுக்கு முன்பும், தாக்குதலுக்குப் பின்பும்

வதற்கு சிறிது தாமதம் ஏற்பட்டது. இருந்தாலும், சிறிது முன்னேறி தனது ஆதரவாளர்களை ராஜீவ் காந்திக்கு அறிமுகம் செய்து வைக்க அவர் முனைந்து கொண்டிருந்தார். செங்கம்பளத்தை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்த ராஜீவ்காந்தியைச் சுற்றி கூட்டம் முண்டியடித்தது. கட்சி ஆதரவாளர் ஒருவர் ராஜீவ் காந்திக்கு சால்வையை அணிவித்து விட்டு இரு கைகளால் அவரது

(அரசியல் தொடர்)

கரங்களைப் பற்றிக் கொண்டு புகைப்படத்திற்கு 'போஸ்' கொடுத்துக் கொண்டிருந்தார். அக்கட்சி ஆதரவாளரை அப்பால் தள்ளிவிட மரகதம் முனைந்தார், ஆனால், கூட்ட ஜன சந்தடியில் பின்னால் தள்ளப்பட்ட மரகதம், நிலை தவறிக் கீழே விழப்போனார். இருந்தாலும் மற்றவர்களின் உதவியுடன் அவர் தன்னை சமாளித்துக் கொண்டு விட்டார். ராஜீவ் காந்தியைச் சுற்றிவளைத்து வட்ட வடிவில் நின்று பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த சிவில் உடை அதிகாரிகளும் சீருடைப் பொலிஸாரும் கூட்டத்தைக் கட்டுப்படுத்த சிரமப்பட்டுக் கொண்டிருந்தனர்.

செங்கம்பள விரிப்பின் ஊடாக கூட்ட மேடையை ராஜீவ் காந்தி அண்மித்துக் கொண்டிருந்தார். கூட்ட மேடையில் நின்று கொண்டிருந்த வீடியோ படப்பிடிப்பாளரால் ராஜீவ் காந்தியை தெளிவாகப் படம் எடுக்க முடியவில்லை. ராஜீவ் காந்தியைச் சுற்றி கூட்டம் அலை மோதியதே இதற்குக் காரணமாகும். குறுக்கும் நெடுக்குமாக கூட்டம் அலை மோதிக்கொண்டிருந்ததால், வீடியோ படப்பிடிப்பாளர் கமராவை மூடி வைத்துக் கொண்டார்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஆண்களின் வாழ்த்துக்களையும் வரவேற்பையும் பெற்றுக் கொண்ட ராஜீவ் காந்தி, தன்னை வரவேற்கக் காத்திருந்த பெண்களின் பகுதிக்குள் வந்தார். சில பெண்கள் அவரை வரவேற்ற பின்னர், தனது தாய்க்கு அருகே நின்று கொண்டிருந்த கோகிலா தனது கவிதையை வாசித்துக் காட்டினார். கோகிலாவுக்குப் பின்னால் சந்தன மாலையுடன் நின்று கொண்டிருந்த சல்வார் கமிஸ் பெண் மணி, ராஜீவ் காந்தியை நோக்கி அடியெடுத்து வைத்தார். பெண் பொலிஸ் இன்ஸ்பெக்டர் அனுசியா, சல்வார் கமிஸ் பெண்மணியை கைகளால் தடுத்து நிறுத்த முனைந்தார். இதனைக் கவனித்த ராஜீவ் காந்தி, அப் பெண்ணுக்கு வழி விடுமாறு சைகை காட்டினார். இன்ஸ் பெக்டர் அனுசியா சற்றுப்பின் வாங்கியதும் மூக்குக் கண்ணாடி அணிந்திருந்த சல்வார்க் கமிஸ் பெண்மணி, முன்னால் அடி எடுத்து வைத்து ராஜீவ் காந்திக்கு முன்பாக வந்து நின்றார். தன் கையில் வைத்திருந்த சந்தன மாலையை ராஜீவ் காந்திக்கு அணி வித்து விட்டு அவரது காலைத் தொட்டு வணங்கு வதற்காக கீழே குனிந்தார். நேரம் அப்போது இரவு 10.20 மணியாகும். அதாவது தனது குண்டுகள் துளைக்காத காரிலிருந்து ராஜீவ் காந்தி இறங்கிய பின்னர், 10 நிமிடங்கள் கழிந்திருந்தது. சல்வார் கமிஸ் பெண்மணி கீழே குனிந்தபோது காதைப் பிளக்கும் சத்தம் எழுந்தது. ராஜீவ் காந்தி நின்று கொண்டிருந்த

இணைந்து எழுதுவது
த. சபாரத்தினம்
+
அம்பி மகன்

இடம் புகை மண்டலமாகக் காட்சி அளித்தது. 20 அடி உயரத்திற்கு தீ எழுந்தது. மக்கள் சிதறி ஓடத் தொடங்கினர். என்ன நடந்தது, எது நடந்தது என்று தெரியாமல் மக்கள் அல்லோல கல்லோலப்பட்டனர்.

எங்குமே இரத்தமும் மனிதச் தசைகளும் காணப் பட்டன. சம்பவத்தைத் தூரத்தில் நின்றே கவனித்தவர்கள், அதிர்ச்சியினால் வாய் அடைத்துப் போய் நின்றிருந்தனர். ராஜீவ் காந்தி, படப்பிடிப்பாளர் ஹரிபாபு, லதா கண்ணன், கோகிலா, ராஜீவ் காந்தி யின் தனிப்பட்ட மெய்ப்பாதுகாவலர், சல்வார் கமிஸ் அணிந்திருந்த பெண் ஆகியோர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் மூவர் ஆஸ்பத்திரியில் இறந்தனர். மொத்தம் 15 பேர் கொல்லப்பட்டனர். இறந்தவர்களில் ஒன்பது பேர் பொலிஸ்கார்கள் ஆவர். இவர்களில் மாவட்டப் பொலிஸ் பிரிவுத் தலைவர் எம்.ஐ.இக்பாலும் ஒ்ருவர் ஆவார். மேலும் 44 பேர் காயமடைந் தனர். இவர்களில் 20க்கு மேற்பட்டோர் படுகாயங்களுக்கு இலக்கானார்கள். வீடியோ படப்பிடிப்பாளர் ஹரிபாபுவின் வீடியோ கமரா இந்தப் படுகொலைக்குச் சாட்சியாக ஹரி பாபுவின் சடலத்திற்கு அப்பால் பழுதடையாமல் விழுந்து கிடந்தது. ராஜீவ் காந்தியின் கடைசி நிமிடங்களை காட்டக் கூடிய ஒரு மௌன சாட்சியாக இதுவே திகழ்ந்தது.


புகை மண்டலம் மேலே கிளம்பிய போது கூட்ட மைதானத்தில் குழப்பமும் கொந்தளிப்பும் காணப்பட்டதால், பீதி கொண்ட மக்களும் கட்சி ஊழியர்களும் சில பொலிஸாரும் கூட தலை தெறிக்க ஓடினர். சிலர் தமது வாகனங்களிலும், வேறு சிலர் ஏனையோரின் வாகனங்களிலும் தப்பிச் செல்ல முனைந்தனர். ஆனால் துணிவு மிக்க கட்சி ஊழியர்கள் சிலரும், சில பொலிஸ்கார்களும் அங்கேயே நின்றனர்.

மூப்பனாரும் இராமமூர்த்தியும் ராஜிவ் காந்தியைத் தேடத் தொடங்கினர். இராமமூர்த்தி, ராஜீவ் காந்தியை எதிர்பார்த்து மேடையில் காத்துக் கொண்டு இருந்தார். மூப்பனார், இந்திரா காந்தியின் சிலை அருகே இருந்து கூட்ட மேடையை நோக்கி நடந்து கொண்டிருந்தார். அப்போது தான் ஸ்ரீபெரம்புதூரின் அமைதியைச் சிதறடித்த குண்டு வெடித்தது. தமது தலைவரைத் தேடி, சம்பவ இடத்திற்கு விரைந்து போன தமிழ் நாடு காங்கிரஸ் முக்கியஸ்தர்களால், ராஜீவ் காந்தியின் சிதைந்து போன சடலத்தையே காண முடிந்தது. ராஜீவ் காந்தி அணிந்திருந்த 'லொட்டோ' சப்பாத்துக்களை வைத்து அவரது உடலை இலகுவாக அடையாளம் காணமுடிந்தது.

ராஜீவ் காந்தியின் உடலைத் தன் கைகளால் தூக்கி நிறுத்த முனைந்த மூப்பனாரின் கைகளில் தசைப் பிண்டங்கள் ஒட்டிக் கொண்டன.

ராஜீவ் காந்தி, முகம் குப்புற வீழ்ந்து கிடந்தார். அவரது சடலத்தை மறு பக்கம் திருப்பிய காங்கிரஸ் முக்கியஸ்தர்கள், சடலத்தைச் சால்வை ஒன்றினால் போர்த்தி விட்டனர்.

(தொடர்ந்து வரும்....)




"என்னடா ஆச்சு... கேட்டுக்கிட்டே இருக்கேன் பேயடிச்சது மாதிரி முழிக்கிறே" ஆறுமுகம் மகனை விரட்டினார்.

"ஒரு கை... ஐய்யோ தங்கம் மாதிரி மின்னுதுப்பா. என்ன பலம்! இனி என்னால மேல ஏறமுடியாது" இடுப்பில் கை ஊன்றியபடியே எழுந்திரிக்க முயன்றான்.

"வேற யாரு மேல ஓட்டைப் பிரிக்கிறது?" சைமன் கூட்டத்தைப் பார்த்துக் கேட்டான்.

டேவிட் வலது கையை மடக்கி முண்டாவைக் காட்டினான். பிறகு-

சரசரவென்று ஏணியில் ஏறி ஓட்டின் உச்சிக்குப் போனான்.

கிருஷ்ணன் பிடித்து இழுத்த ஓட்டின் அருகே சென்று உட்கார்ந்து ஒரு தடவை உற்றுப் பார்த்தான். எதுவும் தட்டுப்படவில்லை.

பக்கத்திலிருந்த கம்பியால் அடுத்த ஓட்டை



நெம்பினான். பிறகு மெதுவாய் ஓட்டை மேல்ப்புறமாக இழுத்தான். ஓடு அசைந்து கொடுக்கவில்லை. உடல் பலத்தையெல்லாம் கை வழியாக இறக்கி மறுபடியும் விசையுடன் இழுத்தான். அவனைவிடப் பலத்துடன் ஓட்டை யாரோ உள்ளிருந்து இழுப்பதாக அவனுக்குத் தோன்றியது. டேவிட் குனிந்து ஓட்டை உற்றுப் பார்த்தான்.

மூக்கின் மீது யாரோ வெடிகுண்டு எறிந்த மாதிரித் தோன்றியது. வலுவான இடித் தாக்குதல் மூக்கின் இரண்டு துவாரங்களிலும் ரத்தம் பீறிட்டது. டேவிட் திடுக்கிட்டபடி பின்பக்கமாகச் சாய்ந்தான்.

"என்னவோ இருக்குது" முணுமுணுத்தான். சரசரவென்று கீழே இறங்கினான்.

சைமனைத் தாண்டி, பாஸ்கரன் அருகில் வந்து, "ஓட்டைத் தொடமுடியலை. மோசமான இடைஞ்சல். நாம ஏதாவது திருப்பிச் செய்யலேன்னா பிரயோஜனமே இல்லை" இன்னும் மூக்கிலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. கொஞ்ச நேரம் கைக்குட்டையால் மூக்கைப் பிடித்து அழுத்தினான்.

"இப்படியெல்லாம் சிக்கல் இருக்கும்னு யாருக்குத் தெரியும். என்னவானாலும் ஒரு கை பாத்திடலாம். முதல்ல அந்தக் கட்டிடத்தில் இருக்கிறவன் யாருன்னு தெரிஞ்சாகணும்" சைமனின் கோபம் அந்தப் பக்கமாகத் திரும்பியது.

"அதை நான் கவனிச்சுக்கிறேன். பாஸ்கரா நீ முதல்லே விஷயம் என்னன்னு கண்டுபிடி. மந்திரத்தால தடை பண்ணியிருந்தாங்கன்னா, முதல்ல அதை உடைக்கணும். ஒரு வேளை செத்துப் போனவன் ஆவியா வந்திருப்பானோன்னு தோணுது" டேவிட் இயலாமையுடன் சொன்னான்.

"நாம செஞ்சது தப்பு. அவனைக் கொல்லாம விட்டிருந்திருக்கலாம்" பாஸ்கரன் பெருமூச்சுடன் சொன்னான்.

"அவனுக்குப் பின்னால் யாரும் இருக்கமாட்டாங்கன்னு நெனைச்சது தப்புதான்" சொல்லியபடியே மறுபுறம் பக்கத்துக் கட்டிடத்தைக் கவனித்தான்.

டேவிட் அதை நோக்கி நடந்தான். ஓட்டின் மீது சட்டென்று பின்புறம் சாய்ந்ததில் காலின் கீழ்ப்புறம் கொஞ்சம் புரண்டது போல் தெரிந்தது. வலி பரவாயில்லை. இந்தத் தடவை அந்த அனந்தராமனுக்குப் பதில் சொல்லப் போறதில்லை. நேரா காமிக்க வேண்டியது தான். வாசலுக்கு நேராக வந்த போது அறைக்குள் அனந்தராமன் ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான்.

"வெளியில வாய்யா!" டேவிட் கத்தினான்.

"என்ன வேணும் உனக்கு? வீணா கூச்சல் போடாத" அனந்தராமன் பயப்படாமல், படியிறங்கி வந்து பேசினான்.

"நீங்க இங்க தங்கியிருக்கிறது சைமனுக்குப் பிடிக்கலை" டேவிட் எச்சரித்தான்.

"சைமனுக்குப் பிடிக்குதா இல்லையாங்கிறது எனக்குத் தேவையில்லாத விஷயம். இந்த மாதிரியெல்லாம் உங்க வழின்னா நானும் கொஞ்சம் இறங்கி விளையாட வேண்டியிருக்கும். இந்த சொத்துக்கெல்லாம் நான்தான் வாரிசுன்னு உங்களால நான் வீணா ஊராருக்குப் புரிய வைக்கணும். அதைவிட சுலபமா சிவில் கேஸ் நடத்தலாமே. இங்க பாருய்யா அடி, உதையெல்லாம் உங்க வழின்னா நான் அதுக்கும் தயார். நல்லா யோசனை பண்ணிக்கங்க" சொல்லியபடியே அனந்தராமன் இடுப்பிலிருந்த சுருளை அவிழ்த்தான். அது கலகலவென்று சிரித்தது. டேவிட் ஒரு கணம் தடுமாறிப் பின்வாங்கினான்.

"இவன்கிட்ட இப்படி மோதக்கூடாது. திட்டம் போட்டுத்தான் இவனைத் தீர்க்கணும். சரி பார்த்துக்கலாம்" நினைத்தபடியே இடத்தைவிட்டு அகன்றான்.

புஷ்பாநாத்
தமிழில்
சிவன்

அன்று சாயந்திரத்திற்குள் சைமனின் திட்டம் குலைந்தது. "வீட்டை இடிக்கத்தொடங்கியிருந்தால், இலட்சக்கணக்கில் பணம் கிடைத்திருக்கும். வீணாகத் தாமதமாகிறது" எரிச்சல் வந்தது.

"என்ன பாஸ்கரா, சிக்கல் என்னன்னு கண்டுபிடிச்சிட்டயா?" சைமன் பரபரப்பில் கேட்டான்.

"பார்த்திடலாம். சூரியன் மறையலையே. எல்லாத்துக்கும் அவசரப்பட்டா எப்படி?"

கோடுகள் போட்ட ராசிப் பலகையை எடுத்து ஒரு தூணின் அருகில் வைத்தான். ஒரு பையைத் திறந்து உள்ளிருந்து சோழிகளை அள்ளினான். தேவஸ்தானம், குரு ஸ்தானங்களில் வைத்தான். எண்ணினான். கைப்பிடிச் சோழியை அள்ளித் தனியாக ஒரு இடத்தில் வைத்து, கண்ணை மூடி ஜபிக்க ஆரம்பித்தான்.


"ஓம் துர்க்காய நமஹ..."

மறுபடிசோழிகளை எண்ணினான். காட்டினான். கணக்கு கூட்டினான். பாஸ்கரனின் நெற்றியில் சுளிவுகள் உயர்ந்தன. (பயங்கரம் தொடரும்)

மனதுக்கு நிம்மதி

# மனதில் அமைதி வேண்டும்!

**அவன்** பெரிய புத்திசாலி. மெத்தப் படித்தவன். கம்ப்யூட்டர் வித்தகன். எப்போது பார்த்தாலும் தனது கம்ப்யூட்டரில் ஏதாவது புரோகிராம் எழுதிக் கொண்டிருப்பான். அல்லது, கனமான ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு தீவிரமாகப் படித்துக்கொண்டிருப்பான். வீடு, மனைவி, குழந்தைகள் என்று



எதைக் கவனிக்கவும் அவனுக்கு நேரமில்லை!

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த அவன் மனைவி, இது சம்பந்தமாக அவனிடம் மனம்விட்டுப் பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று விரும்பியவளாக, ஒரு நாள் அவன் கம்ப்யூட்டரில் ஏதோ மும்முரமாகத் தேடிக்கொண்டிருந்தபோது, அருகில் போனாள்.

“நான் இங்கே கொஞ்சம் தனியாக மனம்விட்டுப் பேச வேண்டும். எப்போது பேசலாம்?” என்று கேட்டாள்.

“எவ்வளவு நேரம் பேசவேண்டியிருக்கும்?” என்று கேட்டான் கணவன். “அதிகம் வேண்டாம். ஒரு பத்து நிமிடம் ஒதுக்கினால் போதும்!” என்றாள் மனைவி. கணவன் உடனே, “சரி... எனக்கு இங்கே நிறைய வேலை இருக்கிறது. சட்டுப்புட்டென்று பேசி முடித்துவிட்டுச் சொல். அதுவரை நான் வெளியே காத்திருக்கிறேன்” என்று சொல்லிவிட்டு வெளியே போய்விட்டான். இது எப்படி இருக்கு?

மனைவியின் பிரச்சினை என்னவென்றே தெரியாமல், அவள் தனியாகப் பேச இடம் ஒதுக்கித்தந்த அந்தப் புத்திசாலி கணவன் மாதிரிதான் நம்மில் பலர் நடந்து கொள்கிறோம். பிரச்சினை என்னவென்று சரிவரத் தெரிந்து கொள்ளாமலேயே அதற்குத் தீர்வு கண்டுபிடிக்க முயல்கிறோம்.


நோயாளியின் பிரச்சினை என்னவென்றே தெரியாமல் எந்த டாக்டராவது மருந்து எழுதிக் கொடுக்க முடியுமா? முடியாதல்லவா?

அதுபோலத்தான் இதுவும். முதலில் பிரச்சினை என்னவென்று தெரிந்துகொள்ள வேண்டும். அதற்குப் பொறுமையும் நேரமும் டென்ஷன் இல்லாத மனோபாவமும் வேண்டும். தலையைப் பிய்த்துக் கொள்ளும் அளவுக்குப் பரபரப்பிலும், படபடப்பிலும் இருக்கும் எந்த டாக்டராவது, நோயாளிக்கான அறுவைச்சிகிச்சையை நூறு சதவிகிதம் வெற்றிகரமாகச் செய்யமுடியும் என்று நம்புகிறீர்களா? ஆனால், இன்றைய உலகில் எல்லாமே அவசரம்தான்! நிறுத்தி நிதானமாகச் சாப்பிடவேண்டிய உணவைக்கூட பாஸ்ட்புட் என்கிற பெயரில் நின்றபடியே அவசரமாக விழுங்கிவிட்டு ஓடிக்கொண்டிருக்கிறோம். எங்கேயும் எப்போதும் மூச்சிரைக்கும்படியான ஓட்டம்தான்.

நன்றாக யோசித்துப் பாருங்கள்... இந்த ஓட்டம் ஆரோக்கியமானதா? உடம்பு சுறுசுறுப்பாக இருக்கவேண்டியதுதான். ஆனால் அதே சமயம் மனசு அமைதியாகவும் பரபரப்பில்லாமலும் இருக்கவேண்டுமல்லவா? அப்படி இருந்தால்தானே சிந்தனை தெளிவாக இருக்கும்? சிந்தனையில் தெளிவு இருந்தால்தானே செயற்பாடுகள் ஒழுங்காக அமையும்? ஆனால், இன்றைய சூழ்நிலையில் எல்லாமே தலைகீழாகத்தான் நடக்கிறது. நம்மில் பலர் உடலளவில் சுறுசுறுப்பாக இருக்கிறோம். சிந்தனை மட்டும் மந்தமாக இருக்கிறது. இதனால், நமது செயற்பாடுகளில் வீணான பதற்றம். இந்த நிலையில் நாம் எத்தனைதான் சிரமப்பட்டு ஒரு வேலையைச் செய்தாலும் அதனால் ஏற்படுகிற பலன் பூஜ்யமாகத்தான் இருக்கும்.

அது ஒரு கிராமம். இரவு நேரம். எங்கும் இருள். பார்வையற்ற பெரியவர் ஒருவர் லாந்தர் விளக்கை ஏந்தியபடி நடந்து வந்து கொண்டிருந்தார். எதிரே வந்தவர் இவரைப் பார்த்து, “உங்களுக்குத்தான் கண் தெரியாதே! இருட்டிலேயே நடந்து பழக்கப்பட்டவர்தானே நீங்கள்? அப்படியிருக்க எதற்காக லாந்தர் விளக்கு?” என்று கேட்டார்.

“உண்மைதான். எனக்கு லாந்தர் விளக்கு தேவையில்லைதான். ஆனால் எதிரில் வரும் ஆட்கள் இருட்டில் என் மீது மோதிவிடாமல் இருக்கவேண்டுமல்லவா?



அதற்காகத்தான் இந்த விளக்கு!” என்றார் பெரியவர்.

கதை இத்துடன் முடியவில்லை. தொடர்ந்து நடந்து போய்க்கொண்டிருந்த அந்தப் பெரியவரின் மேல் ஓர் இளைஞன் மோதிவிட்டான். பெரியவர் உடனே கோபமாக, “என்ன தம்பி... பார்த்து வரக்கூடாதா? எனக்குத்தான் கண் தெரியாது. உனக்குமா தெரியாது? இருட்டில் யாரும் என் மீது மோதிவிடக்கூடாது என்பதற்காகத்தானே வேலை மெனக்கெட்டு கையில் இந்த லாந்தர் விளக்கை ஏந்தி வருகிறேன்!” என்றார்.

அதற்கு அந்த இளைஞன் சொன்னான்.... “மன்னித்துக் கொள்ளுங்கள் பெரியவரே! கையில் லாந்தர் வைத்திருக்கிறீர்கள்.... சரி. ஆனால், அது எரிந்து கொண்டிருந்தால்தானே வெளிச்சம் கிடைக்கும்?”

ஆம்.... அந்தப் பெரியவர் வைத்திருந்த லாந்தர் காற்றில் அணைந்து போயிருந்தது. பாவம், அவருக்குத் தெரியவில்லை!

நம் அனைவரிடமும் விளக்கு இருக்கிறது. நம்மில் பலர் அதை ஏற்றுவதே இல்லை. ஏற்றியவர்களும் பின்னர் படபடப்புக் காற்று, பரபரப்புப் புயல், டென்ஷன் சூறாவளியில் சிக்கி அது அணைந்து போய்விட்டதை உணர்வதில்லை.

ஒருவர் பெரிய இன்ஜினீயராக இருக்கலாம்... டாக்டராக இருக்கலாம்.... கணித மேதையாக இருக்கலாம்... இவர்களிடம் எல்லாம் அறிவுக்குப் பஞ்சமே இல்லைதான். ஆனால், இவர்களின் அறிவுவிளக்கு ஏற்றப்படாமல் இருப்பதுதான் பிரச்சினை. அதற்குக்கூட நேரமில்லாமல் இவர்கள் எந்நேரமும் பரபரப்பாகச் செயல்படுவதால்தான் மெத்தப் படித்த இவர்களின் வாழ்க்கையிலும் கூட பிரச்சினைகள் வெடிக்கின்றன. அதனால்தான் இப்போதெல்லாம் செய்தித்தாள்களில் ‘சாப்ட்வேர் இஞ்ஜினியர் தற்கொலை!’, ‘டாக்டருக்கு மனநலம் பாதிக்கப்பட்டுவிட்டது!’ என்பது போன்ற செய்திகள் அடிக்கடி இடம்பெறுகின்றன.

துப்பாக்கி சுடும் வழக்கம் உள்ளவர்களைக் கேட்டால் ஒரு விஷயம் சொல்வார்கள். பொழுதுபோக்குக்காகச் சுடும்பொழுது, அவர்கள் குறி பெரும்பாலும் தப்புவதில்லை. ஆனால் போட்டி, பரிசு, பெருமை என்று ஏதாவது ஒன்று குறுக்கிட்டால் அவர்கள் குறி தவறிவிடுகிறது. காரணம், படபடப்பும் பதற்றமும்தான்!

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழத்துப் போட்டி 209

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | |
| 13 | 14 | 15 | | 17 | 18 |
| | | 21 | | 23 | 24 |
| 25 | 26 | | 28 | | |
| 31 | 32 | | 34 | 35 | 36 |

### இடமிருந்து வலம்

1. தற்போது அமெரிக்காவுக்கு சவால் விடும் நாடு.
5. விக்ரம் நடித்து வெளியான திரைப்படம்.
7. நிலத்துக்குக் கீழான பாதை அல்லது மறைவிடம். (குழம்பியுள்ளது)
13. அன்பு. (திரும்பியுள்ளது)
17. இறைவன் பவனிவரும் ஊர்தி. (திரும்பியுள்ளது)
23. காட்டு விலங்கொன்று.
25. சிறிய பறவையொன்று. (திரும்பியுள்ளது)
31. கோமாதா என்றும் வழிபடுவர்.
34. நெற்றி. (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. மது அருந்துவதால் இவ்வுறுப்பு பாதிப்படையும்.
2. நிறையை அளவிடுவது.(குழம்பியுள்ளது)
3. கொலையாளி அல்லது தீயவன்.(குழம்பியுள்ளது)
5. இரகசியம் அல்லது மறைவானது.(குழம்பியுள்ளது)
18. தவளை இனங்களில் ஒன்று.
25. சேனை என்றும் கூறலாம்.(தலைகீழ்)
26. பணம்.
28. அழகு அல்லது பொருத்தம் என்று பொருள்படும்.(தலைகீழ்)

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 06.03.2007 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-209
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோர் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.207க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

ச.தயாபரன், 248/38, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு - 13

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. வசந்தி பிரகலாதன், 276, மூர் வீதி, மன்னார்.
2. திருமதி. பாலசரஸ்வதி தங்கவேலு, ப3/3, அன்டர்சன் தொடர்மாடி, கொழும்பு-5
3. K.நிரஞ்சன், 22, களுபோவில, தெஹிவளை.
4. திருமதி.T.பரமேஸ்வரன், 5E, ரஷிகா ரவர் 32, மடங்ஹவத்த லேன், கொழும்பு-6
5. யூ. செல்லத்தம்பி, ‘செல்விஅகம்’, கல்முனை -3
6. நா.விஷ்ணுவர்த்தன், 200, பாடசாலை வீதி, சேனைக்குடியிருப்பு 01, கல்முனை.
7. செல்வி ர.தனுஷிகா, இல.85, மிகிந்தபுர, பண்டாரநாக்கமாவத்த, அநுராதபுரம்.
8. அ. சந்தியாகோ, 34.'.12, அம்பிட்டிய வீதி, கண்டி.
9. சி. தியாகினி, எம்.ஓ.ஏச்.விடுதி ஒழுங்கை, கல்முனை.
10. எம்.சி. கலீல் 72, சனிபா வீதி, கல்முனை -05


## குறுக்கெழுத்துப் போட்டி 207- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ 1 | ற் 2 | பு 3 | த 4 | ன் 5 | |
| ரி 7 | ஜ 8 | | னி 10 | ல 11 | ன் 12 |
| க 13 | ற 14 | ல் 15 | | றை 17 | பி 18 |
| ர 19 | ம் 20 | பா 21 | | மூ 23 | னை 24 |
| ன் 25 | | | ஆ 28 | | |
| | மை 32 | | மி 34 | ட 35 | சு 36 |

# செல் பேச்சு கேளுங்க!

**உணவு,** உடை, உறைவிடம், செல்போன் என மனிதனின் அத்தியாவசியத் தேவைகளை நான்காக ஆக்காமல் விடமாட்டார்கள் போலிருக்கிறது. ஆனால், செல்போனை பயன்படுத்தும் பலர் அதைப் பயன்படுத்துவதற்கான குறைந்த பட்ச நாகரிக விதிகளைக் கடைப்பிடிப்பது இல்லை. அவர்களுக்காக மட்டுமே இந்த டிப்ஸ்.

எல்லா செல்போன்களிலும், ‘புரொ.'. பைல்’ என்று ஒரு பகுதி இருக்கும். அதில் ஜெனரல், சைலன்ட், அலுவலகம், மீட்டிங்,



டிராவல் என நமது சூழ்நிலைக்கேற்ப அழைப் பொலிகளை அமைத்துக கொள்ளலாம். மீட்டிங் சமயங்களில், சத்தம் எழாதவாறு ‘வைபரேட் மோடி’ இல் வைத்துக்கொள்ள வேண்டும். மிக முக்கியமான அழைப்பாக இருந்தால், கூட்டத்தை நடத்துபவரிடம் நாகரிகமாகச் சொல்லிவிட்டு வெளியே வந்து சிக்கனமாக பேசி முடிக்க வேண்டும்.

யாருடனாவது நேரில் பேசிக்கொண்டு இருக்கும் போது செல்போனில் அழைப்பு வந்தால், எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் பேசி முடிப்பதே நாகரிகம். எதிரே இருப்பவர் வானத்தையும் பூமியையும் வெறித்துப்பார்த்து வெறுத்துப் போகிற அளவுக்கு நம் செல் பேச்சு நீளக்கூடாது.

எப்போதுமே சன்னமான குரலில்தான் பேச வேண்டும் என்பது பொது விதி. அதிலும் ரயிலிலோ, பேரூந்திலோ பயணம் செய்யும்போது, சாப்பிட்டியாடா செல்லம்? என்று சத்தமாகக் கொஞ்சியோ, இன்னிக்கு சீரியல் என்ன ஆச்சு? மாமியாரை பத்மா தீர்த்துக் கட்டிட்டாளா, இல்லியா? என்றெல்லாம் கூவியோ பக்கத்தில் இருப்பவருக்கு டார்ச்சர் தரக் கூடாது.

கெமரா செல்போன் வைத்திருக்கிறோம் என்பதை நாலு பேர் பார்க்கிற மாதிரி காட்டுவதே நாகரிகம் அற்ற செயல். அதிலும், பெண்கள் புழங்குகிற இடத்தில் அந்த போனைக்கொண்டு நம் நண்பர்களையே படம் எடுப்பது கூட நல்லதல்ல. அந்நியர்களை அவர்கள் அனுமதி இன்றி படம் எடுப்பது தண்டனைக்குரிய குற்றம்.

வழிபாட்டுத் தலங்களில் செல்போனை அணைத்து விடுங்கள். பூஜை நேரத்தில் கரடி மாதிரி உங்கள் செல் அலறி சூழ்நிலையைக் கெடுத்துவிடக்கூடாது.

செல்போனில் கேம்ஸ் விளையாடுவது உங்களுக்கு ரிலாக்ஸாக இருக்கலாம். ஆனால், அதிலிருந்து வரும் உய்ங்க், க்ர்ர் போன்ற ஆக்ஷன் சவுண்டுகள் மற்றவர்களை எந்த அளவுக்குக் கடுப்பாக்கும் என்று யோசியுங்கள். சவுண்டுகளை ஆ.'.ப் செய்துவிட்டு விளையாடுங்களேன்.

வாகனங்களை ஓட்டும்போது செல்போனை தயவுசெய்து எந்த வகையிலும் பயன்படுத்தாதீர்கள். இயர் போன் அணிந்து பேசிக் கொண்டே வண்டி ஓட்டுவதும், எ.'.ப்.எம். கேட்டுக் கொண்டே த்ராட்டிலை



முடுக்குவதும் பேராபத்து.

பேசும் நேரம் தவிர, மற்ற சமயத்தில் காதில் இயர் போன் எதற்கு? எதிரில் இருக்கும் நபருக்கு நீங்கள் செல்போனில் பேசுகிறீர்களா, அல்லது தன்னுடன்தான் பேசுகிறீர்களா என்பதை தெரியாமல் குழப்பம்தான் வரும்.

# பச்சைக் குழந்தை

**எதிர்பாராமல்** கன்னத்தில் விழுந்த அடியின் வேகத்தில் தாக்குப்பிடிக்க முடியாதவளாய் கட்டிலில் விழுந்தாள் விமலா.

சொல்லுடி யாராவன். யாரை நம்பி ஏமாந்தே. கல்யாணமாகாமலே கர்ப்பமாய் நிக்கிறியே, உனக்கு வெட்கமா இல்லை. சொல்லுடி யாரவன், போனால் போகட்டும் அவனுக்கே உன்னை தாரைவார்த்துக் கொடுத்துடறேன். அமுதா எரிமலையாய் வெடித்தாள். அவளால் இந்த அவமானத்தைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அக்காவின் கேள்விக் கணைகளைக் கேட்டு தேம்பி அழமுடிந்ததே தவிர, விமலாவால் தலைநிமிர்ந்து பதில் சொல்ல முடியவில்லை. தன்னை இந்த நிலைக்கு ஆளாக்கியவனை இப்போதே சொல்லிவிட முடியும். அதன் பின்...என்னென்ன விளைவுகளை சந்திக்க வேண்டி வருமோ...இவன்தான் என ஒரே வார்த்தையில் விமலாவால் சொல்லிவிடமுடியும். அடுத்த கணமே அவள் உயிர்வாழ்வதில் அர்த்தமில்லை. விபரீதமான விளைவுகளை தாங்கிக்கொள்ளும் சக்தி விமலாவிடம்



– எம்.ஆர்.எப்.ரம்லா, புத்தளம்.

இல்லவேயில்லை. ஆனால்...ஆனால் அதேநேரம் குமுறிக் கொண்டு தன் எதிரே நிற்கும் அக்கா அமுதாவின் கேள்விக்கு பதில் சொல்லாமலும் இருக்க முடியவில்லை.

"அழு, நன்றாக அழு...வயசுக்கு வந்து ஒரு வருஷமில்ல...நீயே துணைய தேடிக்கிட்டே இல்லே...சின்ன வயசிலே அப்பா கண்ணை மூடிட்டார். அவரோடு அம்மாவும் போய் சேர்ந்துட்டா. ஒரேயொரு அண்ணன் நம்மோடு கூடப்பிறந்த பாவத்திற்காக அவனும் ஏதோ கஷ்டப்பட்டு வெளிநாடு போனான். இன்னும் ஒரு வாரத்திலே அவனும் வரப்போவதாக கடிதமும் வந்தாச்சு. அண்ணன் வந்தவுடன் உன்னோட இந்த கோலத்தைப் பார்த்தவுடன் உயிரோடு இருப்பான்னு நீ நினைக்கிறியா? ஏதோ கடவுள் எனக்கொரு நல்ல மனிதரை, உத்தமரை புருஷனாக கொடுத்திட்டான். உனக்கொரு நல்ல வாழ்க்கையை அமைச்சு கொடுக்கணும்னு சதா கூறிக்கிட்டே இருப்பாரே. இந்த விஷயம் மட்டும்...அவருக்கு தெரிஞ்சிட்டா ஐயோ...கால் செருப்புக்குகூட நம்மை மதிக்கமாட்டார். ஐயோ...இதைவிட நீ செத்து தொலைஞ்சிருக்கலாமே.

விமலாவின் கண்களில் மட்டுமல்ல, அமுதாவின் கண்களிலிருந்தும் கண்ணீர் தாரை தாரையாக வழிந்துக் கொண்டிருந்தது.

சுவரில் மாட்டப்பட்டிருந்த அம்மாவின் புகைப்படம் காற்றில் இலேசாக அசைந்து ஓர் சிறிய ஓசையை ஏற்படுத்தியது. அம்மா பார்த்தீங்களாமா...உங்க...மகள் செஞ்ச காரியத்தை. என்னை நம்பி விட்டுட்டு போரேன்னு சொன்னீங்க, நீங்க நிம்மதியாய் போய்ச் சேர்ந்தீட்டீங்க. ஆனா...இவ...இவ...நம்ம முகத்தில கரியை பூசிட்டா...? விமலா ஒரு பச்சைக் குழந்தைன்னு சொல்வீங்களே அந்த குழந்தை செய்த காரியத்தைப் பார்த்தீங்களா? தாலாட்டுப்பாடி பாலூட்டக்கூட துணிஞ்சிட்டா.

முடியாது...முடியாது...நான் வாழக்கூடாது. இந்த விஷயம் ஊருக்கு தெரிஞ்சா காறித்துப்புவாங்க. அதுக்கு முன்னாடியே நான் போய் சேர்ந்துடறன். உள்ளத்தில் எழுந்த துயரங்கள் அனைத்தும் அமுதாவின் வாயிலிருந்து வார்த்தைகளாக வெளிப்பட்டன.

"அக்கா...என்னை விட்டு போயிடாதேக்கா" இலேசாக குரல் கொடுத்தாள் விமலா.

என்ன என்னடி பண்ணச்சொல்றே...தோரணம் கட்டி பந்தல் போட்டு நாலுபேரை அழைச்சி என் தங்கச்சி முழுகாம இருக்கான்னு சொல்லச் சொல்றியா? அமுதாவின் ஆத்திரம் கொஞ்சங்கூட மாறிவிட்டதாகத் தெரியவில்லை. நா...நா...தப்புப்பண்ணவே இல்லே அக்கா...என்னை மன்னி...ச்...சி...டு...க்...கா... விமலாவின் நிலமை இருதலைக்கொல்லி எறும்பு போல இருந்தது. மன்னிச்சிடலாமடி...ஆனா...உன் வயித்திலே வளருதே அதுக்கு அப்பன் யாருடின்னு யாராவது கேட்டா என்னடி பதில் சொல்லப்போறே. நீ உண்மையைச் சொன்னாலாவது ஒருவழி பண்ணலாமடி. வாயைத் திறந்து உண்மையை சொல்லுடி.

நா...வந்து..வந்து...எப்படி என்னால சொல்லமுடியும். அக்கா...அத...மாத்திரம்...வந்து...எப்படி என்னால சொல்லமுடியும். அக்கா...அத...மாத்திரம் கேட்காதேக்கா. ஏன்டி...ஒங்கள காட்டிக் கொடுக்க மாடேன்னு சத்தியம் பண்ணிக் கொடுத்திட்டியா? ஊருல நல்ல பெயரோடு அவன் இருப்பான். ஆனா...நீ...! தரம் கெட்ட நாய்க்கு சத்தியம் ஒரு கேடா.

அமுதா வார்த்தைகளைக் கொட்டிக் கொண்டே இருந்தாள். வாசலில் காலடியோசை கேட்டதும் மெல்ல திரும்பினாள் அமுதா.

வந்திருந்தது வேறுயாருமல்ல. அமுதாவின் கணவன் சங்கரேதான்.

"என்ன வீடே ஒரே சோகமாய் இருக்குது. அக்காவும் தங்கையும் ஏன் உம்மென்று இருக்கீங்க. ஓஹோ...தீபாவளி வருதே...என்னென்ன வாங்கலாம், எங்கே போகலாம் என ரெண்டுபேரும் டிஸ்கஸ் பண்ணியிருப்பீங்க. ஏதோ சண்டை வந்திருக்கும் போகட்டும். என்ன அமுதா விமலாவின் குணம்தான் உனக்குத் தெரியுமே. அவ ஒரு பச்சைக் குழந்தை. அவளுக்கு குழந்தை மனசு. அவ கேட்கிறதை வாங்கிக் கொடுத்தா போச்சு... இதைப்போய் பெரிதுபடுத்திக் கொண்டு.

இரண்டொரு வார்த்தையோடு சங்கர் உள்ளே நுழைந்து கட்டிலில் சாய்ந்துகொண்டான். கணவனை பின் தொடர்ந்து அமுதாவும் சங்கரின் பக்கத்தில் அமர்ந்து, தலையை தொங்கப்போட்டுக் கொண்டாள். விமலா எங்கு போவாள். என்ன செய்வாள். அவளால் சாவைத்தவிர வேறு எதைத்தான் சாதித்துவிட முடியும். அப்போதும் கூட இப்பாழாய்ப்போன சமுதாயம் சும்மா இருந்திடுமா...என்ன நடந்தது. ஏன் சாகணும் தற்கொலை செய்கிற அளவுக்கு என்னதான் அப்படி நடந்துவிட்டது. ஒன்றல்ல...ஓராயிரம் கேள்விகளைக் கேட்டு வேடிக்கைப் பார்க்கும் இருள் சூழ்ந்த சமூகத்திலல்லவா நாம் பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

விமலாவின் மனதில் எழுந்த கேள்விக்குறிகள் ஒன்றன் பின் ஒன்றாக தொடர்ந்த வண்ணமே இருந்தது. மனதை திடப்படுத்திக் கொண்டு தரையில் மல்லாந்துப் படுத்துக்கொண்டாள். அப்போதும் அவளின் அழுகை நின்றபாடில்லை. விம்மி விம்மி விமலா அழும்போது பக்கத்து அறையில் கட்டிலில் சாய்ந்துக்கொண்டிருந்த சங்கரின் காதுகளிலும் விழத்தான் செய்தது.

அமுதா மெல்ல பேச்சை ஆரம்பித்தாள். "இதப் பாருங்க நம்ம வீட்டிலே நடக்கக்கூடாதது நடந்து போச்சுங்க. நம்ம மானமே போச்சுங்க. புரிந்தும் புரியாததுமாக சங்கர் புருவத்தை உயர்த்துவதை கண்டு அவன் நெஞ்சிலே முகத்தை தாழ்த்திக் கொண்டாள். அமுதா நாம ஒரு குறையுமே அவளுக்கு வைக்கவில்லையே. ஆமாங்க, கண்ணை இமை காப்பது போல நீங்களும் எவ்வளவோ பாதுகாத்தீங்க. உங்களையே தலைகுனிய வைத்திட்டாளே...பாவி...பாவி...

சங்கரிடமிருந்து ஏதாவதொரு ஆறுதலான பதில் கிடைக்குமென்ற எண்ணத்தில் சற்று தலையை உயர்த்தி அவனையே வைத்த கண் வாங்காது உற்று நோக்கிக் கொண்டிருந்தாள் அமுதா. அமுதாவின் நீண்ட கூந்தலை தன் விரல்களால் இலேசாக கோதிவிட்டவாறே,

அமுதா சொல்றேனென தப்பா நினைக்காதே. இந்த தெருவிலே வீடு வீடாக பேப்பர் போடுகிறானே பாஸ்கர், ஆமாம் அவனுக்கு சொந்தம் என்று யாருமே இல்லை. போனாப்போகுதென்று அவன் தலைல கட்டிடா...

என்னங்க இது...தெருவிலே நாதியற்று கிடக்கிற நாயெல்லாம் வீட்லகட்டச் சொல்றீங்க. இந்த நேரத்தில அந்தஸ்து, கௌரவம் பார்த்தா வீட்டில நடந்த சங்கதி வீதிக்கு வந்திடும்.

அதுக்காக, எவன் கையிலாவது ஒப்படைச்சிட்டா பிரச்சினை முடிந்திடுமா? "போதும் நிறுத்து... உன்னோடு பெரிய தலையிடியாய்ப் போச்சு. அந்தஸ்தில் உள்ளவனை தேடிக்கொண்டிருந்தால் உன் தங்கச்சி தாலி கட்டும்போது கையில் குழந்தையை ஏந்திக்கொண்டிருப்பாள்." கணவன் கூறுவதைக் கேட்டு பெட்டி பாம்பாய் அடங்கிக் கொண்டாள்.

தனது வாழ்வை இவ்வளவு மட்டமாக எடைபோட்டு பார்க்கும் இருவரையும் நினைத்து அழத்தான் முடிந்ததே தவிர, விமலாவின் மூளையில் எதுவும் தட்டுப்படுவதாகத் தெரியவில்லை. சங்கரும், அமுதாவும் தன் எதிரே வந்து நிற்பதைக் கண்டவுடன் தலையை தாழ்த்திக் கொண்டாள்.

"இன்னும் ஏன்டி அழறே... நீ ஒப்பாரி வைப்பதாலே போன மானம் திரும்பி வந்துடுமா என்ன" போடி போ... போய் முகத்த அழம்பிக்கோ. நாளைக்கே ஒரு முடிவுகட்றன். வார்த்தைகளையள்ளி வீசியவள் தன் கணவன் பக்கம் திரும்பி, இன்னைக்கே அந்த... பாஸ்கரை கண்டு பேசவேண்டியதை பேசிடுங்கோ... நாளைக்கே... அக்கா... அமுதா பேசிமுடிக்கவில்லை. ஆவேசமாக கத்தினாள் விமலா. எனக்கு எவனுமே தேவையில்லை. உங்களுக்கு நான் பாரமாயிருந்தா நான் எங்காவது போயிடறேன். யார் செய்த பாவமோ...நா...நா...விம்மி அழுத விமலாவின் கூந்தலைப் பிடித்து ஓங்கி ஓர் அறைவிட்டாள் அமுதா. துவண்டு விழுந்தாள் விமலா. அடி...நன்றாக அடி...உன் கை வலிக்கிற மட்டும் அடிக்கா.

ஆடிக்கறக்கிற மாட்டை ஆடிக்கறக்கணும், பாடிக்கறக்கிற மாட்டை பாடிக் கறக்கணும். இதபாரு விமலா... சங்கர் தனது அமுத வார்த்தையை தொடர்ந்தான்.

இப்ப என்னதான் நடந்து போச்சு. தெரியாம அறியாம நீ தப்புபண்ணிட்டே. நீ நன்றாக வாழவேண்டுமென்றுதானே இரண்டு பேரும் இந்த முடிவுக்கே வந்தோம். கண்ணைத் திறந்துக் கொண்டு உன்னை பாழுங்கிணற்றிலே இறங்கச் சொல்வோமா என்ன. சங்கர் இரக்கமாகப் பேசினான். தனது கணவரின் தயாள குணத்தையும், இரக்கமனப்பான்மையும் கண்டு மனம் குளிர்ந்தாள் அமுதா. முடிவா என்ன சொல்றே கையை ஓங்கியவாறே கேட்டாள் அமுதா.

"எனக்கு வேண்டாமென சொல்லிவிட்டேனே. திரும்பத் திரும்பக் கேட்டு ஏன் சித்திரவதை செய்றே." விமலாவின் பதிலும் கொஞ்சம் சூடாகத்தான் இருந்தது. விமலாவின் பிடிவாதம் சங்கருக்கும் கோபத்தைக் கிளறிவிட்டது. அப்படின்னா...ஊரில உள்ளவங்க எங்களைப் பார்த்து காறித்துப்பனும்னு நீ நினைச்சுட்டே. ஊரே நையாண்டி பண்ணும்போது அவமானம் தாங்க முடியாம ரெண்டுபேரும் தூக்கு போட்டு தொங்கணும்னு நீ ஆசப்படுறா. சங்கர் சொல்லிவிட்டு புறப்பட்டான். இரண்டடி எடுத்து வைத்திருப்பான் அதற்குள்,

நில்லுங்க...குப்புற விழுந்து கிடந்த விமலா ஆவேசமாக எழுந்தாள். என்ன சொன்னீங்க, ஊரில உள்ளவங்களைப் பற்றி இப்ப யோசிக்கிறீங்களா? வேசி வேசின்னு ஊரே சொல்லும்னு இப்ப வேதாந்தம் பேசுறீங்களே, ஆனா...ஆனா...அன்னைக்கி வேண்டாம் வேண்டாமென கதறினேனே...உங்க காதுல கேட்கலையே. அந்த நேரம் வேகம் இருந்ததே தவிர, உங்ககிட்ட விவேகம் இல்லாது போய்விட்டதே.

விமலாவின் எதிர்பாராத தாக்குதலைக் கண்டு சங்கர் மட்டுமல்ல, அமுதாவும் சிலையாகத்தான் நின்றாள். வார்த்தையை முடிக்கவில்லை. தொடர்ந்தாள்.

"நீங்க ஆம்பிளைங்க தலைநிமிர்ந்து நிற்கிறீங்க. நா பொம்பள தலகுனிஞ்சி நிற்கிறன். தவறு செய்தது நீங்க, தண்டனை முழுக்க எனக்கு. உங்க பொண்டாட்டி என்னை கேட்காத கேள்வியெல்லாம் கேட்டாளே... எல்லாம் தெரிஞ்சிருந்தும் இந்தப் பாவத்தைச் செஞ்சு காலமெல்லாம் கண்ணீர் வடிக்க வச்ச நீங்களே ஊமையாய் நிற்கிறீங்களே. ஏன் உங்க பொண்டாட்டி முன்னே கருவுக்கு காரணமே நான்தான்னு சொல்ல தைரியமில்லையா? சொல்லுங்க...

விமலாவின் பார்வை அமுதா பக்கமாகத் திரும்பியது. என்னக்கா வாயடைச்சுப் போய் நின்னுட்டே. யாருக்கிட்ட ஏமாந்தேன்னு எரிமலையாய் வெடித்தாயே, என்னைக் கெடுத்தவன் கண்முன்னே நிற்கிறான்.

உன்னால இப்ப என்ன பண்ண முடியும். யாருன்னு சொன்னா அவனுக்கே தாரைவார்த்து கொடுக்கலாம்னு சொன்னியே... சொன்னதை உன்னால் செய்ய முடியுமா...? முடியாதக்கா...முடியாது. களங்கப்படுத்தியவன் உன் கண்முன் நிற்கிறான். தொட்டு தாலிகட்டின கணவனாச்சே என்ன பண்ணலாம்னு...

அமுதாவிற்கு உலகமே சுற்றுவது போல் இருந்தது. தட்டுத்தடுமாறி தூணைப்பற்றிக் கொண்டாள். சங்கரின் முகத்தில் காறி உமிழ வேண்டும் போல் இருந்தது விமலாக்கு. உத்தமர்...பண்பானவர்...சீ...நீயும் ஒரு மனுஷனா...கேட்கவேண்டும் போல் இருந்தது. அதற்குள் சங்கர் மெல்ல நகர்ந்துகொண்டிருந்தான். விமலா பைத்தியம் பிடித்தவள் போல் தன்னை மறந்து சிரித்துக்கொண்டிருந்தாள்.

விமலா ஒரு பச்சைக் குழந்தை. அவளுக்கு குழந்தை மனது. தன் கணவர் அடிக்கடி கூறும் வார்த்தை நிலைதடுமாறி நின்ற அமுதாவின் காதுகளில் மட்டுமல்ல அந்த வீட்டினுள்ளும் அலைமோதிக் கொண்டிருந்தது.

*(யாவும் கற்பனை)*

# கலைந்த கனவுகள்

**"என்னங்க,** இன்னைக்கு ஒரே சந்தோசமாக இருக்கிறீங்க. என்ன விசயம்?" என்று தனது மனைவி கேட்க, நான் மட்டுமல்ல புள்ள, எல்லாருமே இப்ப...இப்பென்ன எப்பவுமே சந்தோசமாகத்தான் இருக்கப்போறாங்க என்று தம்பிப் போடியார் கூறினார். தனது மனைவியால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதை அறிந்து கொண்டு, "எங்கதான் இருக்கிறியோ தெரியல. இரு தரப்பினர்களும் சமாதான உடன்படிக்கை செஞ்சத நினச்சித்தான் சந்தோசமாயிருக்கன்" எனக் கூறி மௌனமானார். எத்தனையோ முறை சமாதானம், சமாதானம் என்று வாயால் மட்டுமே பேசி வந்தவர்கள், இம்முறை அதற்கு செயல்வடிவம் கொடுத்து அக்கறையோடு செயற்பட்டு வருவதால், சமாதானம் உருவாகும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில் தம்பிப் போடியார் காணப்பட்டார். வாப்பா, நம்மட வயல இனிப்போய்ப் பார்த்து, செய்யலாமா? என தனது கடைசி மகன் கேட்க, ஆமா, அது சம்பந்தமாகப் பேசப்போறாங்களாம். சீக்கிரமே பேசி வர்ர போகமே செய்றதுக்கான ஏற்பாடுகளை செய்யப் போறாங்களாம். என்ட நிரோஸாக் குட்டிக்கு ஜாம்ஜாம் என்று கல்யாணத்த நடத்தனும். பழையபடி போல சந்தோசமாக வாழலாம் என்றபடி, சமாதானம் ஏற்பட்டமைக்காக இறைவனுக்கு நன்றி கூறிப் பெருமூச்சு விட்டார். தனது வீட்டுத் தூணில் தலையைச் சாய்த்தவாறே அவரது சிந்தனை கடந்தகால வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருந்தது.

அவரது ஊரிலேயே, நெற்செய்கையிலும் பண்ணை வளர்ப்பிலும் கொடிகட்டிப் பறந்தவர்தான் தம்பிப் போடியார். மூன்று பெண் பிள்ளைகளின் தந்தையாவார். வறுமையின் வாசனையைக் கூட முகரவிடாமல் தனது குடும்பத்தைக் காத்து வந்தவர், மூத்த பிள்ளைகள் இரண்டிற்கும் பெரிய இடத்தில் மாப்பிள்ளை பார்த்து முடித்து வைத்தார். விவசாயத்தில் ஈடுபாடு கொண்டவர், தனக்குக் கீழ் வேலை பார்ப்பவர்களுக்கு நிறைவான சம்பளம் வழங்குபவர், அவரது நல்ல மனதிற்கு ஏற்றவாறே, அவரது நிலங்களும் வாரி வழங்கியது. பயிர்ச் செய்கைக் காலங்களில் வயலிலேயே தங்கி, வேலைகளைக் கவனிப்பார். கௌரவத்துடனும் நேர்மையுடனும் வாழ்ந்து வந்த தம்பிப் போடியாரின் நிம்மதியை நாட்டில் ஏற்பட்ட கலவரங்களும், யுத்தமும் சீர்குலைக்க ஆரம்பித்தன. அதன்பின் குறுகிய காலத்திற்குள்ளேயே நாட்டுப் பிரச்சினைகள் பாரியளவில் உருவெடுத்து யுத்தத்திற்கு இட்டுச் சென்றது. தம்பிப் போடியாரினதும் ஏனைய பலரினதும் வயல் நிலங்கள் அலங்கரித்துக் கொண்டிருந்த அக்கிராமம், யுத்தக் களமாக மாறியது. மனித வாழ்விற்காக நெல்மணிகள் விதைக்கப்பட்ட அந்நிலங்களில் மனித அழிவிற்கான வெடிகுண்டுகள் விதைக்கப்பட்டன. இதனால் அப் பகுதிகளுக்கு ஏனையவர்கள் செல்வது தடைப்பட்டது. தம்பிப் போடியாருக்கும் தனது நிலங்களைப் பார்ப்பதற்கான உரிமையும் மறுக்கப்பட்டு தடுக்கப்பட்டது. சமாதானம் ஏற்பட்டு பழையபடி போல் வாழலாம் என்று காத்திருந்தார். இப்படியே 16 வருடங்கள் கடந்துவிட்டன. சேமித்தவைகளையும், இருந்த சொத்துக்களையும் விற்று இவ்வளவு காலமாக அக்குடும்பம், ஏழ்மையாக தனது சீவியத்தை நடத்தி வந்தது. இப்படியாக, பழைய நினைவுகள் அவரைச் சூழ்ந்து கொள்ள, அவரது கண்களில் இலேசாக நீர் ஊற்றெடுக்க, தனது கைகளால் துடைத்தபடியே எழுந்தார்.

எங்க போகப்போறீங்க? என்று மனைவி கேட்க, பக்கத்துக் கடயில சுருட்டு வாங்கிட்டு வாரன். தனது மனைவியின் புலம்பலைக் காதில் வாங்காதவராக, நெஞ்சை நிமிர்த்தி நடக்கும் பழைய போடியார் மீண்டும் அவருள் குடிபுகுந்திருந்தார். கடைக்குள் நுழைந்ததும், போடியார், இனி உங்கட காலம் மீண்டும் வருகுது போல என்று புன்னகைத்தபடியே ஒருவர் சொல்ல, ஓமோம், எல்லாம் இந்தச் சமாதானத்தால, வாயால மட்டும் பேசிக்கிட்டு இருக்காம உருப்படியா இப்பவாவது வேலை செய்யத் தொடங்கிருங்களே என்று இன்னொருவர் சொல்ல, அவர்கள் அனைவருக்கும் புன்னகை ஒன்றை மட்டுமே பதிலாகக் கொடுத்துவிட்டு, சுருட்டுடன் வீடு நோக்கினார். மீண்டும் தான் வயல் செய்யப் போகிறோம், என்ற நம்பிக்கையில் கனவு காண ஆரம்பித்தார். பழைய மரியாதை மீண்டும் அவருக்குக் கிடைக்க ஆரம்பித்தன. நாட்களும் நகர்ந்தன. வாப்பா...வாப்பா...யாரோ? தேடி வந்திருக்காங்க எனக் குரல் கொடுக்க, வாயிலை நோக்கினார். யாரு...அட...

ராசமணியா? பாத்து எவ்வளவு காலமாச்சி...எனச் சொல்லிக் கொண்டே வரவேற்றார். இருவரும் தங்களது நலன்களையும் குடும்ப நிலைகளையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டனர். எப்படியெல்லாம் வாழ்ந்த நாம், மாமன் மச்சானா, அண்ணன் தம்பியாக, எல்லாம் இந்த யுத்தத்தால...என்று, தம்பிப் போடியார் இழுக்க, ஓம் போடியார், எல்லாந்தான் இப்போ சரியாகிட்டு வருதே, நல்லபடியாக வாழலாம் என்ற ராசமணியின் பேச்சில நம்பிக்கை இழையோடிக் காணப்பட்டது. "வயல் பக்கம் போனாயாமே? எனப் போடியார் கேட்க, இரண்டொருதடவ போய்ப் பாத்திருக்கன். அப்ப இந்தபடி இல்லை. உங்கட கை பட்டாத்தான் அள்ளி அள்ளிக் கொட்டுமே என்று புகழாரம் சூட, தனது மீசை முனைகளை மிடுக்காக தனது விரலால் தடவிக் கொண்டார். வர்ர கிழம வயலப் பார்க்கப் போவமா? எனக் கேட்க, ஓம், நான் வருவேன் எனக் கூறி ராசமணி விடைபெற்றார். தனது வயற்காணிகளைப் பார்க்கப் போகிறோம் என்ற சந்தோசத்தில் போடியாருக்கு நாட்கள் நகர்ந்தன.

எதிர்பார்த்திருந்த அந்நாளும் வந்தது. இருவரும் வயலை நோக்கிய தங்களது பயணத்தைத் தொடங்கினர். பல காவலரண்களைக் கடந்து சிலமணி நேரங்களின் பின் குறிப்பிட்ட இடத்தை நெருங்கிக் கொண்டிருந்தனர். போகும் வழிகளில் காணப்பட்ட கட்டிடங்களும், மரங்களும் போடியாருக்கு பழைய நினைவுகளை வழங்கிக் கொண்டு வந்தன. செழிப்பாக இருந்த அவ்விடங்கள் வரண்டு போய்க் கோரமாகக் காட்சியளித்தது. போடியாரின் மனம் எதையோ தேடிக்கொண்டே வந்தது. சிறிது தூரம் சென்றதும், இடிந்து பாழடைந்த நிலையில் ஒரு கடையைக் கண்டார். அது தனது நண்பனாகப் பழகிய மயில்வாகனத்தின் கடையாகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டார். தற்போது, அவரது கண்களுக்கு வயல் தென்பட ஆரம்பித்ததும் பரவசமடைந்தார். அதனைப் பார்ப்பதற்கு, தாயின் பாசத்திற்காக ஏங்கித் தவித்த பிள்ளை போன்றிருந்தது. தனது வாரிசுகளில் ஒன்றாகக் கருதிப் பரிபாலித்து வந்த அந்நிலம், வரண்டு, உருக்குலைந்து இருந்ததைக் கண்டு கவலையடைந்தார். அந்நிலத்தைத் தனது கைகளால் தடவிக் கொண்டார். இவைகளை அவதானித்துக் கொண்டிருந்த ராசமணி, கவலப்படாதீங்க போடியார், இப்ப எல்லாம் சரியாகுது. தானே, அழகாச் செஞ்சு எடுக்கலாம் என ஆறுதல் கூறினார். இந்த வருசம் செய்றயா? எனத் தொடர, இல்ல, அடுத்த வருசம் செய்யச் சொல்லி வேண்டப்பட்டவங்க எல்லாரும் சொல்றாங்க. அதோட இப்ப என்கிட்டக் காசுமில்ல எனக் கூறினார். அதனை ராசமணியும் ஆமோதித்தார். தனது வயற்காணிகளைப் பார்த்து விட்ட திருப்தியில் போடியார் வீடு திரும்பினார். வீட்டிலுள்ளவர்களிடம் தனது வயல் நிலங்களின் நிலையைக் கூற, அவர்களும் கவலைப்பட்டனர். அதன் பிறகு, அவ்வப்போது தனது வயல் நிலங்களைச் சென்று பார்த்துக் கொண்டார். தன்னோடு முன்பு பழகியவர்களது உறவுகளும் தம்பிப் போடியாருக்கு மீண்டும் திரும்பக் கிடைத்துக் கொண்டிருந்தன. நாட்களும் உருண்டோடி வருடமொன்றும் கழிந்தது.

அவ்வேளையில் நாட்டில் பழையபடி போன்று ஆட்கடத்தல்களும், வன்முறைச் சம்பவங்களும் தலைதூக்க ஆரம்பித்தன. இதனையிட்டு போடியார் கவலையடைந்தாலும் தான் பயிர் செய்யப் போகும் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அதற்கான நேரமும் ஓடோடி வந்தது. வேலையைத் தொடங்குவதற்குப் பணம் தேவைப்பட்டது. தனது கையிருப்பில் ஒன்றுமில்லாததால், மகளின் திருமணத்திற்காகக் கஷ்டப்பட்டு சேர்த்து வைத்திருந்த நகைகளை வங்கியில் அடகு வைப்பது என முடிவெடுத்தார். தனது மகளிடமிருந்து நகைகளைப் பெற்றார். மக, மத்த ரெண்டு பேர் கல்யாணத்தையும் விட பெரியளவில் உனக்குச் செய்து காட்டுவன் எனச் சூளுரைத்தார். நகைகளை அடகுவைத்து பணத்தைப் பெற்றுக் கொண்டார். வேலை செய்வதற்கான கூலியாட்களைத் திரட்டும் பணியை ராசமணியிடம் ஒப்படைத்தார். இரு நாட்களின் பின் தனது வயலைப் பார்ப்பதற்குச் சென்றார். அங்கே தனது வயலுக்குச் செல்வதற்கான பாதை அடைக்கப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். அங்கு நின்றவர்களிடம் விசாரித்த போது, இரவு அந்தப் பக்கம் துவக்குச் சத்தம் கேட்டுக்கிட்டு இருந்திச்சி. நிலமையும் சரியில்ல. நீங்களும் கெதியாத் திரும்புங்க என்ற செய்தி, தம்பிப் போடியாருக்கு இடியாக



– -எம்.ஐ.எம்.சர்ஜுன், ஏறாவூர்.

விழுந்தது. வீட்டிற்கு வந்து நடந்தவைகளை அழாக் குறையாகக் கூறி முடித்தார். ஊடகங்கள் எல்லாம் மீண்டும், குண்டுவெடிப்புகளையும், இழப்புகளையும், கொலைகளையும் பற்றியே செய்தி வெளியிடத் தொடங்கின. சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கை அனைவருக்கும் குறையத் தொடங்கியது.

என்னங்க, இது சரிவராது போல இருக்கு, பேங்கில வச்ச நகைகளை மீட்டுட்டு வாங்க. நாளாகினா வட்டிக் காசத் திரட்டுவதே பெரும்பாடாகிடும் என்று கவலையோடு அமைதியாகக் கூறினாள் மனைவி. தனது மகளைப் பரிதாபமாகப் பார்த்தபடியே போடியார் எழுந்தார். அவரில் குடிபுகுந்திருந்த சந்தோசம், நம்பிக்கை என்பன அவரை விட்டு விலகிக் கொண்டன. சிறகொடிந்து நின்றது சமாதானப் புறா மட்டுமல்ல, சந்தோச வானில் பறந்து கொண்டிருந்த அவர் மனமும்தான். இந்த நாட்டில் ஐக்கியம் என்பதே இனிக் கிடையாதா? இந்த நிம்மதியற்ற வாழ்க்கை தொடர்ந்து கொண்டே தான் இருக்குமா? என்ற, விடைகளற்ற கேள்விகள் அவரினுள் எழத் தொடங்கின. தம்பிப் போடியாரது இரு கால்களும் அவரை வங்கியை நோக்கி நகர்த்திக் கொண்டிருந்தன.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

எட்டிப் பழம் வெளித் தோற்றத்தில் பார்ப்பதற்கு அழகாயிருந்தாலும், அதன் உள்ளிருப்பது நஞ்சு என்பதை அதன் உட் பகுதியைப் பற்றி அறிந்தவர்கள் நன்கு அறிவர். அதே போல் வெளித் தோற்றத்தால் தங்களைக் கனவான்களாகக் காட்டிக் கொள்பவர்களின் உள் மனதில் இருக்கும் கயமையை மறைப்பதற்கு எவ்வளவு முயற்சி எடுத்த போதிலும், அவர்களின் இயல்பான தீய குணங்கள் அவர்களை அறியாமலேயே வெளிப்பட்டு விடும். அத்தகைய மனிதர்கள் மேற் பூச்சாக ஏதோ பொருத்தமற்ற பொய்களைக் கூறினாலும், மனதுக்குள் உண்மை நின்று உறுத்திக் கொண்டே நிற்கும். அதனால் ஏற்படுகின்ற பயம் தொடர்ந்து தண்டனை வழங்கும் என்பதனை:-

*"தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்*
*தன் நெஞ்சே தன்னைச் சுடும்"* *குறள் - 293*

தன் நெஞ்சே ஏற்றுக் கொள்ளாததான பொய்யைச் சொல்லாதிருப்பாயாக; அதை மீறிப் பொய் கூறினால் உன் நெஞ்சமே உள் நின்று உன்னை வருத்தும் என்பதாம்.

## இலக்கிய நயம்

# கண்டவர் பிழைப்பாரோ?

**விக்கிரமனின்** வருகைக்காக காத்திருந்த மரகதவல்லியின் தாமரை முகத்தில் கவலை தோய்ந்து காணப்பட்ட போதிலும், அவர் வாக்குத் தவற மாட்டார் என்பதில், அவளுக்குத் திடமான நம்பிக்கை இருந்த போதிலும், ஏனோ? அவளால் அவர் வரும் வரை பொறுத்திருக்க முடியவில்லை.

உப்பரிகையில் அமைக்கப்பட்டிருந்த மலர் வனத்தில் அலங்காரக் கதிரை ஒன்றின் சட்டத்தைப் பற்றியவாறே மரகதவல்லி நின்றிருந்தாள்.

மலர்வனத்தின் சுற்றுப்புறங்களெல்லாம் சுகந்தத்தின் ஆக்கிரமிப்பு, அதன் ஈர்ப்பில் எத்தனையோ வண்டினங்கள் மலர்களை வட்டமிட்டு ரீங்காரம் பாடிக் கொண்டிருந்த போது ஏற்படும் பேரிரைச்சல், இவைகளெல்லாம் மரகதவல்லியின் காதில் பட்டதாகத் தெரியவில்லை. விக்கிரமன் வரும் வழியிலேயே அவள் கண்ணும் கருத்தும் ஒன்றிப் போயிருந்தன. மந்தாரையின் மணம் மனதுக்கு ரம்மியமாக இருந்தபோதும், மணாளன் இல்லாத மாலை வேளை மனதுக்குத் துன்பமாகவே தென்பட்டது. வானத்தில் தோன்றுகின்ற பிறை நிலவைக் காவல் செய்யும் தாரகைகள் அவளைக் கேலி செய்வதுபோல் கண்களைச் சிமிட்டிய போதெல்லாம் அவளுக்கு விக்கிரமன் மீதுதான் கோபம் அதிகரித்தது. ஏன் இவர் கொஞ்சங்கூட இங்கிதம் தெரியாதவராக இருக்கிறாரே என்றெல்லாம் மனதுக்குள் சபித்துக் கொண்டாள். மாலைக் கருக்கல் இரவை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தது. விக்கிரமன் வருவான் என்ற மரகதவல்லியின் எதிர்பார்ப்பு மெல்லக் கரையத் தொடங்கிய வேளை, கோட்டை வாயிலின் அறிவிப்பு மணி ஒலித்ததும் வாயிற்கதவை உற்று நோக்கினாள் மரகதவல்லி.

தலைவாயிலின் கதவுகள் திறக்கப்பட்டதும் விக்கிரமனின் ரதத்தில் பூட்டப்பட்டிருந்த வெண்புரவிகளின் தலைகள் தெரிந்ததும், வந்து கொண்டிருப்பது விக்கிரமன்தான் என்பது புலனான அந்த வினாடியே மரகதவல்லியின் உடலெல்லாம் அவளை அறியாமலேயே புல்லரித்தது. அந்த இன்ப அதிர்ச்சியில் அவள் மனதிலோடிய எண்ணப் புயலில் அடித்துச் செல்லப்பட்டு நின்றவளை விக்கிரமனின் கரங்கள் அவள் இடையை வளைத்துப் பிடிக்கும் வரை மெய்மறந்து நின்றாள் என்றால் அவள் எந்த அளவுக்கு மோக வயப்பட்டிருந்தாள் என்பதுதான் வியப்புக்குரியது.

விக்கிரமன், மரகதவல்லியின் இடையை தன் இரு கைகளாலும் இறுக்கிய பொழுது அவள் எந்தவித உணர்வுகளையும் காட்டாமல் அவசரமாக அவள் கைகளை விலக்கிவிட்டுப் பள்ளியறையை நோக்கி நடக்கத் தொடங்கினாள். விக்கிரமன் சில வினாடிகள் காரணம் புரியாமல் திகைத்து நின்றான். ஆயினும் மரகதவல்லியின் கோபத்துக்குக் காரணம் புரிந்ததும் அவளைப் பின்தொடர்ந்து சென்றவன் ஒரேதாவில் அவளைப் பிடித்து விட்டான். அவள் திமிறினாள் முடியவில்லை. அவனின் இரும்புக் கரங்களுக்குள் சிக்குண்டாள் அவள். "விடுங்கள் என்னை, இன்றுதான் என் ஞாபகம் வந்ததோ" என்றவள் அவன் அணைப்பிலிருந்து விடுபடத் தவித்தாள். "மரகதம் என்னை என்ன செய்யச் சொல்கிறாய். நான் ஒரு சாதாரண குடிமகனாக இருந்திருந்தால் உன்னை விட்டு எங்குமே செல்வேனா" என்றதும், "வேண்டாம் உங்கள் சமாதானம் யாருக்கு வேண்டும். உங்களைப் பிரிந்து இருக்கும் ஒவ்வொரு வினாடியும் நான் படும் வேதனை உங்களுக்கு எங்கே தெரியப் போகிறது" நான் மட்டும் என்ன உன்னைப் பிரிந்து இருக்கவா நினைத்தேன். அரச பணி இல்லாத ஒவ்வொரு வினாடியும் உன்னோடுதானே இருக்கிறேன். அப்படியிருந்தும் நீ கோபித்துக் கொள்வது முறையற்றது என்பதை உணரவில்லையா? என்றபோது, விலகி நின்றவளின் குரலில் தோன்றிய கனிவும் வண்ணம் நீர்த்தடாகத்தில் உள்ள படிகளின் ஒய்யாரமாக இறங்கி வந்துகொண்டிருந்தாள்.

அவளைக் கண்டதும் விக்கிரமன் செய்வதறியாது திகைத்து நின்று விட்டான். அந்த வேளை அவள் இருந்த கோலத்தைக் கண்டதும், அவன் கைகளையே அவனால் நம்ப முடியாதிருந்ததென்றால், அதுதான் அவள் இடையில் உடுத்தியிருந்த மெல்லி ஆடையினூடாக அங்கங்களை அம்பலப்படுத்தியிருந்தது. மார்புக் கச்சை என்று ஏதோ ஒன்று இருந்தது போல் தோன்றினாலும் அது மார்பை மறைப்பதற்காக அணிந்ததாகத் தெரியவில்லை. அவள் படிகளில் இறங்கிவரும் போது வாழைத் தண்டுகளால் உருவமைத்த பொம்மை நடை பயில்வது போன்றதோர்



துயரமும் அவள் மனதை நெகிழ வைத்தது. தொடர்ந்து அவன் "மரகதம் ஏன் வீணாக என்மீது குற்றம் சுமத்தி மனதைப் புண்படுத்துகிறாய்" என்று அவன் வினவியபோது "அத்தான் உங்கள் மனதைப் புண்படுத்த நான் நினைப்பேனா? வீணாக ஏன் நீங்களாகவே மனதை வருத்திக் கொள்கிறீர்கள்? வாருங்கள்" என்று அவன் கையைப் பற்றி அழைத்துக்

**தருவது கற்பகன்**

கொண்டு தடாகத்தின் அருகில் விக்கிரமனை நிறுத்தினாள் மரகதவல்லி.

விக்கிரமன் தடாகத்தில் இறங்கியபோது அவன் உடலில் ஏற்பட்ட புத்துணர்ச்சி ஒரு வித இன்பத்தைத் தந்ததென்றால் நெடுந்தூரம் மணல் பாதையில் வண்டியைச் செலுத்தும் போது ஏற்பட்ட புழுதிப் படலம் ஆளையே உருமாற்றி இருந்தது. வெயிலின் அகோரத்தால் அவனுக்கிருந்த ஆயாசம் தடாகத்தின் தண்மையால் இதமானதொரு சுகத்தைக் கொடுத்தது. அந்த மகிழ்ச்சியில் விக்கிரமன் திழைத்திருந்தபோது விக்கிரமன் தடாகத்தினருகே விட்டுச் சென்ற மரகதவல்லி எதிர்பாராத தோற்றம். அந்த நீச்சல் தடாகத்தில் அமைக்கப்பட்டிருந்த வர்ண விளக்குகளின் ஒளி நீரின் பரப்பிலுள்ள சிற்றலைகளில் பட்டுத் தெறிக்கும்போது அவள் தொடைகளில் வர்ணகோலங்களைக் காட்டிக் கொண்டு சிரித்தன. இவைகளெல்லாம் முற்றும் துறந்த முனிவரைக் கூட தன்னிலை மறக்கச் செய்து விட்டுவிடுமே! உலக இன்பங்களையெல்லாம் அள்ளிப் பருகத் துடிக்கும் இளவலுக்கு இப்படியொரு சந்தர்ப்பம் எத்தகையது?

விக்கிரமன் அவள் மேனி அழகைக் கண்டு வியந்து போய் அவள் அங்கங்களையெல்லாம் ஒவ்வொரு அங்குலமாக கணக்கிட்டுக் கொண்டிருந்தவேளை தான், மரகதவல்லியின் மதுரக்குரல் ஒலித்தது. "ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்?" என்றதும் திடுக்கிட்டுத் தன் கண்களை இமைத்தான் விக்கிரமன். அவன் நிலைமையைக் கண்ணுற்றதும் மரகதவல்லி சிரித்தாள். அந்தச் சிரிப்பின் அர்த்தத்தை அவனால் புரிந்து கொள்ள முடிந்ததோ இல்லையோ கண்ணிமைக்கும் நேரத்தில் தடாகத்தினுள் குதித்தாள் மரகதவல்லி.

**"உறுதோ உயிர் தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்**
**கமிழ்தின் இயன்றன தோள்"**

*குறள் : 1106*

## சிந்தியா பதில்கள்

**தேசிய அரசியலில் நடந்த அதிரடி மாற்றங்கள் சுவாரஷ்யங்கள் குறைந்து 'சப்' என்று ஆகி விட்டதே.**

**- எஸ். நிலாமதி, வாழைச்சேனை.**

எது சுவாரஷ்யமானது என்பதையும், எது "சப்" என்று ஆனது என்பதையும் குறிப்பிடாமல் "சப்" என்று இருந்ததையெல்லாம் சுவாரஷ்யமானதாகவும், சுவாரஷ்யமானதுகளை "சப்" என்றும் பார்க்கும் நிலை துரதிர்ஷ்டமானது தான்.

**கிழக்கு மாகாணத்தில் புலிகளின்பிடி தொடர்ந்தும் தளர்ச்சி அடைந்து கொண்டு போவது எதைக்காட்டுகிறது?**

**- எம்.எஸ்.பாருக், நிலாவெளி.**

கிழக்கு மாகாணத்திலிருந்து ஆள் பலத்தைப் பெற்றுக் கொள்வதில் காட்டப்பட்ட அக்கறையை, வன்னியைப் போல் தளப் பிரதேசமாகவோ, முக்கியத்துவமானதாகவோ கொண்டிருக்கவில்லை என்பதைத்தான் காட்டுகிறது.

**புலிகளை ஆயுத ரீதியாக வெற்றி கொள்ள முடியாது என்று அமெரிக்கத் தூதுவர் கூறியிருப்பது சரிதானா?**

**- வி. லிங்கேஸ், மன்னார்.**

அவர் "ஆயுத மோதல்கள் பிரச்சினைத் தீர்வுக்கு உதவாது. அது ஒரு சரியான அணுகுமுறையும் இல்லை" என்பதாகத் தான் கூறினார். "ஆயுத மோதல்கள் ஊடாக வெற்றி பெற முடியாது என்பதைத்தான் செய்திகள் திரிபு படுத்திவிட்டது. புலிகளை ஆயுத வழியில் வெல்ல முடியாது என்பதுபோல், அரசைப் புலிகள் வெற்றி பெற முடியாது என்பதைத்தான் சொன்னார். இதில் முரண்பாடு என்னவென்றால், ஆயுத மோதல்கள் பிரச்சினைகளைத் தீர்க்க உதவாது என்று கூறும் அமெரிக்கா, சொல்லிக் கொண்டு தனது அணுகு முறையை ஆயுதங்கள் மூலமாகத்தான் தீர்வு கொள்ள முனைகிறது. உதாரணத்துக்கு ஈரான் விவகாரம்.

**இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு தற்போதைய நிலையில் ஏதும் மாற்றத்துக்கு உட்பட்டிருக்கிறதா?**

**- வி. இராமலிங்கம், காலி.**

ஆயுதக் கடத்தல் விவகாரம் விழிப்புக் கொள்ளச் செய்திருக்கிறது. இலங்கை அரசின் நியாயங்களை ஏற்றுக் கொள்ள வேண்டியதொரு கட்டாயத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. பாதுகாப்புத் தொடர்பில் ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்க இந்தியா விரும்பலாம். ஆனால் தூர நிற்கும் கொள்கையில் மாற்றம் உடனடியாக ஏற்பட வாய்ப்பு இல்லை. இது மத்திய அரசின் நிலைப்பாடு. தமிழகத்தைப் பொறுத்தவரை முதல்வர் கருணாநிதிக்கு எரிச்சலோடு கூடிய தர்ம சங்கடம் உண்டு. எதிர்க்கட்சித் தலைவி ஜெயலலிதா பயங்கரவாத எதிர்ப்பாளர் என்பதால், புலிகளை நிராகரிக்கும் அதேவேளை, இலங்கையில் பௌத்த மக்களுக்கு இருக்கும் அத்தனை உரிமைகளும் தமிழ் மக்களுக்கும் இருக்க வேண்டும், அதை இலங்கை அரசு வழங்க வேண்டும் என்று திட்டவட்டமாகப் பூசி மெழுகாமல் தெரிவித்துள்ளார். அவரின் உறுதியான இந்தக் கருத்து பாராட்டுக்குரியது.

**புரட்சிகர சிந்தனை மலையகத்தில் ஏற்பட வேண்டும் என்று அமைச்சர் ஒருவர் கருத்துக் கூறியிருக்கிறாரே. அதன் அர்த்தம் என்ன?**

**- எம். தினேஸ், ஹாலிஎல.**

தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பிலும், பொருளாதாரத்திலும் முன்னேற்றமடைய அதை ஒரு இலக்காகக் கொண்ட புரட்சிகரம் ஏற்பட்டால் அது நல்லதுதான். ஆனால்,அது அமைச்சர்களின் கைகளிலேயே பெரிதும் தங்கி இருக்கிறது. இந்த அமைச்சர் கூறியிருக்கும் புரட்சிகரம் எதுவாக இருக்கும் என்று சிந்திக்க வேண்டும். புலிகளோடு நெருக்கமாகக் காட்டிக் கொள்வதிலும், அவர்களுக்கு ஆளணி விடயத்திலும் உதவி செய்கிறார் என்று முன்னர் வதந்திகள் வந்தது. அதன் பலனையே தற்சமயம் தோட்ட மக்கள் அனுபவிக்கிறார்கள். இன்னும் என்ன வில்லங்கத்துக்காக அவர் புரட்சி பற்றி பேசியிருக்கிறாரோ தெரியாது.

**அனைத்துக் கட்சிக் கூட்டத் தொடரின் ஆயுள் முடிந்து விட்டதென்று நான் சொல்கிறேன். நீர் என்ன நினைக்கிறீர்?**

**எஸ். சிவாபாதம், கம்பஹா.**

சேடம் இழுத்துக் கொண்டிருப்பதாகத்தான் தெரிகிறது. வன்முறையை தொடங்கி விடுவதை விடவும் சமரசத்தை ஏற்படுத்துவது எத்தனை தடைகள் நிறைந்தது என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம்.

**யுத்த நிறுத்த ஒப்பந்தம் இன்னும் அமுலில் இருப்பதாகவும், அது அரசியல் அமைப்பை மீறவில்லை என்றும் ஐ.தே.க. கூறுவது பற்றி உமது பதில் என்ன?**

**- எம். தாஸன், குருநாகல்.**

எதையாவது சொல்லிக் கொண்டிருக்கையில், இதையும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள், ஆளும் கட்சியாக இருந்திருந்தால் இதையே இன்னொரு விதமாகச் சொல்லி இருப்பார்கள். எல்லாம் எதிர்க்கட்சி அரசியல் கண்டு கொள்ளக் கூடாது.

**சிந்தியா, மேற்குலக நாடுகளின் மிரட்டலுக்கு ஈரான் அடி பணியுமா?**

**- எம். தௌபிக், புத்தளம்.**

அடிப்போம் என்பதற்கே பணியாதவர்கள், அடிபணிவார்கள் என்று நம்பவில்லை. மிரட்டல் சொல் வடிவம் பெறும்போது இஸ்ரேலுக்கு இருக்கிறது "ஆப்பு".

**சிந்தியா, வவுனியாவில் நிலைமை பதற்றமாக இருக்கிறதே. வாகரைபோல் இங்கும் நிலைமை மோசமடையுமா?**

**- எல். கஜேந்திரன், தோணிக்கல்.**

"இல்லை" என்று கூறமுடியாது. வாகரை அளவுக்கு இருக்காது. வட போர் முனையில் தாக்குதல்கள் சூடு பிடிக்கும் போது, வவுனியாவிலும் அது எதிரொலிக்கும்.



பச்சைக்கிளி முத்துச்சரம்

**சிம்பு, நயன்தாரா விடயம் ஓய்ந்ததாகத் தெரியவில்லையே?**

**- ஜெ. திவ்யா, வெள்ளவத்தை.**

லூசுப் பெண்ணும், லூசுப் பையனும் சம்பந்தப்பட்ட சச்சரவு என்பதால் லூசுத்தனமாகத் தான் இருக்கும்.

**தமிழில் உமக்குப் பிடிக்காத வார்த்தை.**

**- கே. சூரியகுமார், மருதானை.**

"தெரியாது"

**சிந்தியா, உடற் பயிற்சி செய்தும் தொப்பை குறையவில்லையே. என்ன செய்யலாம்?**

**- ஆர். பார்த்தீபன், செங்கலடி.**

முறையான உடற்பயிற்சி செய்தீர்களோ தெரியாது. உண்மையில் வைத்தியரை கேட்க வேண்டிய கேள்வி இது. என்ன செய்யலாம் என்று தெரிந்து விட்டால், எனக்கும் எழுதி அனுப்புங்கள்.

**உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியைப் பார்க்கப் போனால், அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கும் போய் விடலாம் என்று முகவர்கள் பணம் பறிக்கும் செய்தி கேள்விப்பட்டீரோ?**

**- இரா. அன்பு, தம்பலகாமம்.**

விசாரித்தவரையில் மேற்கு இந்தியத் தீவுக்குப் போக தூதுவராலயம் இங்கு இல்லை. கிரிக்கட் சபையினர்தான் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியைப் பெற்றிருக்கின்றனர். அங்கு போனால், எங்காவது ஓடலாமா என்பது ஓரளவு சாத்தியமானதுதான். அதற்காக நிச்சயமில்லாத ஒன்றில் முகவர்களிடம் எவரும் ஏமாந்து விடவேண்டாம். ஏமாறத் தெரிந்தால், ஏமாற்றுவதற்கு முகவர்கள்தான் வரவேண்டும் என்றில்லை. உங்கள் நண்பர்களே போதும்.

**"பச்சைக்கிளி முத்துச்சரம்" படம் பார்த்து விட்டீர்களா. எப்படி இருக்கிறது?**

**- வை. சீதா, ஹட்டன்.**

கௌதமின் இயக்கம் என்பதால் இரண்டாவது காட்சிக்குச் சென்று பார்த்தேன். மின்னலே, காக்கக் காக்க, வேட்டையாடு விளையாடு போலில்லாமல் ஏதோ மாதிரி இருக்கிறது. கௌதம் மனதில் இருக்கவில்லை.

# இலங்கை - சீன உறவுகளில் மற்றுமொரு மைல் கல்



இலங்கை ஜனாதிபதி – சீன விஜயத்தின் போது..

இலங்கைக்கும் மக்கள் சீனக் குடியரசுக்குமிடையில் இராஜ தந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு ஹு ஜின்ராவோவின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான தூதுக் குழுவினர் சீனா சென்றுள்ளனர். மற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற முக்கிய பஞ்சசீலக் கோட்பாட்டை ஆதார சுருதியாகக் கொண்டிருக்கும் மக்கள் சீனம், இலங்கையின் பொருளாதார, கல்வி, கலாசார அபிவிருத்திகளுக்கு உதவும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவுள்ளது. இதே போன்று இலங்கையும் இரு சீனக் கொள்கைகளை நிராகரித்து வருகின்றது. அதாவது தாய்வானையன்றி சீனாவை மட்டுமே இலங்கை அங்கீகரித்து வருகிறது. அதாவது மக்கள் சீனத்தின் பிரிக்கமுடியாத பகுதியே தாய்வான் என்ற நிலைப்பாட்டை இலங்கையும் ஏற்றிருக்கின்றது.

1949ஆம் ஆண்டு மக்கள் சீனக் குடியரசு நீண்ட கால ஆயுதப் போராட்டத்தை நடத்தி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கிறது. ஏகாதிபத்திய காலனித்துவ நிலப் பிரபுத்துவ சக்திகளுக்கு எதிராக இந்த மக்கள் விடுதலைப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. இலங்கையும் ஏறக்குறைய சம காலத்திலேயே சுதந்திரம் பெற் றது.

ஆனால், இன்றும் கூட ஆயுதக் கிளர்ச்சிகளை எதிர்நோக்கி வருவதால் அது இலங்கைக்கு சவாலாக இருக்கின்றது. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சீனா கையாண்ட வழிமுறைகள் பற்றியும் இலங்கைத் தூதுக் குழுவினர் ஆராய்ந்து வருகின்றனர்.

# வாகரையில் பரீட்சை 18ஆம் திகதி நடைபெறும்

மட்டக்களப்பு, வாகரைப் பிரதேசத்தில் இடைநிறுத்தப்பட்ட 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மீண்டும் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சை அடுத்த மாதம் 18ஆம் திகதி அந்தப் பிரதேசத்தில் நடத்தப் படவுள்ளதாக பரீட்சைத் திணைக் களம் தெரிவித்துள்ளது. இந்தப் பரீட்சையில் பங்கு கொள்ளும் 225 மாணவர்களுக்காக இரண்டு பரீட்சை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதேவேளை, வன்செயல் மற்றும் மோதல்கள் காரணமாக இந்த பரீட்சை முன்னர் மூன்று முறை பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை கப்பல் பயணத்திற்கென இலஞ்சம் வாங்கியவர்கள் சிக்கினர்

ஈ.பி.டி.பி.யின் பெயரைப் பயன்படுத்தி கப்பல் பிரயாணத்திற்கென கப்பம் அறவிட்ட இரு நபர்கள் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுள்ளனர். யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்துப் பாதை துண்டிக்கப்பட்டிருப்பதால் கப்பல் மூலமாக கடல் வழிப்பயணத்திற்கு ஒழுங்கு செய்து தருவதாகக் கூறி பணம் அறவிட்ட இருவர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். நல்லூர் சட்டநாதர் வீதியைச் சேர்ந்த தங்கவேலு கனகரட்ணம் என்பவரும் யாழ். சீனிவாசகம் வீதியைச் சேர்ந்த பரமசாமி வேலாயுதம் என்பவருமே பிடிபட்டவர்களாவர். மலையக இளைஞர்கள் நால்வரிடம் கப்பல் போக்குவரத்திற்கு ஒழுங்கு செய்து தருவதாகக் கூறி தலா 5000 ரூபா வீதம் பணத்தை அறவிட்ட கனகரட்னம் இளைஞர்கள் செய்த புகாரையடுத்து கைது செய்யப்பட்டார். பரமசாமி வேலாயுதம் சிலரை ஏமாற்றி பணத்தைப் பெறும்போது கையும் மெய்யுமாகப் பிடிபட்டார். இவர்கள் கொடுத்த தகவலையடுத்து இந்த மோசடி நடவடிக்கையில் ஈடுபட்ட மேலும் சிலரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். அரசாங்கம் வடக்கிலிருந்து திருகோணமலைக்கு நடத்தி வரும் இந்தக் கப்பல் பயணச் சேவைக்கு ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் உதவி வருவது குறிப்பிடத்தக் கது. இந் நிலையில் மேற்படி நபர்கள் ஈ.பி.டி.பி.க்குக் கப்பம் கொடுக்க வேண்டும் எனக்கூறியே பணமோசடியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிராந்திய சுயாட்சி முறைக்கான சர்வதேச அழுத்தங்களும் அதிகரிப்பு

பிராந்தியங்களை அடிப்படையாகக் கொண்டு இனப்பிரச்சினைத் தீர்வு யோசனைகள் முன்வைக்கப்பட வேண்டுமென்று இந்தியா, இலங்கைக்கு ஆலோசனை தெரிவித்திருப்பதாக கடந்த 25ஆம் திகதி வெளியான ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. பிராந்திய சபைகளை அடிப்படையாக வைத்தே சர்வகட்சிப் பிரதிநிதிகள் யோசனைகள் வெளியிடப்பட உள்ளனவென்று கடந்த வாரம் நாம் செய்தி வெளியிட்டிருந்தோம். பல்வேறு இனங்களின் பரம்பலுக்கிணங்க பிராந்தியங்களின் எல்லைகள் மீளமைக்கப்பட வேண்டுமென்று சந்திரிகா அரசு முன்வைத்த யோசனைகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதாவது அம்பாறையில் தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகள் மட்டக்களப்பின் முஸ்லிம் பகுதிகளோடு இணைக்கப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதேபோன்று கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகள் வட மத்திய மாகாணத்தின் சில பகுதிகளோடு இணைக்கப்பட வேண்டும் என்றும் அந்த நகல் யோசனைகளில் தெரிவிக்கப்பட்டிருந்தன. பிரிக்க முடியாத நாட்டுக்குள் பிராந்தியங்களின் ஒன்றியத்தை ஏற்படுத்துவது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து, பின்னர் அதனை இணைப்பதா பிரிப்பதா என்பதனை சர்வஜன வாக்கெடுப்பொன்றின் மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை மத்திய அரசாங்கத்திற்கும் பிராந்திய அரசாங்கங்களுக்குமிடையில் பகிரப்படவுள்ள விடயங்களைக் குறிப்பிட்டு இரு பின் இணைப்புகளும் சேர்க்கப்பட்டிருந்தன. காணிக் குடியேற்றம் தொடர்பான அதிகாரம் பிராந்திய சபைகளுக்கு வழங்கப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மத்திய அரசாங்கம் தனக்கு காணிகள் தேவைப்படுமிடத்து, பிராந்திய அரசுடன் கலந்தாலோசித்து அதனைப் பெற்றுக் கொள்ளலாமென்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. பிராந்திய சபைகளுக்கென 45 விடயங்களும் மத்திய அரசிற்கென 58 விடயங்களும் பகிரப்பட்டிருந்தன.

இனப்பிரச்சினையைக் கையாள்வதற்கென முன்வைக்கப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஆகியவற்றை விட 2000ஆம் ஆண்டு சந்திரிகா அரசு முன்வைத்த யோசனைகள் முன்னேற்றகரமானவை என்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான கலாநிதி நீலன் திருச்செல்வம் உட்படப் பலரின் ஆலோசனைகளைப் பெற்றே இந்த நகல் யோசனைகள் தயாரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பான மூல நகல் யோசனைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டே அந்தத் தீர்வுப் பொதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தத் தீர்வுப் பொதியில் பல குறைபாடுகள் இருந்தாலும் அவற்றை ஓர் ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு தீர்வுக்கான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல முடியுமென்று அப்போதைய அரசியல் நோக்கர்கள் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனைப் போன்றே தெற்கில் இணக்கப்பாடொன்றினை காண்பதற்காக நடத்தப்பட்டு வரும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்திற்கு பெரும்பான்மை நிபுணர்கள் குழு சமர்ப்பித்திருந்த யோசனைகள் பெரு வரவேற்பைப் பெற்றிருந்தன. 17 பேர்களைக் கொண்ட நிபுணர்கள் குழுவில் பெரும்பான்மையினரான 11 பேர் சமர்ப்பித்த இனப்பிரச்சினைத் தீர்வு யோசனைகள் காத்திரமானவை என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். இந்த யோசனைகளில் சில சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ வித்தாரண சமர்ப்பித்திருந்த யோசனைகளில் சில கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இருந்தாலும் சுதந்திரக் கட்சி, ஐ.தே.க. போன்ற பிரதான கட்சிகள் வழங்கவிருக்கும் சிபார்சுகளின்படி ஏப்ரலுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும் அரசின் தீர்வு யோசனைகள் முன்னேற்றகரமானவையாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அவுஸ்திரேலியாவுக்கு 83 தமிழ் இளைஞர்கள் கடத்தல் முக்கிய புள்ளி இரகசிய பொலிஸ் வலையில்!

அவுஸ்திரேலியாவுக்கு 83 தமிழ் பேசும் இளைஞர்களைக் கடத்திச் செல்வதற்குச் சூத்திரதாரியாக செயற்பட்ட முக்கிய புள்ளி ஒருவரைத் தேடி இலங்கையில் இரகசியப் பொலிஸார் வலை விரித்துள்ளனர். உரிய ஆவணங்களைப் பயன்படுத்தி இந்தோனேஷியாவிற்கு இவர்கள் கொண்டு செல்லப்பட்டனர் என்று ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வருகிறது. இந்தோனேஷியாவிலும் இலங்கையிலும் கூட்டாக இயங்கும் இந்த ஆட்களைக் கடத்தும் கும்பல் பற்றி ஏற்கனவே தகவல் கிடைத்துள்ளதாக இரகசியப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களில் அதிகமானோர் தமிழர்கள் என்றும் ஒரு சில முஸ்லிம்களும் இருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒவ்வொருவரிடமிருந்தும் பல இலட்சக்கணக்கான ரூபாய்களைப் பெற்றே இந்த ஆட்கடத்தல் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

இந்தக் கடத்தல் சூத்திரதாரி ஏற்கனவே சுவிஸ் நாட்டுக்கு அழைத்துச் செல்லப்படும் என்ற உறுதி மொழியுடன் இரண்டு தமிழ் இளைஞர்களை மலேசியாவுக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். அங்கு மலேசிய கடவுச் சீட்டுக்களைப் பெற்று சுவிட்சர்லாந்துக்குப் போக முயன்றபோதே இரு தமிழ் இளைஞர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மலேசிய பாஸ்போர்ட் வைத்திருந்த இந்த இளைஞர்களிடம் விமான நிலைய அதிகாரிகள் மலேசிய மொழியில் கேள்விகள் கேட்ட போது, அவர்கள் பேந்தப் பேந்த விழித்ததால் குட்டு அம்பலமானது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்தச் சூத்திரதாரி வன்னிக்குத் தப்பிச் செல்லக் கூடிய சாத்தியம் இல்லையென்றும் இரகசியப் பொலிஸார் கருதுகின்றனர். இச் சூத்திரதாரிக்கு உதவியாக குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் சிலரும் விமான நிலைய அதிகாரிகள் சிலரும் இணைந்து செயற்பட்டிருப்பதாகவும் இரகசியப் பொலிஸார் தெரிவித்தனர்.

சட்ட விரோத குடியேற்றக்காரர்களுக்கு அனுமதியளிக்க மாட்டோம் என்று அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் கோவார்ட் தெரிவித்திருக்கிறார். இந்த நிலையில் அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் டவுணரும் குடியேற்ற பிரஜாவுரிமை அமைச்சர் கெவன் அன்றூவும் தெரிவித்த கருத்து இலங்கையை மட்டுமல்ல, அவுஸ்திரேலியாவிலும் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. சட்ட விரோதக் குடியேற்றக்காரர்கள் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் சித்திரவதைக்குள்ளாக்கப்படலாம் என்று இவர்கள் தெரிவித்த கருத்து சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. இலங்கையின் பெயரைக் குறிப்பிட்டு இவர்கள் கூறவில்லை என்ற போதிலும், அவர்களின் கூற்று சூசகமாக இலங்கையைக் குறிப்பிடுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கருணாநிதியின் கருத்துக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு

தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு ஆயுதங்கள் கடத்தப்படுவதைத் தடுக்க கடலோரக் காவல் படையினர் தமது கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டுமென்று இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் என்.வரதராஜன் தெரிவித்துள்ளார். மதுரையில் செய்தியாளர் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இந்தக் கருத்தினைத் தெரிவித்தார். இலங்கையில் தமிழர்களின் துயரங்களைக் கணக்கில் கொண்டு அவர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் ஆதரவை தவாறகப் பின்பற்றக் கூடாதென்ற முதலமைச்சர் கருணாநிதியின் கருத்தை வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தார். இலங்கையில் தமிழர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு அதிக சுயாட்சி வழங்குவதன் மூலமே பல ஆண்டுகளாக நீடித்து வரும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

# யாழ். பல்கலைக்கழகம் சுமுகமாக இயங்குகிறது

யாழ். பல்கலைக்கழகம் சுமுகமாக இயங்கி வருவதாகவும் தற்போது 70 சத வீதமான மாணவர்கள் வருகை தருவதாகவும் பதில் உபவேந்தர் பேராசிரியர் குமார வடிவேல் தெரிவித்தார். வரணி இயற்றாலையில் இறுதி ஆண்டு மாணவனான கிருஷ்ணன் கமலதாஸ் கடந்த 18ஆம் திகதி கொல்லப்பட்டதையடுத்து சிறிது பதற்றம் நிலவிய போதும் 22ஆம் திகதி முதல் அங்கு சுமுக நிலை ஏற்பட்டது. வெளிச் சக்திகளின் தலையீடும் பிரச்சினைகளும் இல்லை என்றால் பல்கலைக்கழகம் சுமுகமாக இயங்கும் என்று உபவேந்தர் குறிப்பிட்டார். தற்போது 5500 மாணவர்கள் கல்வி கற்பதாகவும், இவர்களில் 1100 பேர் வெளி மாவட்ட மாணவர்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஊடகப் பயங்கரவாதம்

தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வுக்கு அரசியல் ரீதியான யோசனைகள் முன் வைக்கப்படாதவரை புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முடியாது என்று இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் கூறியதாக பல தமிழ் ஊடகங்கள் திரிபுபடுத்தி செய்தி வெளியிட்டிருந்தன. அதாவது, இராணுவ ரீதியில் புலிகளைத் தோற்கடிக்க முடியாது என்ற கருத்து உட்பட புலிகள் இயக்கத்தை பலம் வாய்ந்த இயக்கமாக அவர் விளக்கியிருந்தார் என்ற பாணியிலேயே அவை செய்திகளை வெளியிட்டிருக்கின்றன என்று ஊடகவியலாளர் இம்தியாஸ் தெரிவித்தார். புலிகளின் 20 வருட கால வரலாற்றில் அவர்கள் நேர்மையுடன் சமாதானப் பேச்சுக்கு வருவார்கள் என்று நம்ப முடியாது என அவர் தெரிவித்த கருத்தை சில ஊடகங்கள் அப்பட்டமாகவே மூடி மறைத்திருந்தன. புலிகள் இயக்கம் பேச்சு வார்த்தைக்கு வருவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை அரசாங்கம் வழங்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

# சுதந்திரக் கட்சிக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்தும் முயற்சி தொடர்கிறது

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்ட உட் பூசலை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக கட்சிக்குள் இருக்கும் சமரசக் குழுவினர் எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை என்று மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அநுரா பண்டாரநாயக்காவுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையைத் தீர்த்து வைப்பதில் தமது அணியினர் எடுத்த முயற்சி வெற்றியளித்துள்ளதாக அவர் தெரிவித்தார். சச்சரவில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரின் ஏட்டிக்குப் போட்டியான வாதப்பிரதிவாதங்கள் சமரசத் தீர்வுக்கு இடையூறாக அமைந்துள்ளன. இருந்தாலும் தமது முயற்சிகள் தொடரும் என்றும் அவர் சொன்னார்.

இராஜ தந்திரிகள்..

பிரச்சினையாக மாற்றியிருக்கிறார்கள் என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும். எமது மக்களின் நலனில் அக்கறை கொண்டு இக்குழுவினர் சென்ற போது நடத்தப்பட்ட இத்தாக்குதலை, ஈ.பி.டி.பி.யும், தமிழ் மக்களும் வன்மையாகக் கண்டிக்கிறார்கள். சர்வதேச சமூகம் புலிகள் மீதான அணுகுமுறையை தீவிரப்படுத்தும் அதேவேளை, தமிழ் மக்களின் அவலம் தீர தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இத்தாக்குதலானது தமிழ் மக்களின் நலன் சார்ந்த விடயங்களைப் பின் தள்ளுவதாக அமைந்து விடக் கூடாது என்றும் ஈ.பி.டி.பி. சர்வதேச சமூகத்திடம் கேட்டுக் கொள்வதாகவும் தெரிவித்துக்கொள்கிறது.

# தமிழ் இளைஞர்கள் மீதான குற்றப் பத்திரங்கள் விரைவில் தாக்கலாகும்

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்து வந்த தமிழ் இளைஞர்கள் மீதான வழக்குகள் விரைவில் தொடரப்படவிருக்கின்றன என்று நீதி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தம்மீது வழக்குத் தொடர வேண்டும், இல்லையேல் விடுதலை செய்ய வேண்டுமெனக் கோரி 27 தமிழ் இளைஞர்கள் 5 நாட்களாக உண்ணாவிரதமிருந்தனர். நீதி அமைச்சர் டிலான் பெரேரா அளித்த உறுதி மொழியையடுத்து இவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். மகசின் சிறைச் சாலையில் 63 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களில் 14 பேர் தண்டனை பெற்ற கைதிகள் என்றும் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஏனைய 49 பேரில் சிலர் மீதான வழக்குகள் ஏற்கனவே தொடரப்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார். இவர்கள் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருப்பதால் அவர்களை அரசியல் கைதிகள் என்று அழைப்பது தவறு என்றும் அவர் சொன்னார். இக் கைதிகள் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் புலனாய்வுப் பிரிவினரே, அவர்கள் மீதான குற்றப் பத்திரங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார். மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்களில் 6 பேர் பெண்கள் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் பெரும்பாலானோர் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிய வருகின்றது.

மகசின் சிறைச்சாலையில் நீதி விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்கள் மீதான குற்றப்பத்திரங்கள் விரைவில் தாக்கல் செய்யப்படுமென்றும் நீதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

# பிரான்சிஸ் பேக்கன்

## (கி.பி. 1561 ~ 1626)

**தலைசிறந்த** மெய்விளக்க வல்லுநர் எனப் போற்றப்படுபவர் ஆங்கிலேய அறிஞர் பிரான்சிஸ் பேக்கன் ஆவார். பல ஆண்டுகள் முன்னணி அரசியல் தலைவராகத் திகழ்ந்த அவர், தம் அரசியல் வாழ்வின் முன்னேற்றத்திற்காகவே தமது பெரும்பான்மையான காலத்தையும், ஆற்றலையும் செலவிட்டார் என்ற போதிலும், அவருடைய மெய்விளக்க எழுத்துக்களுக்காகவே அவர் இந்த பகுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். அவர் தமது நூல்களில் புதியதொரு யுகத்திற்குக் கட்டியங் கூறினார். அறிவியலும் தொழிநுட்பமும் இந்த உலகத்தை அடியோடு உருமாற்றிவிடும் என்பதை உணர்ந்து கொண்ட முதலாவது பெருந்தத்துவஞானி அவர்தான். அறிவியல் ஆராய்ச்சிகளைத் தீவிரமாக ஆதரித்த முதலாவது தத்துவஞானியும் இவரே.

நாடாளுமன்றத்தில் பேக்கன் மிகத் துணிவோடு எதிர்த்ததே இதற்கு முக்கிய காரணம். பேக்கன் அளவுக்கு மீறிய ஆடம்பர வாழ்க்கை நடத்தினார். அதனாலேயே அவர் எப்போதும் கடனில் உழன்றார். (ஒருமுறை அவர் கடனுக்காகக் கைது செய்யப்பட்டார்) அவருடைய சுதந்திரமான போக்குக்கு அவரது பொருளாதார நிலை இடம் கொடுக்கவில்லை.

அப்போது அரசியல் புகழார்வம் கொண்ட இளைஞனாகவும், செல்வாக்குப் பெற்றவராகவும், விளங்கிய கோமகனுடன் பேக்கன் நட்புக் கொண்டு, அவருக்கு ஆலோசகரானார். இதற்குக் கைம்மாறாக, அந்தக் கோமகன் பேக்கனின் நெருங்கிய நண்பராகவும், தாராளப் புரவலராகவும் ஆனார். ஆனால், கோமகன் அளவுக்கு மீறிய

## உலகை வியக்க வைத்தவர்கள்

எலிசபெத் அரசியின் உயர் அதிகாரி ஒருவரின் இளைய மகனாக 1561 ஆம் ஆண்டில் லண்டனில் பேக்கன் பிறந்தார். அவர் தம் 13 ஆம் வயதில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டிரினிட்டி கல்லூரியில் சேர்ந்தார். ஆனால் மூன்றாண்டுகள் பயின்ற பிறகு பட்டம் பெறாமலே வெளியேறினார். 16ஆம் வயதில் பாரிஸில் பிரிட்டிஷ் தூதரகத்தில் ஓர் ஊழியராகச் சேர்ந்து சிறிது காலம் பணியாற்றினார். ஆனால் தீவினைப் பயனாக அவரது 18 ஆம் வயதில் அவருடைய தந்தை திடீரென காலமானார். சொத்தோ, பணமோ இன்றி பேக்கன் ஏழ்மையில் வீழ்ந்தார். அவர் எப்படியோ சட்டம் பயின்று தம் 21 ஆம் வயதில் வழக்குரைஞரானார்.

பேக்கன் வழக்குரைஞரான உடனேயே அவரது அரசியல் வாழ்வு தொடங்கியது. அவரது 28 ஆம் வயதில் இங்கிலாந்தில் மக்கள் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு உயர் வட்டாரங்களில் நெருங்கிய உறவினர்களும், நண்பர்களும் இருந்தனர். அவரும் மதிநுட்பம் வாய்ந்தவராக விளங்கினார். எனினும், எலிசபெத் அரசி அவரை உயர்ந்த பதவி எதிலும் அமர்த்தப் பிடிவாதமாக மறுத்து வந்தார். அரசி தீவிரமாக ஆதரித்த ஒரு வரி விதிப்புச் சட்ட முன்வடிவை

செருக்கினாலும், பேராசையினாலும் எலிசபெத் அரசிக்கு எதிராக ஒரு புரட்சிக்குத் திட்டமிட்டார். இதை பேக்கன் விரும்பவில்லை. "எனது பற்றுறுதி முதலில் அரசிக்கே உரியது" என்று கோமகனுக்குப் பேக்கன் எச்சரிக்கை விடுத்தார். எனினும், அந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் கோமகன் புரட்சியில் இறங்கினார். அந்தப் புரட்சி தோல்வியடைந்தது. கோமகன் மீது அரசத் துரோகக் குற்றம் சாட்டியதில் பேக்கன் தீவிரப்பங்கு கொண்டார். இறுதியில், கோமகன் சிரச்சேதம் செய்யப்பட்டார். இந்த விவகாரம் முழுவதும் பலருக்கு பேக்கனிடம் வெறுப்பை உண்டாக்கியது.

எலிசபெத் அரசி 1603 ஆம் ஆண்டில் காலமானார். அவருக்குப்பின் அரியணை ஏறிய முதலாம் ஜேம்ஸ் மன்னருக்கு பேக்கன் ஓர் ஆலோசகரானார். பேக்கனின் ஆலோசனையை ஜேம்ஸ் எப்போதும் ஏற்றுக் கொண்டதில்லையெனினும், அவர் பேக்கனைப் பெரிதும் போற்றினார். அவரது ஆட்சிக் காலத்தில் பேக்கன் அரசியலில் படிப்படியாக உயர் பதவிகளைப் பெற்று வந்தார். 1607 ஆம் ஆண்டில் பேக்கன் அரசு முதன்மை வழக்குரைஞர் ஆனார். 1613 ஆம் ஆண்டில் அரசுத் தலைமை வழக்குரைஞராக நியமனம் பெற்றார். இந்தப் பதவி ஏறத்தாழ அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி பதவிக்கு இணையானது எனலாம். அதே ஆண்டில் பேக்கன் ஓர் இளங்கோமானாக நியமிக்கப்பட்டார். 1621 ஆம் ஆண்டில் அவர் இளங்கோவரையர் பட்டத்தையும் பெற்றார்.



ஆனால், இதன் பின்பு அவப்பேறு அவரைத் தாக்கியது. அவர் நீதிபதியாக பணியாற்றியபோது, தம் முன்பு வழக்காடியவர்களிடமிருந்து பல "கொடைப் பொருள்களைப் பெற்றுக் கொண்டிருந்தார். அவ்வாறு பெற்றுக் கொள்வது அவர் காலத்தில் பெரு வழக்கமாக இருந்தபோதிலும், அது ஒரு சட்டவிரோதச் செயலேயாகும். நாடாளுமன்றத்திலிருந்த அவரை அரசியல் எதிரிகள், பதவியிலிருந்து நீக்குவதற்கு இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டனர். பேக்கன் குற்றத்தை ஒப்புக் கொண்டார். பேக்கனுக்கு லண்டன் கோபுரச் சிறையில் சிறைத் தண்டனையும், கடும் பணத் தண்டமும் விதிக்கப்பட்டன. அத்துடன், அரசப் பதவி எதனையும் வகிப்பதிலிருந்து அவருக்கு நிரந்தரமாகத் தடை விதிக்கப்பட்டது. விரைவிலேயே அவரைச் சிறையிலிருந்து அரசர் விடுவித்தார். அவரது பணத்தண்டமும் நீக்கப்பட்டது. ஆனாலும் பேக்கனின் அரசியல் வாழ்வு அத்துடன் முடிந்து போயிற்று.

இன்று உயர் பதவிகளிலுள்ள அரசியல்வாதிகள் எவரும் கையூட்டுப் பெற்றதற்காக அல்லது வேறு வகையில் பொது மக்களுக்குத் துரோகம் செய்ததற்காகப் பிடிபட்டதாகச் சான்றுகள் கிடைப்பதில்லை. பெரும்பாலும், அத்தகைய ஆட்கள் பிடிபடும்போது மற்றவர்கள் ஒவ்வொருவரும் அவ்வாறு மோசடி செய்வதாகக் கூக்குரலிட்டுத் தன்னைத் தற்காத்துக் கொள்ள முனைகிறார்கள். அவர்களுடைய இந்தத் தற்காப்புத் தந்திரத்தை உண்மையென எடுத்துக் கொள்வதாயின் மற்றக் கபட அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் தண்டிக்கப்பட்டாலன்றி, எந்த ஒரு கபட அரசியல்வாதியையும் தண்டிக்க முடியாது. பேக்கன் தமக்கு விதிக்கப்பட்ட தண்டனை தீர்ப்புக் குறித்து கூறிய கருத்து இன்றைய நிலைக்கு முற்றிலும் மாறாக இருப்பதைக் காண்கிறோம்.

**வியப்புக்கள் தொடரும்**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நா[illegible] சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.
*-காதில பூ கந்தசாமி-*

**வணக்கமுங்கோ!**

பொதுவாகவே நான்தான் யாருக்கும் கோல் பண்ணி தொல்லைப்படுத்திறான். வழமைக்கு மாறாக எனக்கு கோல் போட்டு புதுசா எம்.பி.யான சிரிக்கிற காந்தர் தொல்லை பண்ணுறாருங்கோ.

தற்செயலாக ஏயாபோட்டில ஆளைச் சந்திக்க கிடைச்சது. அவர் லண்டனுக்குப் போறார் எண்டதை அடிக்கடி ஒவ்வொரு வார்த்தைக்கு இடையிலையும் போட்டுத் தாக்கினார். தான் பிறகு ஆறுதலாக கதைக்க வேணுமாம் எண்டு போன் நம்பரைக் கேட்டார். நானும் குடுத்துப்போட்டு வந்தனான். பிறகு மனிசன் பண்ணின தொல்லையை நினைச்சால் ஏன்டாப்பா அந்த மனிசனுக்கு போன் நம்பரைக் கொடுத்த நான் எண்டு ரொம்ப பீல் பண்ணினனுங்கோ. தொல்லையெண்டால் அப்பிடி ஒரு தொல்லையுங்கோ. எப்படித் தொல்லை யெண்டு நான் அனுபவிச்ச தொல்லையின்ர ஒரு சோட் ரீலை உங்களுக்கும் போட்டுக் காட்டுறேனுங்கோ...

*சிறீ :-* 'லோ எப்பிடிச் சுகமாக இருக்கிறியளோ, நான் ஒவ்வொரு வாரமும் உங்கட பேப்பரைப் பார்க்கிற நான். அதில, சம்பந்தமானவரைப் பற்றி நல்லா எழுதியிருக்கிறியள்.

*கா.பூ. :-* நன்றிங்கோ. நீங்கள் உப்பிடி பாராட்டு றியல் எண்டது சம்பந்தமானவருக்குத் தெரியுமோ?

*சிறீ :-* சாச்சா....நான் ஏன் அவருக்குச் சொல்லப்போறன். அவர் யார் எனக்கு.

*கா.பூ. :-* ஏன் உப்பிடிச் சொல்லுறியள் அவர்தான் உங்களுக்குத் தலைவர்.

*சிறீ :-* தலைவரே கண்டறியாத தலை வர்...அவரை என்ர தலைவராக ஏற்றுக்கொள்ள நான் என்ன பைத்தியக்காரனோ?

*கா.பூ. :-* ஏன் அப்பிடிச் சொல்றியல். கூட்டமைப்புக்கு அவர்தானே தலைவர்.

*சிறீ :-* கூட்டமைப்புக்கு அவர்தான் தலைவர். ஆனால் எனக்கில்லை. உண்மையச் சொன்னால் என்ன அவருக்கு நான் எம்.பி.யானதே பிடிக்கயில்லை தெரியுமோ.

*கா.பூ. :-* தெரியாதுதான்...ஆனால் தேர்தல் மூட்டம் நீங்கள் திருகோணமலையில ஒரு வேட்பாளராக நியமிக்கப்பட்டபோது வாக்குக் கேட்டுப் போன சம்பந்த மானவர் சனங்களிட்ட சொன்னது இன்னும் ஞாபகத்தில் இருக்குது.

*சிறீ :-* என்ன விஷயம் சொல்லுங்கோவன்.

*கா.பூ. :-* நீங்கள் வேற்று மண் காரராம். அவர்தான் திருமலை மண் காரராம். எண்ட படியாலை அந்நி யர்களை நிராகரிச்சு தனக்குத்தான் வாக்குப் போடவேணும் எண்டு சொன்னவர். அவருக்கு அப்பவே நீங்கள் எம்.பி.யாகிறது பிடிக்கயில்லை.

*சிறீ :-* உதுதான்...உதுதான் இப்ப பிரச்சினையே. அப்ப...அப்புடிச் சொன்ன சம்பந்தமானவர் இப்ப எப்புடி என்ற தலைவராவார்.

*கா.பூ. :-* சரி அதெல்லாம் பழைய கதை. எப்படியோ ஒருவரின்ர சாவில ஒருவருக்கு வாழ்வு எண்ட மாதிரி நீங்கள் எம்.பி.யாயிட்டியல் இப்பவும் சம்மந்தமானவரோடை என்ன பிரச்சினை.

*சிறீ :-* இஞ்ச வெளியால சொல்லிப் போடாதேங்கோ. அது அழகில்லை. சம்மந்த மானவருக்கு அவரை விட இங்கிலீஸ் தெரிஞ் சவையைக் கண்டால் பிடிக்காது எண்டது உங் களுக்குத் தெரிஞ்சிருக்கும். அதில எனக்கு அநியா யத்துக்கு கொஞ்சம் இங்கிலீஸ் புலமை இருக்கிறது. அவருக்குப் பிடிக்கயில்லை உதுதான் அடிப்படைப் பிரச்சினை. நான் எங்க அவரை விட்டு உச்சுப் போடு வனோ எண்டு மனிசன் பயப்புடுறார்.

*கா.பூ. :-* ஏன். பொன்னம்பலத்தின்ர பொடி யனுக்கும், சுரேஷுக்கும் இங்கிலீஸ் தெரியும் தானே. அவையோடை நல்லாத் தானே இருக்கிறார்.

*சிறீ :-* உண்மை தானுங்கோ. அவைக்கு இங்கிலீஸ் கொஞ்சம் தெரியும் தான். ஆனால் என்னள வுக்கு ஆக்கள் பேசமாட்டினம். அவையை சம்பந்த மானவர் சமாளிச்சுப் போடுவார். கண்டியளோ என்னிட்ட உந்த சமாளிப்புக்கேஷன் செல்லாது. இந்தியாவை நோகக் கூடாதெண்டதுக்காக 'Ball' போலை அவர் பால் எண்டால் எனக்கு போல் எண்டுதான் சொல்ல முடியும். அவருக்கு யாரையும் தாஜாபண்ணிப் பேச வேணும் எண்டதுக்காக, உச்சரிப்பை மாத்திப் போடுவார். எனக்கு உது கஷ்டம்.

*கா.பூ. :-* அப்புடியெண்டால் அவரோடை எப்புடி சேர்ந்து வேலை செய்யப் போறியல்.

*சிறீ :-* அவர் என்னத்தைக் கொத்திப் பிரட்டுறார். நானும் சேர்ந்து செய்யுறதுக்கு உண்மையில சொல்லனும் எண்டால், அவருக்கு வயசு போட்டுது. சும்மா கூட அவராலை ஒரு இடத்தில இருக்கமுடியாது, அவருடைய உடம்பு கண்டிசனும் வரவர மோசமாகிக் கொண்டு போகுது. அவரோடை சேர்ந்து என்ன செய்யச் சொல்லுறியல். அவரோடை சேர்ந்து செய்யிற தெண்டால் ஆளுக்கு ஒரு சாய்மனைக் கட்டில் வாங்கிப் போட்டு ஓய்வுதான் எடுக்கவேணும்.

*கா.பூ. :-* அப்ப எம்.பி.யாகினதை வச்சுக் கொண்டு என்னதான் செய்யப் போறியல்.

*சிறீ :-* உப்பிடிப் போலை வெளிநாடுகளுக்குப் போய் ஊர் சுற்றிப் போட்டுவருவன். உந்த சம்பந்த மானவர் மட்டும் தேர்தல் மூட்டம் குறுக்க நிக்காமல் இருந்தால் நான் பழைய எம்.பி.யாகி எத்தின ஏற்பாடுகளைச் செய்திருப்பன். அது நடக்கயில்லை எண்டதாலை இப்பதான் சந்தர்ப்பம் கிடைச்சிருக்குது. நாட்டில பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலும் படலாம் எண்டதாலை கிடைச்ச சந்தர்ப்பத்தில சில வேலை களைச் செய்து கொள்ள வேண்டியது தான். அதுதான் செய்து கொண்டிருக்கிறன்.

*கா.பூ. :-* சரி உங்கட வழக்கறிஞர் தொழில் எப்புடிப் போகுது.

*சிறீ :-* போகுது. முன்னம் மாதிரி வருமானம் இல்லை. பூசாவில புடிபட்டிருக்கிறவையை விடுவிக்கக் கோரி வழக்குகள் ஏதும் வந்தால் பார்ட் டைமாக வேலை செய்யலாம் எண்டால், அதிலையும் ராதா கிருஷ்ணன் மண்ணை அள்ளிப்போடுகிறார். அவர் இலவசமாகவே ஆக்களை விடுவிக்க வேணு மெண்டிறார். சட்டம் அது இது எண்டு சும்மா எங்கட சனத்துக்குப் பேக்காட்டி பிடிபட்ட பெடியளை விடு விக்கிறதுக்கு தலா இருபத்தி ஐயாயிரம் எண்டு வேலை கிடைச்சால் கைச்செலவுக்கு உதவும்.

*கா.பூ. :-* ஏன் டிக்கட் செலவுக்கு உதவாதோ.

*சிறீ :-* ரிக்கட் செலவு அவை தானே செய்யினம். அது ஒரு பிரச்சினை இல்லை.

*கா.பூ. :-* அவைதானே எண்டால் பிள்ளையளோ.

*சிறீ :-* அவையெண்டால் பிள்ளையளோ, பெடியல் தான்.

*கா.பூ. :-* சரி சரி விளங்குது விளங்குது. ஓசியில பதவி, ஓசியில ரிக்கட், ஓசியில செலவு, உடம்பு மட்டும் உங்கடை எண்டு போகுதெண்டு சொல்லுங்கோ.

*சிறீ :-* அப்புறம் கா.பூ. நான் ஏன் உங்களுக்கு போன் பண்ணினன் எண்டால் எண்டு ஆள் திருப்பி முதலில இருந்து ஆரம்பிக்கிறாருங்கோ. உப்பிடி மனிசன் கொஞ்சம் அலம்பிப்போட்டு கடைசியில முத லில இருந்து ஆரம்பிக்கிறாருங்கோ.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(01.03.2007 தொடங்கி 07.03.2007 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

கும்பம் - சூரியன், இராகு, புதன், மீனம் - வெள்ளி
கர்க்கடகம் - சனி, சிங்கம் - கேது, விருச்சிகம் - வியாழன், மகரம் - செவ்வாய்
சந்திரன் - கர்க்கடகம், சிம்மம், கன்னி இராசிகளில் இந்தவாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்:-** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் விருத்தி, பண இலாபம், மனக்குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை, இனசன நன்மை, குடும்பப் பொறுப்பு, உத்தியோகக்கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம். அதிர்ஷ்ட நாள் - புதன், அதிர்ஷ்ட இலக்கம் - 5.

**இடபம்:-** (கார்த்திகை பின் முக்கால்) ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை, தொழில் மந்தம், செலவதிகம், மனக்கலக்கம், பெரியோர் உதவி, தேகசுகக்கஷ்டம், குடும்ப நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள் வியாபாரிகள் மத்திம இலாபம். அதிர்ஷ்ட நாள் - வியாழன், அதிர்ஷ்ட இலக்கம் - 4.

**மிதுனம்:-** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) தொழில் அலைச்சல், வீண் செலவு, மனக்குறை, தூர இடப் பயணம், உயர்ந்த நட்பு, குடும்பக் கவலை, உறவினர் உபத்திரவம், உத்தியோகப் பாரம், மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம். அதிர்ஷ்ட நாள் - செவ்வாய், அதிர்ஷ்ட இலக்கம் - 1.

**கர்க்கடகம்:-** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழில் உயர்ச்சி, புதிய முயற்சி, பணவரவு, வெளியிடப் பயணம், மனப்பயம், இனசன நன்மை, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகச் சிக்கல், பதவி மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம். அதிர்ஷ்ட நாள் - திங்கள், அதிர்ஷ்ட இலக்கம் - 7.

**சிம்மம்:-** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் பகை, மனச்சோர்வு, செலவு மிகுதி, அந்நியர் உதவி, தேகசுகக் கஷ்டம், இனசன மகிழ்ச்சி, குடும்பத் துயர், உத்தியோகத் தொல்லை, மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம். அதிர்ஷ்ட நாள் - வெள்ளி, அதிர்ஷ்ட இலக்கம் - 3.

**கன்னி:-** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் நன்மை, காரியானுகூலம், பொருள்வரவு, வெளியிட வாழ்க்கை, செலவதிகம், அந்நியர் நட்பு, குடும்ப நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோகக் கவலை, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம். அதிர்ஷ்ட நாள் - வியாழன், அதிர்ஷ்ட இலக்கம் - 5.

**துலாம்:-** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் சிறப்பு, பணவரவு, காரிய சித்தி, பெரியோர் உதவி, தூர இடப் பயணம், செலவதிகம், இனசனப்பகை, குடும்பக் கஷ்டம், உத்தியோக மாற்றம், பதவிச் சிக்கல், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம். அதிர்ஷ்ட நாள் - செவ்வாய், அதிர்ஷ்ட இலக்கம் - 4.

**விருச்சிகம்:-** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில் மந்தம், வீண் செலவு, புதிய முயற்சி, அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி, தேகசுகநன்மை, குடும்ப மகிழ்ச்சி, உறவினர் நன்மை, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள் வியாபாரிகள் இலாபம். அதிர்ஷ்ட நாள் - புதன், அதிர்ஷ்ட இலக்கம் - 3.

**தனு:-** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் சிறப்பு, பணவரவு, மனமகிழ்ச்சி, உயர்ந்த நிலை, பெரியோர் சகாயம், குடும்ப நன்மை, சுபகாரியச் சித்தி, உத்தியோக மாற்றம், மனக்குறை நீங்கும், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம். அதிர்ஷ்ட நாள் - வெள்ளி, அதிர்ஷ்ட இலக்கம் - 6.


**மகரம்:-** (உத்தராடத்து பின் முக்கால்) திருவோணம், அவிட்டத்து முன்னரை. தொழில் உயர்ச்சி, காரியானுகூலம், பெரியோர் உதவி, பணக்கஷ்டம், இனசன நன்மை, குடும்பப் பாரம், செலவு மிகுதி, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள் வியாபாரிகள் மத்திம இலாபம். அதிர்ஷ்ட நாள் - திங்கள், அதிர்ஷ்ட இலக்கம் - 7.

**கும்பம்:-** (அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) தொழில் மந்தம், பணச் செலவு, பெரியோர் உதவி, மனக்கலக்கம், இனசன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை, குடும்பக் கஷ்டம், உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள் வியாபாரிகள் இலாபம். அதிர்ஷ்ட நாள் - புதன், அதிர்ஷ்ட இலக்கம் - 3.

**மீனம்:-** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் கலக்கம், பணச்செலவு, அந்நியர் நட்பு, தூர இடப் பயணம், தேகசுகக் குறைவு, உறவினர் உபத்திரவம், குடும்பக் கவலை, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம். அதிர்ஷ்ட நாள் - திங்கள், அதிர்ஷ்ட இலக்கம் - 1.

Regd. as a News Paper at the G.P.O.(QD/66/NEWS/2007)





# அனைவருக்கும் ஓய்வூதியம்

முதுமை அடையும் மக்களின்
எதிர்காலத்தை வளமாக்குவதற்காக
59 ஆவது சுதந்திர தினத்தைக்
கொண்டாடிய இச் சந்தர்ப்பத்தில்
அணி திரள்வோமாக.

18 வயதிற்கும் 59 வயதிற்கும் இடைப்பட்ட உங்களுக்கு

**சஹன, திலின, இசுரு
சரண, சுரெக்கும,
தனலக்ஷ்மி**

ஓய்வூதியத் திட்டங்கள்
எங்களிடமிருந்து.

சரத் கீர்த்திரத்ன
தலைவர்,
இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை
150 ஏ, நாவல வீதி, நுகேகொடை.
தொலைபேசி:- 001- 2823614, 2852958.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு